# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 20
பக்கங்கள் - 28 + 4

சுடர் 32 | கதிர் 48 | வள்ளுவர் ஆண்டு 2047 | மார்கழி 29, வெள்ளிக்கிழமை 13.01.2017


# சுயாதீன உள்நாட்டு பொறிமுறைதான் அரசின் முடிவு




## லண்டனில் தெரிவித்தார் அயலுறவு அமைச்சர் மங்கள

லண்டன், ஜனவரி 13

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டிய பொறுப்பு இலங்கைக்கு உள்ளது. எனினும் தேசிய நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக் கூறல் தொடர்பில் அனைத்துப் பங்குதாரர் நாடுகளுடனும் கலந்தாலோசித்து நம்பகமான மற்றும் சுயாதீனமான உள்நாட்டுப் பொறிமுறைதான் உருவாக்கப்படும்.

இவ்வாறு லண்டனில் தெரிவித்தார் அயலுறவு அமைச்சர் மங்கள சமரவீர.

ஜெனிவாத் தீர்மானத்தில் முன்மொழியப்பட்ட நீதிப் பொறிமுறைக்குள் வெளிநாட்டு நீதிபதிகளை உள்ளடக்குவதில் அரசுக்குள் கருத்து முரண்பாடுகள் உள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.

பிரிட்டனுக்கு உத்தியோகபூர்வப் பயணம் மேற்கொண்டுள்ள அயலுறவு அமைச் >> 25

# அடுத்த வாரம் கைதாவேன்

## கம்மன்பில ஆருடம்



கொழும்பு, ஜன. 13

நீதிமன்ற உத்தரவை மீறி ஆர்ப்பாட்டம் செய்த குற்றச்சாட்டில் அடுத்த வாரம் என்னைக் கைது செய்யவுள்ளார்கள்.

இவ்வாறு மகிந்த அணியின் நாடாளுமன்ற உறுப்பினர் >> 25

புதிய அரசமைப்பால்

# மைத்திரி அணிக்குள் முரண்பாடு

கொழும்பு, ஜன. 13

புதிய அரசமைப்புத் தொடர்பில் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள் - மைத்திரி அணியினரிடையே கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டுள்ளதாக அறியமுடிகின்றது. >> 25

# பரிந்துரைகளை செயற்படுத்தல் மிக அவசியம்

## *அரசிடம் வலியுறுத்துகிறது உலகத் தமிழர் பேரவை*

கொழும்பு, ஜன. 13

போர்க்குற்றம் தொடர்பில் கலப்புப் பொறிமுறைக்குப் பரிந்துரைத்துள்ள நல்லிணக்க ஆலோசனைச் செயலணிக் குழுவின் அறிக்கையின் பரிந்துரை >> 25

# குப்பைக்குள் வீசும் அறிக்கை

## சம்பிக்க சீற்றம்

கொழும்பு, ஜன. 13

போர்க்குற்ற விசாரணைக் குக் கலப்பு நீதிமன்றப் பொறி முறையைப் பரிந்துரைத்துள்ள நல்லிணக்கப் பொறி முறைக் >> 25

# ஜனாதிபதி முறைமை ஒருபோதும் ஒழியாது

## அமைச்சர் எஸ்.பி. மீண்டும் திட்டவட்டம்

கொழும்பு, ஜன. 13

ஜனாதிபதி முறைமை ஒழிக்கப்படும் என்று, சோபித தேரரின் சமாதிக்கு முன்னால் ஜனாதிபதி மைத்திரிபால சத்தியம் >> 25

வடக்கு அரசிடம் சந்திரசிறி பறித்த

# 110 மில்லியன் ரூபா மீளவும் கிடைத்தது

யாழ்ப்பாணம், ஜன. 13

வடக்கு மாகாண சபைத் தேர்தலுக்குச் சில மாதங்களுக்கு முன்னர், மாகாண அமைச்சுக்களிடமிருந்து அப்போதைய ஆளுநர் மேஜர் ஜெனரல் சந்திரசிறியினால் சட்ட முரணாகப் பெற்றுக் கொள்ளப்பட்ட 110 மில்லியன் ரூபா நிதி, வடக்கு மாகாண சபைக்கு மீளக் கையளிக்கப்பட்டுள்ளது.

2013 ஆம் ஆண்டு வடக்கு >> 25

# வரப்போவது சந்திரிகாவின் தீர்வுத் திட்டம் இல்லை

## சொல்கிறார் வழிநடத்தல் குழுவின் உறுப்பினர் மனோ

யாழ்ப்பாணம், ஜன. 13

புதிய அரசமைப்பில் தான் கொண்டு வந்த தீர்வுத் திட்டமே வரப்போவதாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க தெரிவித்திருந்த நிலையில், 'அந்தத் தீர்வுத் திட்டம் வந்தால் சந்தோசம். ஆனால் உண்மை அதுவல்ல' என அமைச்சரும், வழிநடத்தல் குழு வின் உறுப்பினருமான அமைச்சர் மனோ >> 23 ஆ

# தமிழரே ஒப்பாரி வைப்பர்

யாழ்ப்பாணம், ஜன. 13

புதிய அரசமைப்புத் தொடர்பில் தமிழ் மக்கள்தான் ஒப்பாரி வைக்கவேண்டும் என்று, அமைச்சரும் புதிய அரசமைப்பு உருவாக்கும் வழிநடத்தல் குழுவின் உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்தார்.

அமைச்சர் மனோ கணேசன் தனது >> 25



# 'மவுசு' குறையாத மண் பானைகள்

யாழ்ப்பாணம், ஜன. 13

புதுவருடப் பிறப்பு நாளை கொண்டாடப் படவுள்ள நிலையில், பொங்கல்பானைகளின் விற்பனை சூடு பிடித்துள்ளது. அலுமினியப் பானைகளின் வரவு சந்தைகளை ஆக்கிரமித்திருந்தாலும், >> 25






# ஊறணியில் மீன்பிடிக்க நாளை முதல் அனுமதி

## நல்லிணக்க வாரத்தை முன்னிட்டு

யாழ்ப்பாணம், ஜன. 13

நல்லிணக்க வாரத்தை முன்னிட்டு, வலி.வடக்கிலுள்ள ஊறணி மீன்பிடிப் பிரதேசம் மக்கள் பாவனைக்குக் கையளிக்கப்படவுள்ளது. நாளை சனிக்கிழமை தொடக் >> 25

# இலங்கைக்கு விடிவு காலம்

## *நிதியமைச்சர் மகிழ்ச்சி*



கொழும்பு, ஜன. 13

இலங்கை அனுபவித்து வந்த பொருளாதார நெருக்கடிகளுக்கு விடிவு காலம் கிடைத்துள்ளது. >> 25

முச்சந்தி முரளி



இதைத்தான் போற இடமெல்லாம் உங்கட தலைவர் சொல்லுறார் தானே. அதை நீங்க லண்டன்ல போயா சொல்லணும்...




குடும்பத்தவர் அனைவரையும் சேமித்து சுபீட்சம் பெற DFCC வங்கி அழைக்கின்றது!

ரூபா.25,000 வைப்பிலிட்டு ரூபா.1,250 முதல் ரூபா.2,500 வரை வெகுமதிகளை பெற்றுக் கொள்ளுங்கள்.

இச்சலுகை 2017 ஜனவரி 31 வரை மட்டுமே. நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

24 மணிநேர அழைப்பு மையம் 0112 350000
www.dfcc.lk

DFCC வங்கி
உங்களா வளர்ச்சிக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 34 அரச நிறுவனங்கள் வெளிநாடுகளுக்கு 2017 க்குள் விற்பனை

## மகிந்தானந்த தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 13

ஆண்டு இறுதிக்குள் 34 அரச நிறுவனங்கள் வெளிநாடுகளுக்கு விற்கப்படும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அழுத்கமகே தெரி வித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

ஐக்கிய தேசியக் கட்சி கட்டம் கட்டமாக அரச சொத்துக்களை வெளிநாடுகளுக்கு விற்பனை செய்யும் திட்டத்தை நடைமுறைப்படுத்தத் தொடங்கியுள்ளது. முதல் கட்டமாக அம்பாந்தோட்டைத் துறைமுகமும் 15 ஆயிரம் ஏக்கர் காணியும் சீனாவுக்கு விற்கப்படுகின்றது. அதனைத் தொடர்ந்து திருகோணமலையும் அமெரிக்காவிடம் ஒப்படைக்கப்படவுள்ளது.

இந்த வருட இறுதிக்குள் 34 அரச நிறுவனங்கள் இவ் வாறு வெளிநாடுகளுக்கு விற்கப்படவுள்ளன. அரசோ அதை மறுத்து குத்தகை என்றும் - கூட்டு அபிவிருத்தி நடவடிக்கை என்றும் - கூறுகின்றது. அரசு பொய் கூறி மக்களை ஏமாற்றி இவ்வாறு மக்களின் சொத்துக்களை விற்கத் தொடங்கியுள்ளது. இதற்காக மக்கள் இவர்களுக்கு ஆணை வழங்கவில்லை. நல்லாட்சி நடத்துவதற்காகவே ஆணை வழங்கினர். ஏன் இந்த அரசை உருவாக்கினோம் என்று மக்கள் இப்போது சிந்திக்கத் தொடங்கியுள்ளனர். இந்த அரசின் மக்கள் விரோதச் செயற்பாடுகளுக்கு நாம் விரைவில் முற்றுப் புள்ளி வைப்போம்.

இந்த ஆட்சியைத் தொடர விட்டால் அது நாட்டு மக்களுக்கு நாம் செய்யும் பெரிய துரோக மாகும். இதை இப்போதே கவிழ்ப்பது தான் நாட்டுக்குச் செய்யும் சேவையாகும். இந்தச் சேவையை நாம் செய்வோம் -என்றார். (த-5)

# ஜனநாயக வழியில்தான் ஆட்சிக் கவிழ்ப்பு

## பிரசன்ன ரணதுங்க தெரிவிப்பு



கொழும்பு, ஜன. 13

மகிந்த ராஜபக்ச கூறுவது போல் பின்னால் இருந்து கத்தியால் குத்த நாங்கள் தயாரில்லை. மக்களுடன் இணைந்து வீதியில் இறங்கி ஜனநாயகப் பயணத்தின் மூலம் மைத்திரி-ரணில் அரசைக் கவிழ்ப்போம்.

இவ்வாறு கூட்டு எதிர்க் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

2015ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் இது தான் நடந்தது எனவும், கீழ் மட்டத்தில் இருக்கும் கட்சியினரை இதுவரை வென் றெடுக்காத ஜனாதிபதி சிறிசேனவை ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்தினால், ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிராக மோதும் திறனை சிறிலங்கா சுதந்திரக் கட்சி இழக்கும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

மினுவாங்கொடையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் தெரிவித்ததாவது:

மூன்று வருடங்களுக்குப் பின்னர் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் யார் என்பதைத் தீர்மானிக்க இன்னும் காலம் இருக்கின்றது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை 2020ஆம் ஆண்டு மீண்டும் ஜனாதிபதித் தேர்தலில் நிறுத்துவது நாட்டின் ஆட்சியை மீண்டும் ஒரு முறை ஐக்கிய தேசியக் கட்சியிடம் கொடுப்பதாகும்.

2017ஆம் ஆண்டு முக்கியமான ஆண்டாகும். நாட்டு வளங்களை விற்று, பட்டப்பகலில் கொள்ளையிடும் இந்த அரசை வீட்டுக்கு அனுப்பும் வருடம் இந்த வருடமாகும். இந்த ஆண்டு அரசைக் கவிழ்க்கப் போவதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த புது வருடம் ஆரம்பிக்கும்போது கூறியிருந்தார்.

தற்போதைய அரசை ஆட்சியில் இருந்து அகற்றும் பலமிக்க ஒரே தலைவர் மகிந்த என்பது அனைவரும் அறிந்ததே.

எப்படி அரசைக் கவிழ்ப்பது எனப் பலரும் கேட்கின்றனர். அதனை நாங்கள் சரியான நேரத்தில் செய்து காட்டுவோம்.

மைத்திரி-ரணில் அரசை வீட்டுக்கு அனுப்பும் போராட்டத்தை எதிர் வரும் 27ஆம் திகதி நுகேகொடையில் மகிந்த தலைமையில் ஆரம்பிப் போம். அரசைக் கவிழ்ப்பது மாத்திரமல்ல மகிந்த தலைமையில் மக்களுக்குச் சார்பான அரசை அமைப் போம்-என்றார். (த)

# வறட்சியால் கிளிநொச்சியில் 10,000 ஏக்கர் வயல்கள் பாதிப்பு

கிளிநொச்சி, ஜன. 13

வறட்சி காரணமாக, கிளிநொச்சி மாவட்டத்தில் 10 ஆயிரம் ஏக்கர் நெல் வயல்கள் பாதிக்கப்பட்டுள்ளன என்று கிளிநொச்சி மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர் வே.ஆயகுலன் தெரி வித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

கிளிநொச்சி மாவட்டம் வறட்சி காரணமாக பாதிப்பை எதிர் கொண்டுள்ளது. மாவட்டத்தின் சில பகுதிகளில் குடி தண்ணீர்ப் பிரச்சினை தோன்றியுள்ளது. காலபோக நெற் செய்கையும் நீர் இன்றி அழிவடைந்து எரிந்து காணப்படுகின்றது.

விவசாயிகள் பெரும் நட்டத்தை எதிர்கொண்டுள்ளனர். தொடர்ச்சியாக மழை இல்லாமையும், இரணைமடுக் குள வேலை காரணமாக நீரை சேமித்து வைக்க முடியாத நிலையுமே அழிவுக்கு காரணமாகியுள்ளன.

மாவட்டத்தில் உள்ள அனைத்து கமநல சேவை திணைக்களம் ஊடாக அழிவுகள் தொடர்பாக தகவல்கள் சேகரிக்கப்பட்டுள்ளன. இதுவரை 10 ஆயிரம் ஏக்கர் பாதிக்கப்பட்டுள்ளன என்று பதிவுகள் பெறப்பட்டுள்ளன. அழிவுகள் பகுதியளவிலானதா அல்லது முழுமையானதா என்பவை தொடர்பாகவும் பதிவுகள் இடம்பெறுகின்றன. எவராவது தமது பயிர்கள் பாதிக்கப்பட்டு பதிவு செய்யாது இருப்பின் கமநல சேவைத் திணைக்களம் ஊடாகப் பதிவு செய்ய முடியும் - என்றார். (ற-5,6)

கம்மன்பிலவின் கோரிக்கை

# எம்.பிக்கள் பிணையில் வர சட்ட ஏற்பாடு வேண்டுமாம்

கொழும்பு, ஜன. 13

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குப் பிணை வழங்குவதற்கான சட்ட ஏற்பாடுகளைச் செய்து தருமாறு தலைமை நீதியரசரிடம் கோரிக்கை விடுக்கவுள்ளதாக மகிந்த அணியின் நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்சவை வெலிக்கடைச் சிறைச்சாலைக்குச் சென்று பார்வையிட்ட பின்னர் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் விளக்கமறியலுக்கு வந்ததும் உடனடியாகப் பிணைபெற்று வீட்டுக்குச் செல்கின்றார். இன்னுமொரு உறுப்பினர் 14 நாள்களுக்கு விளக்க மறியலில் வைக்கப்படுகின்றார். சில உறுப்பினர்கள் 50 நாள்களுக்கு விளக்கமறியலில் வைக்கப்படுகின்றனர்.

சரியான சட்ட ஏற்பாடுகள் இல்லாத காரணத்தால்தான் இவ்வாறாக நீதிவானின் அடிப்படையில் பிணை வழங்குவது தீர்மானிக்கப்படுகின்றது. இந்த விடயத்தில் உள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்யுமாறு பொது எதிர்க்கட்சி என்ற அடிப்படையில் தலைமை நீதியரசரிடம் தாம் கோரிக்கை விடுக்கவுள்ளதாக உதய கம்மன்பில தெரிவித்தார். (த-5)

# அரசு திணிக்கும் வீட்டை ஏற்கும் நிலையில் மக்கள்

## கிளிநொச்சி மாவட்ட பிரசைகள் குழுச் செயலாளர் தெரிவிப்பு

கிளிநொச்சி, ஜன. 13

மீள்குடியேற்ற அமைச்சால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள பொருத்து வீடுகள் எமது பண்பாட்டுச் சூழலுக்கு ஒத்துவராத போதிலும் அதனை ஏற்பதற்கு மக்கள் முன்வந்துள்ளனர். அவற்றைப் பெற்றுக்கொள்வதற்கு விண்ணப்பித்திருக்கிறார்கள்.

இவ்வாறு கிளிநொச்சி மாவட்ட பிரசைகள் குழுவின் செயலாளர் எஸ்.ஜீவநாயகம் தெரிவித்தார்.

கிளிநொச்சி ஆனந்தபுரத்தில் மாதிரி பொருத்துவீடுகள் அமைக்கும் பணிகள் முன்னெடுக்கப்படும் என அமைச்சு அறிவித்துள்ளது. அது தொடர்பாக தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

அரசின் பொருத்துவீடுகள் கிளிநொச்சி மாவட்டத்துக்கு தேவையில்லை என கடந்தமாதம் மாவட்ட அபிவிருத்திக் குழுக்கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அமைச்சு அதற்கான விண்ணப்பங்களை பகிரங்கமாக கோரியுள்ளது, மக்களும் விண்ணப்பித்திருக்கிறார்கள்.

பாதிக்கப்பட்ட மக்களைப் பொறுத்தவரையில் இப்போது இருக்கும் வீடற்ற நிலையில் இதையாவது பெற்றுக்கொள்வோமே என நினைக்கிறார்கள். கூறப் போனால் அரசு திணித்ததை மக்கள் ஏற்றுக்கொண்டார்கள்.

பொருத்துவீடுகளை ஆட்சேபிக்கும் அரசியல்வாதிகள் முன்னதாகவே வெளிநாடுகளின் உதவிகளைப் பெற்று, உடனடியாக மக்களுக்கான வீடுகளை அமைத்துக் கொடுப்பதற்கு முன்வந்திருக்கவேண்டும்.

இந்திய வீட்டுத்திட்டம் முடிவடைந்து, ஐரோப்பிய ஒன்றியத்தின் ஆயிரம் வீடுகள் அமைக்கும் திட்டம் இப்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இந்த இருதிட்டங்களிலும் உள்வாங்கப்படாத மக்கள் குறிப்பாக போருக்குப் பின்னர் திருமணம் செய்தவர்களே அதிகமாக பொருத்து வீடுகளுக்கு விண்ணப்பித்துள்ளனர். பொருத்து வீடுகளில் காணப்படும் தளபாடங்களாலும் மக்கள்பெரிதும் கவரப்பட்டுள்ளனர்.

இந்த வீடுகளை அமைப்பதில் தீவிரம் காட்டிவரும் அரசும், மீள்குடியேற்ற அமைச்சும் எதிர்காலத்தில் இந்த வீடுகள் மீதான முழுப் பொறுப்புக்கூறலையும் ஏற்றுக்கொள்ளவேண்டும் - என்றார்.

மீள்குடியேற்ற அமைச்சினால் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் மாதிரி பொருத்து வீடுகள் அமைக்கப்படுவதற்கான ஆரம்பவேலைகள் முன்னெடுக்கப் படவுள்ளன என்று அறிவிக்கப் பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து பொருத்து வீடுகளுக்கு சுமார் மூவாயிரத்து 10 குடும்பங்கள் விண்ணப் பித்துள்ளன.

கிளிநொச்சியில் கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட ஆனந்தபுரம் பகுதியில் மக்கள் பார்வைக்காக மாதிரிவீடு அமைக்கப்படவுள்ளது என்று அமைச்சு அறிவித்துள்ளது. (ற-ய)


# உள்நாட்டு அரிசி விலை குறைப்பு

கொழும்பு, ஜன. 13

உள்நாட்டு அரிசியின் விலை ஒரு கிலோவுக்கு 8 ரூபாவால் குறைவடைந்துள்ளதாக அரிசி இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அரிசி இறக்குமதிக்கு அரசு அனுமதி வழங்கியதைத் தொடர்ந்து, உள்நாட்டு அரிசியின் விலை குறைவடைந்துள்ளதாகச் சங்கத்தின் செயலாளர் ஹேமக பெர்னாண்டோ கூறினார்.

அரிசி மீதான இறக்குமதி வரியை 65 ரூபாவால் குறைப்பதற்கு அரசு கடந்த 6 ஆம் திகதி நடவடிக்கை எடுத்திருந்தது. இதனையடுத்து அரிசி இறக்குமதி வரியான 15 ரூபாவை மாத்திரம் அறவிடுவதற்கு அரசு நடவடிக்கை எடுத்ததுடன், தனியார் வர்த்தகர்களுக்கும் அரிசியை இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்கியிருந்தது. (த)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்துச் சிறுவனுக்கு நெதர்லாந்தில் நடந்த பரிதாபம்



ஆம்ஸ்டர்டாம், ஜன. 13
நெதர்லாந்தில் இயர்லன் என்ற நகரில் வசித்து வந்த தருக்சன் செல்வம் என்ற 15 வயதுடைய யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சிறுவன், தவறான முடிவெடுத்து உயிரை மாய்த்துக்கொண்ட சம்பவம் அங்கு பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

சக மாணவர்களின் துன்புறுத்தல் காரணமாக மனமுடைந்து தருக்சன் தவறான முடிவெடுத்தார் என்று அந்நாட்டு செய்திகள் தெரிவிக்கின்றன.

சகமாணவர்கள், சமூகவலைத்தளங்களில் குறித்த சிறுவனின் புகைப்படத்தை பதிவேற்றம் செய்து தகாத வார்த்தைகளால் எழுதியுள்ளனர். மேலும் பலர் போலிப் பெயரில் குறித்த புகைப்படங்களுக்கு தகாத வார்த்தைகளைப் பயன்படுத்தி பதிவேற்றம் செய்துள்ளனர்.

கிறிஸ்மஸ் விடுமுறை முடிந்த பின்னரும் பாடசாலைக்கு திரும்ப மனமில்லாமல் இருந்துள்ள தருக்சன் கடிதமொன்றை எழுதி வைத்துவிட்டு உயிரை மாய்த்துக் கொண்டான். ஏழு கிழமைக்கு முன்னரும், தருக்சன் ஏற்கனவே ஒரு தடவை உயிரை மாய்த்துக் கொள்ள முயன்றான் என்று குடும்பத்தினர் தெரிவித்தனர்.

இது தொடர்பாக பொலிஸில் முறைப்பாடு செய்தும் பொலிஸார் தகுந்த நடவடிக்கை அக்கறை எடுக்கவில்லை எனவும் தமக்கு எவ்வித உதவியும் கிடைக்கவில்லை என்றும் அவர்கள் குற்றம் சுமத்தினர். சிறுவனின் குடும்பத்தினர் பாடசாலை நிர்வாகத்துடன் கதைத்தும், அவர்களும் கவனம் எடுக்கவில்லை என பெற்றோர் கவலை வெளியிட்டனர்.

தருக்சன் பாடசாலை சென்ற காலங்களில் அங்கு தன்னோடு யாரும் பேசுவதில்லை என்று கவலைப்பட்டதாகவும் ஆனால் வீட்டில் எதையும் வெளிக்காட்டிக் கொள்ளாமல் இருந்ததாக் சகோதரி சரண்யா தெரிவித்தார்.

தருக்சன் தவறான முடிவை எடுப்பதற்கு முன்னர் எழுதிய கடிதத்தை கைப்பற்றியுள்ள பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (வ-5)

# கைத்தொழில் வலயத்துக்கான எதிர்ப்பை மீளப்பெறுமாறு மகிந்தவிடம் கேட்கிறார் ரணில்


கொழும்பு, ஜன. 13
அம்பாந்தோட்டை கைத்தொழில் பேட்டை வலயத்துக்குக் கடும் எதிர்ப்பை வெளியிட்ட முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபச்சவும் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்சவும் அம்பாந்தோட்டை மகாநாயக்க தேரர்களிடம் சென்று தமது எதிர்ப்பை மீளப்பெற வேண்டும்.

இவ்வாறு கொழும்பு அரசின் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

வீடமைப்பு மற்றும் நிர்மாணத் துறை அமைச்சர் சஜித் பிரேமதாஸவின் 50ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு அம்பாந்தோட்டை திஸ்ஸமஹறாமவில் கஜசமரகம என்ற புதிய கிராமத்தை மக்களுக்கு கையளிக்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே தலைமை அமைச்சர் ரணில் விக்கிரசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தேர்தலுக்கு தயாராகும் நோக்குடனே கூட்டு அரசைப் பிரதிநிதித்துவப்படும் இரு முதன்மைக் கட்சியினரும் பதிலுக்கு பதில் குற்றச்சாட்டுகளையும் முரண்பாடான கருத்துகளையும் தெரிவித்து வருகின்றனர். இதனால் தேசிய அரசு கொள்கையில் மாற்றம் ஏற்படாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

அம்பாந்தோட்டை கைத்தொழில் பேட்டை வலயத்தை ஆரம்பிக்கட்டுமா? இடம் மாற்றம் செய்யவா? என்றும் அவர் கேள்வி எழுப்பினார். (வ-5)



முல்லைத்தீவு பண்டாரவன்னி மற்றும் பேராறு கிராம மக்களுக்கு போக்குவரத்துக்கு அச்சுறுத்தலாக இருந்து வந்த குருவிச்சை ஆற்றுப்பாலம் சீரமைப்புப் பணிகள் நடைபெறுகிறது. நெதர்லாந்து அரசின் 25 இலட்சம் ரூபா நிதியுதவியில் சீரமைப்புச் செய்யப்படுகிறது. (வ-500)

# மண்ணெண்ணெய் குடித்த இளம் குடும்பத்தலைவர் அவசர சிகிச்சைப் பிரிவில்

தென்மராட்சி, ஜன. 13
தோட்டத்துக்குச் சென்றுவிட்டு வந்த களைப்பில் சமையல் அறையில் கானுக்குள் காணப்பட்ட மண்ணெண்ணெயைக் குடிதண்ணீரென நினைத்து மளமளவென அருந்திய இளம் குடும்பத் தலைவர் சிகிச்சைக்காக சாவகச்சேரி வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டார் என்று தெரிவிக்கப் பட்டது.

குடித்து முடிந்த பின்னரே குடித்தது தண்ணீர்அல்ல மண்ணெண்ணெயெனத் தெரியவந்தது.

இந்தச் சம்பவம் நேற்று பூநகரி நெற்புலவு என்னும் இடத்தில் இடம்பெற்றது.

மண்ணெண்ணெய் அருந்திய இதே இடத்தைச் சேர்ந்த 29 வயது குடும்பத் தலைவர் உடனடியாக சாவகச்சேரி வைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்டு அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டார் - (வ-9)

# 2 மாத மேலதிக நேரக் கொடுப்பனவை வழங்குமாறு தாதியர்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன. 13
வடக்கு மாகாண வைத்தியசாலைகளில் பணிபுரியும் தாதிய உத்தியோகத்தர்களின் கடந்த நவம்பர் , டிசெம்பர் மாதங்களுக்கான மேலதிக நேரக் கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லை என்று தாதியர்கள் சுட்டிக்காட்டுவதோடு அவற்றை விரைவில் பெற்றுத் தர நடவடிக்கை எடுக்குமாறும் கோருகின்றனர்.

வடக்கு மாகாண சுகாதாரத் திணைக்களத்தின் கீழ் உள்ள சகல வைத்தியசாலைகளிலும் பணியாற்றும் தாதியர்களிற்கான மேலதிக நேரக் கொடுப்பனவுகளே இவ்வாறு வழங்கப்படவில்லை. இதேபோன்று 21 தாதியர்களுக்கான மேலதிக நேரக் கொடுப்பணவுகள் கடந்த ஆண்டு ஜீலை மாதத்துக்குப் பின்னர் வழங்கப்படவில்லை. 21 தாதியர்களும் 240 மணித்தியாலங்களை கடந்த மேலதிக நேரம் பணியாற்றியமைக்கான அனுமதி தாமதமானதாலேயே இவர்களுக்கான கொடுப்பனவு தாமதமடைவதாகவும் தாதியர்கள் தெரிவித்தனர்.

கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் வரையிலான சம்பளம் முழுமையாக வழங்கப்பட்டபோதிலும் நவம்பர், டிசெம்பர் மாதங்களின் மேலதிக நேரக் கொடுப்பனவுகளுக்கான நிதி இதுவரையில் கிடைக்கவில்லை. அதனால் தாதியர்களின் மேலதிக நேரக் கொடுப்பனவு வழங்கப்படவில்லை. இந்தமாத இறுதிக்குள் அவை கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. கிடைத்ததும் உடன் வழங்கப்படும். என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார். (வ-4,101)

# பொது நூலகத்துக்கு தளபாடங்கள் அன்பளிப்பு

கைதடி, ஜன.13
கைதடி பொது நூலகத்தின் சிறுவர் பகுதிக்கு கைதடி தெற்கைச் சேர்ந்த ஓய்வுநிலை மருத்துவ அதிகாரி பொ.சண்முகரட்ணம் தொலைக் காட்சிப் பெட்டி ஒன்றையும், கைதடி மேற்கைச் சேர்ந்த அமரர் த.கார்த்திகேசு ஞாபகார்த்தமாக அன்னாரது குடும்பத்தினர் முப்பது பிளாஸ்ரிக் கதிரைகளையும் அன்பளிப்பாக வழங்கினர்.

மேற்படி இவர்களின் உதவியினால் பல மாணவர்களும், வாசகர்களும் பெரும் பயனடைந்து வருவதாக நூலகப் பொறுப்பாளர் நன்றி தெரிவித்தார். (வ-288)

## வவுனியா – செட்டிகுளம் இடையே

# பேருந்து சேவையை அதிகரிக்க வலியுறுத்தி மக்கள் போராட்டம்



வவுனியா, ஜன. 13
வவுனியாவிலிருந்து செட்டிகுளம் செல்லும் வழித்தடத்தில் நேற்றிரவு போக்குவரத்க்கான பேருந்துகள் போதியளவில் காணப்படவில்லை என்று பயணிகள் விசனம் தெரிவித்தனர்.

அதனால் பயணிக்க இருந்த பேருந்தை மறித்து வைத்து மேலதிக பேருந்து விடுமாறு கோரினர். பின்னர் மேலதிகமாக 2 பேருந்துகள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

பயணிகளுக்கு நெருக்கடி ஏற்படாமல் போதியளவு பேருந்துகளை சேவையில் ஈடுபடுத்துமாறு வலியுறுத்தி அங்கு சேவையில் ஈடுபட்டிருந்த பேருந்து ஒன்றை வழிவிடாமல் சில மணிநேரம் மறித்து வைத்த சம்பவம் நேற்றிரவு 7 மணியளவில் குருமன்காடு பேருந்து தரிப்பிடத்துக்கு அருகில் இடம்பெற்றது.

பேருந்தில் இடவசதிகள் இன்றி பயணிகள் பலர் குருமன்காடு பேருந்து தரிப்பிடத்தில் காத்திருந்தனர். சேவையில் ஈடுபட்ட பேருந்து பயணத்தை ஆரம்பித்தது. பெருமளவானவர்கள் அதில் ஏற முற்பட்டனர். இளைஞர்கள் சிலர் பேருந்தின் மேல் பகுதியில் ஏறியும் பயணம் மேற்கொள்ள முற்பட்டுள்ளனர். இதையடுத்து வவுனியா இ.போ. ச.சாலைக்கு பேருந்தின் சாரதியால் தகவல் வழங்கப்பட்டது. மேலும் இரு பேருந்துகளை சேவையில் ஈடுபடுத்த வவுனியா சாலை நிர்வாகம் நடவடிக்கை எடுத்தது.

குருமன்காடு பேருந்து தரிப்பிடத்துக்கு வந்த இரு பேருந்துகளும் அங்கு காத்திருந்த பயணிகளை ஏற்றிக்கொண்டு இரவு 7.45 மணியளவில் தட்டான்குளம், பூவரசன்குளம் போன்ற பகுதிக்குப் பயணத்தைத் தொடர்ந்தது.

தைப்பொங்கலை முன்னிட்டு பல்வேறு தேவைகளுக்காக வவுனியா நகருக்கு வந்த பலர் பேருந்து இன்றி நீண்டநேரம் காத்திருந்ததாகவும் தெரிவித்தனர். வவுனியாவிலிருந்து பூவரசன்குளம் ஊடாக மெனிக்பாம் செல்லும் பேருந்து சேவை சீராக இருப்பதில்லை என்றும் பயணிகள் குற்றஞ்சாட்டினர். (வ-4)

# சர்ச்சைக்குரிய இணையப் பதிவை நேற்று நீக்கியது சுற்றுலா அமைச்சு

யாழ்ப்பாணம், ஜன. 13
டச்சுக் காரர்களின் ஆட்சியில் புகையிலை விற்பனைக்காக வந்தவர்களே யாழ்ப்பாணத்தின் மூதாதையர்கள் என்று கொழும்பு சுற்றுலா அமைச்சின் இணையத்தில் பதிவிடப்பட்டிருந்த தரவு நேற்று நீக்கப்பட்டது.

கொழும்பு சுற்றுலா அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் இலங்கையின் 25 மாவட்ட வரலாறுகள் தொடர்பிலும் அவை தொடர்பான சுற்றுலா முக்கியத்துவமும் பதிவிடப்பட்டிருந்தன. யாழ்ப்பாணம் தொடர்பில் டச்சுக்காலத்தில் புகையிலை வியாபாரத்துக்காக வந்தவர்களே யாழ்ப்பாணத்தின் மூதாதையர்கள் என்று பதிவிடப்பட்டிருந்தது. அது தொடர்பில் வடக்கு மாகாண சுற்றுலா அமைச்சின் செயலாளரின் கவனத்துக்கும் கொண்டு செல்லப்பட்டது. அது பற்றிய செய்தி நேற்றுச் வெளியாகியிருந்த நிலையில் நேற்று சர்ச்சைக்குரிய அந்த வசனம் நீக்கப்பட்டது.

'இவ்வாறு பதிவிடப்பட்டமை தொடர்பில் எமது கருத்து பிரதிபலிக்கவில்லை. இருப்பினும் இந்தக் கருத்து தவறானது என்பதனை சுட்டிக்காட்டி அதற்கான சரியான தகவல்கள் அனுப்ப நடவடிக்கை எடுக்கப்படும். வடக்கு மாகாண சுற்றுலா அமைச்சின் ஊடாக வடக்கு மாகாணத்துக்குட்பட்ட சகல மாவட்ட விவரங்களையும் உள்ளடக்கிய ஒரு சுற்றுலா வழிகாட்டி வெளியிடப்படும்'- என்று வடக்கு மாகாண சுற்றுலா அமைச்சின் செயலாளர் தெரிவித்தார். (வ-4,101)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



10.01.2017 செவ்வாய்க்கிழமை
நடைபெற்ற
யாழ் பல்கலைக்கழக
32 ஆவது பட்டமளிப்பு விழாவில்
**கலைமாணி சிறப்பு**
(BA.Hons)
பட்டம் பெற்ற எமது அன்புச்
செல்லம்
**விவேகானந்தராஜா**
**கஜலக்ஷி**

அவர்களுக்கு உள்ளம் நிறைந்த பாராட்டுக்களைத் தெரிவிப்பதோடு மேலும் பல பட்டங்கள், பதவிகள் பெற்று உயர்வடைய வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்: அக்காமார், அத்தான்மார் &
திபிசனாக்குட்டி

## பாராட்டி வாழ்த்துகின்றோம்


யாழ். பல்கலைக்கழகத்தில்
(11.01.2017) புதன்கிழமை
நடைபெற்ற
32 ஆவது பட்டமளிப்பு விழாவில்
தொழில் நிர்வாகமாணி
(B.B.A FMG SPI) பட்டம் பெறும்
**செல்வி வினுதா**
**விக்னேஸ்வரன்**

அவர்களைப் பாராட்டி மேன்மேலும் பல
துறைகளில் பல பட்டங்கள் பெற எல்லாம்
வல்ல இறைவனின் ஆசியை வேண்டி
வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:-
குடும்பத்தினர், ரவிஐயா குடும்பம்,
புலேந்திரன்ஐயா குடும்பம்.



## மணிவிழா நாயகனை மனமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் இருபது
ஆண்டுகள் முகாமைத்துவ உதவியாளராகப்
பணியாற்றி தமது 60 ஆவது வயதில் இளைப்பாறிச்
செல்லும்
உயர்திரு.
**தம்பிராசா இந்திரன்**

அவர்களை ஓய்வு காலத்தில் சீரும்
சிறப்புடனும் எல்லா நலன்களும்
பெற்று வாழ வாழ்த்துகின்றோம்.

கல்விசாரா ஆளணியினர்
யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் (10.01.2017)
செவ்வாய்க்கிழமை நடைபெற்ற 32ஆவது பட்டமளிப்பு
விழாவில் உளவியல் சிறப்புக் கலைமாணி (B.A)
பட்டத்தினைப் பெற்ற
**விஜயபாலசிங்கம்**
**மதிசங்கர்**

அவர்களைப் பாராட்டி மேன்மேலும் பல
துறைகளில் பல பட்டங்களைப் பெற எல்லாம்
வல்ல இறைவனின் ஆசியை
வேண்டுவதோடு பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:-
குடும்பத்தினர்,
ரவீந்திரராசா குருக்கள் குடும்பம்,
புலேந்திரக்குருக்கள் குடும்பம்

## பாராட்டி வாழ்த்துகின்றோம்




யாழ் பல்கலைக்கழகத்தில்
11.01.2017 அன்று நடைபெற்ற
32 ஆவது பட்டமளிப்பு
விழாவில் முகாமைத்துவ
பீடத்தில்
தொழில் நிர்வாகமாணி
(B.B.A FMGSPI)
பெறுகின்ற
**சிவரூபா**
**புலேந்திரக்குருக்கள்**

அவர்களைப் பாராட்டி
மேன் மேலும் பல
துறைகளில் பல பட்டங்கள்
பெற எல்லாம் வல்ல
இறைவனின் ஆசியை
வேண்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்கள்:
அப்பா
(புலேந்திரக்குருக்கள்),அம்மா,
அண்ணா, தம்பி
சித்தப்பா
(ரவீந்திரராசாக்குருக்கள்) குடும்பம்
சித்தப்பா
இராசமுத்து குடும்பம் (சுவிஸ்)

## சேவைநலன் பாராட்டு

**திரு.தம்பிராசா இந்திரன்**
(அரச முகாமைத்துவ உதவியாளர் - யாழ்.இந்துக்கல்லூரி)



### இதயம் கவர்ந்த இந்திரன்

தம்பி, ராசா என்று இன் முகத்துடன்
எம் இதயங்களையெல்லாம்
இந்துக் கல்லூரியில் தொட்டுத் தடவி
ஒத்தடம் போடும் சந்திரன்
அவர் தான் எம் இந்திரன்
வட்டு பெற்று யாழ்.இந்துவுக்கு
விட்டுச் சென்ற சொத்து அவர்
கருத்து முரண்பாடு அவர்
களத்தில் என்றும் வந்ததில்லை
சிரித்த முகத்துடன் சீலனாய் திகழ்ந்தவர்
இன்சுவை உணவு இடையிடைத் தருவார்
[illegible] இதமாய் நடப்பார்

பொய்மையற்ற போலியற்ற
நேயம் மிக்க மானிடன்
கள்ளமற்ற கபடமற்ற
வெள்ளையுள்ளம் கொண்டவன்
அத்தனை பேருக்கும்
ஆலோசனை கூறும்
உத்தமனாய் திகழ்ந்த அவர் -
தம் குடும்பம்
ஞானவைரவர் பெருமானின் அருள்
பெற்று சுற்றம் சூழ செழிப்புப்
பெற்று ஓங்கி உயர்ந்து
ஒளிரட்டும் இவ்வுலகில் என்றும்.

வாழ்த்துவோர்:- ஆசிரிய நண்பர்கள் - யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வவுனியாவில் இன்று மின்தடை

யாழ்ப்பாணம், ஜன.13
உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று வெள்ளிக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 6.30 மணிவரையும் வவுனியா பிரதேசத்தில் தெற்கிலுப்பைக்குளம் கிராமம், தவசிக்குளம் ஆகிய இடங்களில் மின்விநியோகம் தடைப்படும் என்று அறிவிக்கப்பட்டது. (வ-10)

## அரசியல் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜன.13
'தமிழத் தேசிய அரசியலில் தமிழரசுக் கட்சியின் வகிபாகம்' எனும் தலைப்பிலான கலந்துரையாடல் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை 4மணிக்கு யாழ்ப்பாணம் இலக்கம் 361, ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள டி.எம்.ஐ. கல்வி நிறுவனத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.
ஏ.சி.ஜோர்ச் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு பழ.முத்துலிங்கம் ஆரம்ப உரையை ஆற்றுவார் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-ரி)

## சின்மயா மினின் பொங்கல் விழா

யாழ்ப்பாணம், ஜன. 13
தைப் பொங்கல் தினத்தை முன்னிட்டு பொங்கல் வழிபாடுகள் சின்மயா மினின் நிரந்தரக் கட்டடம் அமையப் போகும் இடத்தில் நடைபெறவுள்ளன.
இலக்கம் 700, பருத்தித்துறை வீதி, நல்லூரில் அமைந்துள்ள புதிய காணியில் உள்ள பைரவர் ஆலயத்தில் நாளை சனிக்கிழமை காலை 8 மணி முதல் 10.30 மணிவரை பொங்கல் வழிபாடுகள் இடம்பெறும்.
யாழ்ப்பாணத்தில்அமைந்துள்ள சின்மயா ஞானவேல் ஆச்சிரமத்தில் மாலை 3 மணிமுதல் பொங்கல், சிறுவர்களுக்கான விளையாட்டுக்கள், பெரியவர்களுக்கான கலந்துரையாடல் மற்றும் 'சின்மய நாதம்' 15ஆவது காலாண்டு இதழ் வெளியீடு ஆகிய நிகழ்வுகள் இடம்பெறும் என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (வ-ரி)

## முதியோர் அமைப்பின் பொங்கல் விழா

தென்மராட்சி, ஜன. 13
எழுதுமட்டுவாழ் முதியோர் அமைப்பின் ஓராண்டு நிறைவு விழாவும் பொங்கல் விழாவும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மு.ப. 9.30 மணிக்கு எழுதுமட்டுவாழ் முன்பள்ளி மண்டபத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.
ஓய்வுநிலை அதிபர் சி.சின்னராசா தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண சபை உறுப்பினர் கேசவன் சயந்தன் கலந்துகொள்வார் என்று தெரிவிக்கப்பட்டது. (வ- 9)

## பொங்கல் விழா

கைதடி தெற்கு சனசமூக நிலையத்தின் பொங்கல் விழா நிகழ்வு நாளை சனிக்கிழமை காலை 6 மணியளவில் நிலையத்தின் தலைவர் க.பாலசிங்கம் தலைமையில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது. (வ-288)

# 28 கிலோ கஞ்சா மாதகலில் மீட்பு

### எவருமே சிக்கவில்லை

யாழ்ப்பாணம், ஜன. 13
யாழ்ப்பாணம் மாதகல் கடலில் கரையை அண்மித்து நேற்று அதிகாலை 28 கிலோக்கிராம் கஞ்சா போதைப் பொருளைக் கடற்படையினர் மீட்டு ஒப்படைத்துள்ளதாகக் காங்கேசன்துறைப் பொலிஸார் தெரிவித்தனர்.
மாதகல் குசுமாந்துறையில் ஆழமற்ற கடல் பகுதியில் மிதந்தவாறு பொதி ஒன்று காணப்பட்டது. சந்தேகம் கொண்ட கடற்படையினர் அதனை மீட்டு சோதனையிட்ட போதே பொதியினுள் கேரளாக் கஞ்சா இருப்பது தெரியவந்தது.
அங்கு கரையோரத்தில் கடற்படையினர் சோதனை மேற்கொண்ட போது மேலும் 5 பொதிகள் மீட்கப்பட்டன. அவையும் கஞ்சாப் போதைப் பொருள் கொண்டவை. எனினும் சந்தேக நபர்கள் எவரும் கைது செய்யப்படவில்லை.
கைப்பற்றப்பட்ட 28 கிலோகிராம் கஞ்சா நீதிமன்றில் இன்று பாரப்படுத்தப்படும் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (வ-4,101)

# மீனவர்களுடைய உடமைகளை தீ வைத்து நாசமாக்கிய கும்பல்

### தண்ணிமுறிப்புக் குளம் பகுதியில் சம்பவம்

முல்லைத்தீவு, ஜன. 13
முல்லைத்தீவு தண்ணிமுறிப்புக் குளத்தில் மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்களின் மோட்டார் சைக்கிள் அடித்துச் சேதப்படுத்திக் குளத்துக்குள் வீசப்பட்டதோடு, படகும் வலையும் தீ வைத்து எரித்து நாசமாக்கப்பட்டதாக மீனவர்கள் தெரிவித்தனர்.
சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றது.
தண்ணிமுறிப்பு குளத்தில் மீன்பிடியில் ஈடுபடுவற்காக வெளியோயாப் பகுதியில் இருந்து வருகை தந்த மீனவர்களுக்கும், தண்ணிமுறிப்பு குளத்தில் மீன்பிடியில் ஈடுபடும் உள்ளூர் மீனவர்களுக்கும் இடையே முன்னர் முரண்பாடு ஏற்பட்டிருந்தது. பின்னர் அந்தப் பிரச்சினை பின்னர் சுமுகமாகத் தீர்த்துவைக்கப்பட்டது.
நேற்றுமுன்தினமிரவு இடம்பெற்ற இந்தச் சம்பவத்துக்கு வெலிஓயாவிலிருக்கும் நபர்களே காரணம் என்று பாதிக்கப்பட்ட தரப்பு மீனவர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.
தமது உடமைகளைப் பாதுகாக்க அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் பாதிக்கப்பட்ட மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.
சம்பவம் தொடர்பாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலதிக விசாரணையைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# மதுபான நிலையங்கள் நாளை பூட்டு

யாழ்ப்பாணம், ஜன .13
யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள சகல மதுபான விற்பனை நிலையங்களையும் பொங்கல் தினமான நாளை மூடுவதற்கு மதுவரித் திணைக்கள ஆணையாளர் நாயகம் அனுமதித்துள்ளார்.
இந்த அறிவிப்பின் படி குடாநாட்டிலுள்ள சகல மதுபான நிலையங்களையும் நாளை மூடுமாறு யாழ்ப்பாண மாவட்டச் செயலர் நேற்று அறிவித்தார்.
பொங்கலன்று சகல மதுபான விற்பனை நிலையங்களையும் மூட வேண்டும் என்று வடக்கு மாகாண சபையில் கோரப்பட்டிருந்தது. (வ-4)

## சிறைச்சாலைக்குள் பொங்குவதற்கு பொங்கல் பொருள்களை இந்து மாமன்றம் வழங்கியது

யாழ்ப்பாணம், ஜன. 13
யாழ்ப்பாணச் சிறைச்சாலையில் உள்ள கைதிகள் தைப்பொங்கல் பொங்கிக் கொண்டாடுவதற்காக பொங்கல் பொருள்கள் இந்து மாமன்றத்தினால் நேற்று வழங்கப்பட்டன.
நல்லை ஆதின குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானதேசிக பரமாச்சாரிய சுவாமிகள் மற்றும் இந்து மாமன்ற உபதலைவர் சி.தனபாலா ரிஷி தொண்டுநாத சுவாமிகள் ஆகியோர் நேற்றுமாலை பொங்கல் பொருள்களை வழங்கினர்.
அரசியல் கைதிகளின் நலன்கள் மற்றும் விடுதலை குறித்தும் அரசியல் கைதிகளின் குடும்பங்களின் நலன் பற்றியும் அவர்கள் விசாரித்தனர். (வ-4,106)

## மரதன் ஓட்டம் ஸ்கந்தாவில் இன்று

யாழ்ப்பாணம், ஜன. 13
சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் இல்லத் திறனாய்வுப் போட்டியை முன்னிட்டு மரதன் ஓட்டப் போட்டி இன்று காலை கல்லூரி முன்றிலில் இருந்து ஆரம்பமாகி, மருதனார்மடம் - சுன்னாகம் ஊடாக கல்லூரி முன்றலை மீண்டும் வந்தடையும் என்று பாடசாலை அதிபர் அறிவித்தார். (வ-5)

## சிகை ஒப்பனை நிலையங்கள் நாளை பூட்டு

யாழ். மாவட்டத்தில் உள்ள அனைத்து சிகை ஒப்பனை நிலையங்களும் நாளை மூடப்படும் என்று யாழ். மாவட்ட சிகை ஒப்பனையாளர் சங்கத்தின் தலைவர் ரி.யசிந்தன் அறிவித்தார்.
ஒவ்வொரு வருடமும் பொங்கல் தினத்துக்கு விடுமுறை வழங்கப்படுவதைப் போன்று இந்த வருடமும் பொங்கல் தினமான நாளைய தினமும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமையும் அனைத்து சிகை அலங்கரிப்பு நிலையங்களும் பூட்டப்பட்டிருக்கும் என்று அவர் தெரிவித்தார். குறித்த சட்ட விதியை மீறுவோர் மீது உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் யாழ். மாவட்ட சிகை ஒப்பனையாளர் சங்கத்தின் தலைவர் கூறினார். (வ-8)

## புதிய நிர்வாகிகள் தெரிவு

கைதடி மத்தி வளர்மதி சனசமூக நிலையத்தின் 2017 ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாக சபைத் தெரிவுகள் அண்மையில் நிலைய மாநாட்டு மண்டபத்தில் நிலையத்தின் தலைவர் சி.கந்தசாமி தலைமையில் இடம்பெற்றன.
வளர்மதி சனசமூக நிலையத்தின் இந்த ஆண்டுக்கான தலைவராக கி.பூபாலசிங்கமும், செயலாளராக க.குமேந்திரனும், பொருளாளராக சி.கஜேந்திரனும் தெரிவு செய்யப்பட்டனர். அத்துடன் 11பேர் கொண்ட நிர்வாகமும் தெரிவு செய்யப்பட்டது.
மேலும் வளர்மதி விளையாட்டுக் கழகத்தின் தலைவராக வீ.சன்றோயஸ் குயின்ரஸ்ஸும், செயலாளராக க.தயாளனும், பொருளாளராக பொ.பாஸ்கரனும் தெரிவு செய்யப்பட்டனர். மேலும் 5பேர் கொண்ட நிர்வாகமும் தெரிவு செய்யப்பட்டது.
இந்த வருடாந்தத் தெரிவுக் கூட்டத்துக்கு சாவகச்சேரி பிரதேச சபையின் சன சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி செல்வராணி ஜெகதீசன் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்பித்தார். (வ-288)

## பொங்கல் விழா

கைதடி மத்தி வளர்மதி சனசமூக நிலையத்தின் பொங்கல் விழா நிகழ்வு நிலையத்தின் தலைவர் கி.பூபாலசிங்கம் தலைமையில் நிலைய முன்றிலில் நாளைக் காலை 9 மணிக்கு நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.
தொடர்ந்து அன்றைய தினம் மாலை நிலைய அங்கத்தவர்களுக்கிடையே தாச்சிப்போட்டி, கரப்பந்தாட்டப்போட்டி, முட்டி உடைத்தல், சங்கீதக் கதிரை மற்றும் கயிறிழுத்தல் என்பவையும் இடம்பெற உள்ளன. மாலை நிகழ்வுகள் வளர்மதி விளையாட்டுக்கழகத்தின் தலைவர் வீ.சன்றோயஸ் குயின்ரஸ் தலைமையில் இடம் பெறும் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-288)

# சகல கலைஞர்களுக்கும் நன்மை கிடைக்கவே காலாசார சபைகள்

### யாழ். மாவட்டச் செயலர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 13
சகல கலைஞர்களும் பாகுபாடு இன்றி நன்மை பெறும் வகையில் யாழ். மாவட்டத்தில் கலாசார சபைகள் உருவாக்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட செயலர் நா.வேதநாயகம் தெரிவித்தார்.
யாழ். மாவட்ட கலாசார அதிகார சபையின் அங்குரார்ப்பண நிகழ்வு, மற்றும் நடப்பாண்டுக்கான கலாசார அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பான கலந்துரையாடலும் நேற்று முற்பகல் 10 மணியளவில் யாழ். மாவட்டச் செயலர் தலைமையில் மாவட்டச்செயலக மாநாட்டுமண்டபத்தில் இடம்பெற்றது. இதன் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
யாழ். மாவட்டத்தில் கலாபூசணம் விருதுக்காக பெரும்பாலும் நகரை அண்டிய கலைஞர்களே தேர்வு செய்யப்படுகின்றனர். யாழ்ப்பாணத்திலுள்ள கலைஞர்களுக்கு இது ஒரு குறையாக இருந்து வந்துள்ளது. கிராமிய மட்டத்திலுள்ள கலைஞர்கள் நிராகரிக்கப்படுவதாக என்றும் கின்றனர்.
இந்தக் குறைக்கு முற்றுப்புள்ளி வைக்கவே மாவட்ட, பிராந்திய, கலாசார சபைகள் உருவாக்கப்பட்டுள்ளன. இதன்மூலம் திரை மறைவிலுள்ள கலைஞர்களும் வெளிச்சத்துக்கு கொண்டுவரப்படுவார்கள். குறித்த சபைகள் மூலமாக தேர்வு செய்யப்படும் கலைஞர்களின் பெயர்கள் அந்தப் பிரதேச செயலகத்தினால் கலாசார அலுவல்கள் திணைக்களத்துக்கு அனுப்பிவைக்கப்படும். மேலும் இந்த வருடம் கலைஞர்களை ஊக்குவிக்கம் வண்ணம் உதவித்திட்டங்களையும் முன்னெடுக்கவுள்ளோம்.
ஓய்வூதியம், வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட கலைஞர்களுக்கு உதவித் தொகைகள், அடையாள அட்டை வழங்குதல் போன்ற திட்டங்கள் முன்னெடுக்கவுள்ளோம். இதன் முதல் கட்டமாக கலைஞர்களை இனம் காண இந்த அங்குராப்பண வைபவம் நடைபெறுகின்றது. இவற்றைத் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளால் கலைஞர்கள் நன்மை பெறமுடியும் - என்றார்.
அதன் பின்னர் மாவட்ட கலாசார அதிகாரசபை, பிராந்திய கலாசார அதிகாரசபை, பிராந்திய கலாசார அதிகார சபை ஆலோசனைக்குழு போன்றன உருவாக்கப்பட்டன. அந்தக் குழுக்களுக்கான தலைவர், உப தலைவர், செயலாளர், உப செயலாளர், பொருளாளர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.
அதன்படி மாவட்ட கலாசார அதிகாரசபையின் தலைவராக யாழ். மாவட்ட மேலதிக மாவட்டச் செயலர் செந்தில்நந்தனனை யாழ். மாவட்ட செயலர் ஏகமனதாக முன்மொழிந்ததுடன் அதை சபையினர் ஆமோதித்தனர்.
இதனைத் தொடர்ந்து எதிர்வரும் நாள்களில் நியமிக்கப்படவுள்ள குழுக்களின் ஊடாக யாழ் மாவட்டத்தில் உள்ள கலைஞர்கள் தெரிவு செய்யப்பட்டு தேசிய ரீதியாக அரசினால் வழங்கப்படும் விருதுகளுக்கு பரிந்துரை செய்யப்படுவார்கள் என்று கலை கலாசார அலுவலக திணைக்களத்தின் உத்தியோகத்தர் கிருஷ்ண குமார் தெரிவித்தார்.
இந்த நிகழ்வில் மேலதிக மாவட்டச் செயலர் செந்தில்நந்தனன், யாழ். மாவட்ட கலாசார உத்தியோகத்தர்கள், யாழ் மாவட்டத்தில் உள்ள கலைஞர்கள் கலந்துகொண்டனர். (வ-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# கொடுப்பனவுகள் கிடைப்பதில்லை

## விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர்கள் குற்றச்சாட்டு

வலி.தென்மேற்கு, ஜன.13

யாழ். மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்களத்தில் கடமையாற்றும் விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர்களுக்குக் கிடைக்க வேண்டிய மேலதிக கொடுப்பனவுகள் எவையும் வழங்கப்படுவதில்லை என்று யாழ். மாவட்டத்தில் கடமையாற்றும் விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர்கள் விசனம் தெரிவித்தனர்.

அவர்கள் தெரிவித்ததாவது-

கடந்த காலங்களில் யாழ். மாவட்டத்தில் விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர்கள் கடமைக்கு இணைக்கப்படாமையால் போட்டிப்பரீட்சை மூலம் தெரிவு செய்யப்பட்ட விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர்கள் 2015ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் யாழ். கமநல அபிவிருத்தித் திணைக்களத்துக்கு இணைக்கப்பட்டனர். அவர்களில் அதிகளவானோர் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்களாவர். தமிழ்ப் பிரதேசத்தில் தமிழ்மொழி தெரியாத உத்தியோகத்தர்களைக் கடமைக்கு இணைத்தமை தொடர்பில் பல தரப்புக்களிலிருந்தும் எதிர்ப்புகள் எழுந்தன. யாழ்ப்பாணத்துக்கு இணைக்கப்பட்ட பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர்கள் மீளப்பெறப்பட்டனர். எஞ்சிய 17 தமிழ் உத்தியோகத்தர்களே தொடர்ந்தும் யாழ்ப்பாணத்தில் கடமையாற்றுகின்றனர்.

யாழ். மாவட்டத்தில் 353 விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர்கள் தேவையுள்ளபோதும் தற்போது 17 உத்தியோகத்தர்களே கடமையாற்றுகின்றனர். 336 விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர்களுக்கு வெற்றிடங்கள் நிலவுகின்றன. ஒரு பிரிவுக்கு ஓர் உத்தியோகத்தர் கடமையாற்ற வேண்டிய நிலையில் யாழ்.மாவட்டத்தில் ஓர் உத்தியோகத்தர் மிக அதிகளவான பிரிவின் வேலைகளைச் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. வேறு மாவட்டங்களில் ஓர் உத்தியோகத்தர் ஒரு பிரிவுக்கு மட்டும் இணைக்கப்பட்டு அவர்களுக்குரிய பிரயாணப்படிகள் மற்றும் இணைந்த படிகள் அனைத்தும் வழங்கப்படுகின்றன.

யாழ். மாவட்டத்தில் ஓர் உத்தியோகத்தர் அதிகளவான பிரிவுகளுக்குரிய கள வேலைகள் உட்பட அனைத்து வேலைகளையும் செய்கின்ற போதிலும் அவர்களுக்கு பிரயாணப்படிகளோ, இணைந்த படிகளோ வழங்கப்படுவதில்லை. யாழ். மாவ்ட்டத்தில் விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர்கள் கடமையில் இணைந்து ஒன்றரை வருடங்கள் ஆகின்ற நிலையில் இதுவரை அவர்களுக்குரிய கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லை.

பதில் கடமைக் கொடுப்பனவு தொடர்பில் அகில இலங்கை விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர்கள் சங்கத்தினர் விவசாய அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டு சென்றமையை அடுத்து பதில் கடமைக் கொடுப்பனவுகளை வழங்குவதற்கு விவசாய அமைச்சர் இணங்கியிருந்தார். பதில் கடமை நியமனங்களை வழங்குமாறும் கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தால் சகல மாவட்டங்களுக்கும் அறிவிக்கப்பட்டது.

யாழ். மாவட்டத்தில் பல பிரிவுகளில் பணிபுரியும் விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர்களுக்கு பதில் கடமை நியமனங்கள் இதுவரை வழங்கப்படவுமில்லை. யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர்.- என்றனர்.

(ற-115)

# வீதிகளின் விவரங்களை திரட்டுவதற்கு நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜன.13

வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட உள்ளூராட்சி சபை வீதிகளின் விவரங்களை வடமாகாண உள்ளூராட்சி சபை திரட்டவுள்ளது.

2016 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் வடக்கு மாகாணத்தில் உள்ள உள்ளூராட்சி சபைகள் அனைத்தும் தமது எல்லைப் பரப்புக்குள் வரும் சபை வீதி விவரங்களைத் தொகுத்து (வீதியின் பெயர், நீளம், அகலம், கிராம அலுவலர் பிரிவு, ஜரிஸ், மதகு, பாலம் மற்றும் விவரம்) மக்கள் பார்வைக்கு வைக்க வேண்டும் என்று கோரப்பட்டது.

14 நாள்களின் பின்னர் முதற்கட்டமாக அனைத்து வீதிகளையும் முறையாகத் தொகுத்து மார்ச் 31ஆம் திகதிக்கு முன்னர் வர்த்தமானிப் பத்திரிகையில் பிரசுரித்து அறிக்கையிட வேண்டும் என்றும் கோரப்பட்டது. முதற்கட்டமாக வர்த்தமானியில் பிரசுரித்த உள்ளூராட்சி சபைகள் இரண்டாம் கட்ட மாக அனைத்து வீதிகளும் (விடுபட்ட சபை வீதிகள்) உள்ளடக்கப்பட்ட நிலையில் இறுதியாக வர்த்தமானியில் பிரசுரித்த சபை வீதிகளின் விவரங்களையே வடமாகாண முதலமைச்சரின் செயலகம் திரட்ட கடிதங்களை சம்பந்தப்பட்டவர்களுக்கு அனுப்பி வைத் துள்ளது.

(ற-50)

# ஆசிரிய வளங்களைக் கொண்டு கற்று சிறந்த அடைவு பெறலாம்

## பொறியில் தொழிநுட்ப பிரிவில் முதல்நிலை பெற்ற துவாரகன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன.13

இருக்கின்ற ஆசிரியர் வளங்களை கொண்டு சிறந்த முறையில் கல்வி கற்றால் சிறந்த அடைவை எட்ட முடியும்.

இவ்வாறு கிளிநொச்சி மாவட்டத்தில் பொறியில் தொழிநுட்ப பிரிவில் முதல் நிலை பெற்ற முருகவேல் துவாரகன் தெரிவித்தார்.

க.பொ.த. உயர்தர பெறுபேறுகள் கடந்தவாரம் வெளியாகின. கிளிநொச்சி மாவட்டத்தில் பளை மத்திய கல்லூரி மாணவன் மு.துவாரகன் 2 பி.சி பெறுபேறு பெற்று பொறியியல் தொழிநுட்ப பிரிவில் முதல் நிலை பெற்றார்.

எமது பாடசாலையில் ஆய்வுகூட வசதியில்லை. முதல் வருடத்தில் கற்பிப்பதற்கு ஆசிரியர்கள் இல்லை. இருந்த ஆசிரியர் வளத்தை வைத்துக்கொண்டு மேலதிக வகுப்புககளுக்கு சென்று எனது கல்வியைத் தொடர்ந்தேன். எதிர்பார்த்த அடைவு கிடைக்கவில்லை. மாவட்டத்தில் முதல் நிலை கிடைத்தது மகிழ்சி.- என்று அவர் தெரிவித்தார்.

(ற-21)

# இரணைமடுவில் 97 பானைகளில் பிரமாண்ட பொங்கல்

கிளிநொச்சி, ஜன.13

இரணைமடுக் குளம் விவசாயச் செய்கைக்குத் திறக்கப்பட்டு 97 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளதை முன்னிட்டு பட்டிப்பொங்கல் தினத்தன்று இரணைமடு கனகாம்பிகை அம்மன் ஆலய முன்றிலில் 97 பானைகளில் மாபெரும் பொங்கல் நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன என்று மாவட்ட விவசாய சம்மேளனத்தின் செயலாளர் சிவமோகன் தெரிவித்தார்.

பட்டிப் பொங்கல் தினத்தில் பொங்கல் நிகழ்வு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. மிகவும் சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இப் பொங்கல் நிகழ்வில் பெரும் திரளானோர் பங்கு கொள்வர் என எதிர்பார்க்கப்படுகின்றது என்று அவர் தெரிவித்தார்.(ற-101)

# வருத்தப்படாத வாலிபர் சங்க பொங்கல் விழா நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஜன.13

இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தால் வருடந்தோறும் நடத்தப்படும் பொங்கல் விழா நிகழ்வுகள் நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ளன. நிகழ்வில் பாரம்பரிய விளையாட்டுப்போட்டிகள், பட்டம் ஏற்றல் போட்டிகள், கலாசார கலை நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

காலை 9 மணிக்கு காங்கேசன்துறை வெளிச்சவீட்டருகே உள்ள பட்டமேற்றுத்திடலில் பட்டமேற்றல் போட்டிகளும், பிற்பகல் 1 மணி தொடக்கம் இளவாலை வாலிபத்திடலில் சிறுவர்களுக்கான போட்டிகள், சறுக்குமரம் ஏறுதல், தயிர்முட்டி உடைத்தல், தலையணைச்சண்டை, கயிறுழுத்தல், கிடுகு பின்னுதல், சாக்கோட்டம் என்பன இடம்பெறும்.

அதனைத் தொடர்ந்து மாலை 4 மணிக்கு பாரம்பரிய முறைப்படி ஆரோகணா கலைக்குடும்பத்தில் இசைப்பறைகள், கொம்புகள் முழங்க விருந்தினர் வரவேற்பும், கலைகலாசார நிகழ்வுகளில் 'நேத்திரம்' சஞ்சிகை வெளியீட்டு விழாவும், அதிர்ஷ்டலாபசீட்டின் அதிர்ஷ்டம் பார்க்கும் நிகழ்வும் இடம்பெறும்.

நிகழ்வில் பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன், சிறப்பு விருந்தினராக பேராசிரியர் சிவலிங்கராஜா ஆகியோர் கலந்து கொள்வர் என்று தெரிவிக்கப் பட்டது.

(ற-ஜ)

# வவு. சைவப்பிரகாசாவில் சிறப்பான பெறுபேறுகள்

## பாடசாலை அதிபர் தெரிவிப்பு

வவுனியா, ஜன.13

வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரி மாணவிகள் உயர்தரப்பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளை பெற்றுள்ளனர் என பாடசாலையின் அதிபர் திருமதி பி. கமலேஸ்வரி தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது-

கா. துசாந்தினி 3ஏ, அ. அபிராமி 3ஏ, வி. டிலக்சனா 3ஏ, யோ. ரட்சனா 2ஏபி, த. டிலக்சனா 2ஏபி, ஆகிய மாணவிகள் மருத்துவத் துறைக்கு தெரிவாகியுள்ளனர். உயிரியல் தொழில்நுட்பத் துறைக்கு மாவட்ட மட்டத்தில் ச. திருஸ்ரிகா 4 ஆம் இடத்தையும் சு. பிரியதர்சினி 6 ஆம் இடத்தையும் சு. விபீசா 10 ஆம் இடத்தையும் பெற்று சித்தியடைந்துள்ளனர்.

கலைத்துறையில் செ.பிரிந்தா 3ஏ சித்திபெற்று மாவட்ட மட்டத்தில் இரண்டாமிடத்தையும், வர்த்தகத் துறையில் கீர்த்திகா பொன்ராசா 3ஏ, ஜர்சனா ஜெயமோகன் 3ஏ, துசாந்தி கனகலிங்கம் 3ஏ, திவ்வியா மோகனராஜா 3ஏ சித்திகளையும் பெற்றுள்ளனர். வர்த்தகப் பிரிவில் தோற்றிய அனைத்து மாணவிகளும் 100 வீத சித்தியையும் பெற்றுள்ளனர். பாடசாலையில் இருந்து விஞ்ஞானத் துறையில் 55 மாணவிகளும் கலைத்துறையில் 52 பேரும் வர்த்தகத் துறையில் 46 பேரும் உயிரியல் தொழில்நுட்பத் துறையில் 48 மாணவிகளும் தோற்றினர் -என்றார்.

(ற-21)

# உடற்தகுதிச் சான்றிதழ் பெறுவதில் இடர்பாடு

## முல்லைத்தீவு மாவட்ட பாடசாலைகள் தெரிவிப்பு

முல்லைத்தீவு, ஜன.13

முல்லைத்தீவு மாவட்டத்தில் விளையாட்டுப் போட்டிகளில் ஈடுபடும் மாணவர்கள் உடற்தகுதிச் சான்றிதழ்களைப் பெறுவதில் சிரமங்களை எதிர்கொள்கின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

கல்வி அமைச்சின் சுற்றறிக்கைக்கு அமைவாக இந்த மாதம் 31ம் திகதிக்குள் பாடசாலை விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட வேண்டும். இல்ல விளையாட்டுப் போட்டிக்கு முன்னிகழ்வாக நடத்தப்படும் வீதியோட்டம் அல்லது அரை மரதன் போட்டிகளை நடத்துவதற்கு பங்குபற்றும் வீரர்கள் உடற்தகுதிச் சான்றிதழ்கள் பெற வேண்டும்.

முல்லைத்தீவு வலயப்படசாலைகள் பங்குபற்றும் வீரர்களின் உடற்தகுதிச் சான்றிதழ் பெறுவதற்காக மாஞ்சோலை வைத்தியசாலைக்குச் சென்றபோது மருத்துவ பரிசோதனையை மேற்கொள்ள மருத்துவர் இல்லை என்று பதிலளிக்கப்பட்டது எனக் கூறப்பட்டது.

உடற் தகுதிச் சான்றிதழ் பெறுவதற்கு மாணவர்கள் கிளிநொச்சி அல்லது யாழ்ப்பாண வைத்தியசாலைகளுக்குச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

மரதன் ஓட்டத்தில் கலந்து கொள்ளும் மாணவர்களுக்கு மருத்துவப் பரிசோதனை செய்து சான்றிதழ் வழங்கும் மருத்துவர்கள் இடம் மாற்றலாகிச் சென்றுள்ளனர். தற்போது சேவையில் உள்ள மருத்துவர்கள் பரிசோதித்து சான்றிதழ் வழங்கமுடியாத நிலை உள்ளது - என்று மாஞ்சோலை வைத்தியத் தரப்பினர் தெரிவித்தனர்.

(ற-7,433)

# நீரிழிவு விழிப்பூட்டல் செயலமர்வு

யாழ்ப்பாணம், ஜன.13

யாழ். நீரிழிவுக் கழகத்தின் ஏற்பாட்டில் சண்டிலிப்பாய் பிரதேச செயலக அலுவலர்களுக்கான நீரிழிவு விழிப்பூட்டல் செயலமர்வும் மருத்துவ முகாமும் நேற்றுமுன்தினம் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் தலைமையில் நடைபெற்றது.

சண்டிலிப்பாய் சுகாதார வைத்தியர் சிந்துசா நீரிழிவு தொடர்பாக உரையாற்றினார். 150க்கு மேற்பட்ட அலுவலர்களுக்கு நீரிழிவு, குருதி அழுத்தம், உடற்திணிவுச் சுட்டி போன்றவை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலர்களால் பரிசீலிக்கப்பட்டது.

(ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணாமற்போன மீனவர் நால்வரும் மாலைதீவில்

## நேற்று அதிகாலை மீட்டனர் அந்நாட்டு கரையோரப் பாதுகாப்புப் படையினர்

மட்டக்களப்பு, ஜன.13

மீன்பிடித் தொழிலுக்காகச் சென்று காணாமற்போன ஏனைய 4 மீனவர்களும் படகுடன் நேற்று அதிகாலை மாலைதீவுக் கரையோரப் பாதுகாப்புப் படையினரால் பாதுகாப்பாக மீட்கப்பட்டனர்.

இந்தத் தகவலை மாலைதீவுக்கான இலங்கைத் தூதுவர் தன்னுடன் தொடர்பு கொண்டு உறுதிப்படுத்தியதாக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

கடந்த டிசெம்பர் மாதம் 24 ஆம் திகதி கல்முனையைச் சேர்ந்த 6 மீனவர்கள் மீன்பிடித் தொழிலுக்காக ஒலுவில் துறைமுகத்திலிருந்து 2 இயந்திரப் படகுகளில் கடலுக்குச் சென்றிருந்தனர்.

இதன்போது 6 மீனவர்களும் காணாமற்போனார்கள். இவர்களைத் தேடும் பணிகள் முடுக்கிவிடப்பட்டிருந்தன. ஆயினும் தேடுதலால் பயனேதும் கிடைக்கவில்லை.

நீண்ட நாள்களாக மீனவர்கள் கண்டுபிடிக்கப்படாமையால் அவர்களின் உறவினர்கள் பதற்றமடைந்தனர். தேடுதல் பணிகளை மேலும் தீவிரப்படுத்துமாறு அவர்கள் அரசைக் கோரினர்.

இந்நிலையில், காணாமற்போன மீனவர்களில் இருவர் படகு ஒன்றுடன் கடந்த 5ஆம் திகதி மாலைதீவுக் கடற்பரப்பில் அந்நாட்டுக் கடற்படையினரால் மீட்கப்பட்டிருந்தனர். ஏனைய 4 மீனவர்களையும் தேடும் பணி தொடர்ந்தது. அவர்களும் தற்போது மீட்கப்பட்டுள்ளனர்.

ஏற்கெனவே மீட்கப்பட்ட 2 மீனவர்களையும் கடந்த புதன்கிழமை நாட்டுக்கு அழைத்து வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டபோதும், ஏற்பாடுகள் முழுமை அடையாமையால் அவர்கள் இன்னமும் நாடு திரும்பவில்லை.

ஏற்கெனவே மீட்கப்பட்ட 2 மீனவர்களுடன் ஏனைய 4 மீனவர்களையும் சேர்த்து இலங்கைக்கு அழைத்து வருவதற்கு நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் அமைச்சர் கூறினார். (த)

# போலி 5000 ரூபா தாள்களுடன் இருவர் கைது



கொழும்பு, ஜன.13

போலி 5000 ரூபா நாணயத் தாள்களுடன் இரண்டு பேர் களுத்துறைப் பிரதேசத்தில் கைது செய் யப்பட்டனர்.

களுத்துறை வலயக் குற்ற விசாரணைப் பிரிவு அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

களுத்துறை கெலிடோ சந்திப் பிரதேசத்தில் இரண்டு 5000 ரூபா போலி நாணயத்தாள்களுடன் ஒருவர் கைது செய்யப்பட்டு, அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளை அடுத்து மற்றைய நபர் கைது செய்யப்பட்டார்.

அவரிடமிருந்து 55 போலி 5000 ரூபா நாணயத் தாள்கள் கைப்பற்றப்பட்டன. சந்தேகநபர்கள் வடக்கு களுத்துறைப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என்றும், அவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரியந்த ஜயக்கொடி தெரிவித்தார். (த)

## ஜி.எஸ்.பி. பிளஸ் மீண்டும் கிடைக்க

# சிறப்பான அயலுறவு கொள்கையே காரணம்

## ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு அறிக்கை

யாழ்ப்பாணம்.ஜன.13

ஜனாதிபதி மைத்திரி மற்றும் தலைமை அமைச்சர் ரணில் தலைமையிலான கூட்டரசின் சிறந்த அயலுறவுக் கொள்கையே ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகை கிடைக்கக் காரணமென ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அது வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இலங்கை ஏற்கனவே இழந்திருந்த ஜி.எஸ்.பி பிளஸ் வரிச் சலுகையை மீண்டும் வழங்குவதற்கு ஐரோப்பிய ஒன்றியம் பரிந்துரை செய்துள்ளது.

இலங்கையில் ஏற்பட்டுள்ள சிறந்த மாற்றங்களைப் பாராட்டி, அந்தச் செயற்பாடுகளை முன்னெடுத்து செல்வதற்கான ஒத்துழைப்பாக இந்த வரிச் சலுகையை மீண்டும் வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க அரசு மேற்கொண்டுவரும் சிறந்த அயலுறவுக் கொள்கையே இந்தச் சாதகமான நிலை உருவாகக் காரணமெனப் பொருளாதார மற்றும் அரசியல் விமர்சகர்கள் தெரிவிக்கின்றார்கள்.

ஜனாதிபதி அண்மையில் ஜேர்மனிக்கு மேற்கொண்ட உத்தியோகபூர்வப் பயணத்தின்போது ஜேர்மன் தலைவர் ஏஞ்சலா மோர்கல் அம்மையாரிடம் ஜி.எஸ்.பி வரிச் சலுகையை மீண்டும் வழங்க உதவுமாறு வேண்டுகோள் விடுத்திருந்தார்.

இதற்கமைய அந்த வரிச் சலுகையை இலங்கைக்குப் பெற்றுக்கொடுக்கத் தலையிடுவதாக ஜேர்மன் தலைவர் ஜனாதிபதியிடம் தெரிவித்திருந்தார்.

இதன் பின்னர் மேற்கொண்ட அனைத்து உத்தியோகபூர்வப் பயணங்களின்போதும், ஐரோப்பிய அரச தலைவர்களைச் சந்திக்கும் சந்தர்ப்பங்களிலெல்லாம், ஜனாதிபதி இந்த விடயம் தொடர்பாக அவர்களது கவனத்தை ஈர்க்க நடவடிக்கை எடுத்திருந்தார்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் உடன்பாட்டுடன் ஜி.எஸ்.பி பிளஸ் வரிச் சலுகை மீண்டும் கிடைப்பதன் ஊடாக நாட்டின் ஆடைத் தொழில்துறையில் புதிய உத்வேகம் ஏற்படுவதுடன், நாட்டின் ஏற்றுமதி வருமானம் வளர்ச்சியடையும்-என்றுள்ளது. (த-ரி)

# ஜோசப் வாஸ் ஆண்டாக 2017

கொழும்பு, ஜன 13

இந்த வருடத்தை புனித ஜோசப் வாஸ் வருடமாக, கொழும்பு பேராயர் அலுவலகம் பிரகடனப்படுத்தியுள்ளது. இது தொடர்பான அறிவித்தலை கொழும்புப் பேராயர் கார்டினல் மல்கம் ரஞ்சித் ஆண்டகை விடுத்துள்ளார்.

வழிபாடுகளை நிலைப்படுத்துவதற்கு 'வாஸ் அடிகளார் வழியில் செயற்படுங்கள் என்ற தொனிப் பொருளின் கீழ், இவ்வருடத்துக்கான செயற்பாடுகள்' முன்னெடுக்கப்படும் என்று அவர் தெரிவித்தார்.

கொழும்புப் பேராயர் இல்லத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே, ஆண்டகை மேற்கண்டவாறு கூறினார்.

புனித ஜோசப் வாஸ் அடிகளாரின் வருடத்தை, உத்தியோகபூர்வமாக அறிவிக்கும் நிகழ்வுகள், நாளை, நாளை மறுதினம் மற்றும் 16ஆம் திகதிகளில் அனைத்து ஆயர் இல்லங்களிலும், தேவாலயங்களில் இடம்பெறும் என்றும் அவர் கூறினார். (த)

# பன்னாட்டு முதலீட்டாளர் வதிவிட விசா பெற வசதி

கொழும்பு, ஜன.13

இலங்கையில் முதலீடு செய்யும் பன்னாட்டு முதலீட்டாளர்களுக்கு வதிவிட நுழைவிசைவு வழங்கத் தீர்மானித்துள்ளதாக நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார். இலங்கையில் குறைந்தது 3 இலட்சம் அமெரிக்க டொலர்களை முதலீடு செய்யும் பன்னாட்டு முதலீட்டாளர்களுக்கே வதிவிட நுழைவிசைவு வழங்கப்படும் என நிதி அமைச்சர் கூறினார்.

அவ்வாறு முதலீடு செய்யும் முதலீட்டாளர்களுக்கு 2 தொடக்கம் 5 வருட வதிவிட நுழைவிசைவு வழங்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார். 2017ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்துக்கு இணங்கவே இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்பட்டது. (த)

# முஸ்லிம்களின் பிரச்சினை அமெரிக்காவின் கவனத்துக்கு

கொழும்பு, ஜன. 13

இலங்கை வாழ் முஸ்லிம்கள் எதிர்நோக்கும் சமகால பிரச்சினைகள் அமெரிக்காவின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அதுல் கேசாப்புக்கும் 'முஸ்லிம் கவுன்ஸில் ஒப் சிறிலங்கா' பிரதிநிதிகளுக்கும் இடையில் கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதுவரின் இல்லத்தில் நேற்றுமுன்தினம் சந்திப்பு நடைபெற்றது.

முஸ்லிம்களுக்கு எதிரான வெறுப்புப் பேச்சு, வில்பத்து விவகாரம் குறித்தும் அமெரிக்கத் தூதுவருக்கு விளக்கமளிக்கப்பட்டுள்ளது. சிறுபான்மையினத்தவர்களுக்குப் பிரச்சினைகள் ஏற்படுகின்றபோது, நாட்டில் சட்டம் முறையாகச் செயற்படுவதில்லை எனவும் சுட்டிக் காட்டப்பட்டது.

'நீங்கள் முன்வைத்த பிரச்சினைகளில் அநேகமானவை பற்றி நாம் அறிந்தே வைத்துள்ளோம். நாட்டுச் சட்டதிட்டங்களை மதிக்கும் வகையில் நீங்கள் செயற்படுவது மகிழ்ச்சியளிக்கின்றது. முன்வைக்கப்பட்ட பிரச்சினைகள் குறித்து எங்களால் முடிந்தவற்றை நாம் செய்வோம்' என்று இதன்போது அமெரிக்கத் தூதுவர் குறிப்பிட்டார். (த-5)

# சதி செய்வதே மகிந்தவின் வேலை

## அசாத் சாலி குற்றச்சாட்டு

ஆட்சிக் காலத்தில் கொள்ளையடிப்பதிலேயே குறியாக இருந்த முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச, தற்போது, நாட்டின் அமைதியைக் கெடுக்கும் வேலைகளில் ஈடுபட்டுள்ளதாக தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவர் அசாத் சாலி குற்றஞ்சாட்டினார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் தெரிவித்ததாவது:

40 வருடங்களுக்கே அம்பாந்தோட்டைத் துறைமுகத்தைச் சீனாவுக்கு வழங்குவதற்கு எதிர்பார்த்ததாகவும், 750 மில்லியன் டொலர்களை நாட்டுக்கு வருமானமாகப் பெற்றுக்கொள்வதற்கு வாய்ப்புக் காணப்பட்டதாகவும், ரணில் விக்ரமசிங்க அதனை இல்லாமல் செய்துள்ளதாகவும் மகிந்த தெரிவித்துள்ளார்.

எனினும் தான் சீனாவுக்கு ஆதரவு எனவும் அவர் கூறுகின்றார். எமக்கும் அது தெரியும். சீனா இல்லாவிடின் மகிந்த இல்லை. ஊடகங்களில் வெளியிடும் கருத்துக்களை முடிந்தால் நாடாளுமன்றில் வெளியிடுமாறு மகிந்த ராஜபக்சவுக்கு நான் வேண்டுகோள் விடுக்கின்றேன்.

இலட்சக்கணக்கான மக்கள் உங்களுக்கு வாக்களித்து நாடாளுமன்ற உறுப்பினராக்கியிருக்கின்றார்கள். ஆகவே நாடாளுமன்றத்திற்கு செல்லுங்கள். பிரதமரிடம் இது தொடர்பில் கேள்வி எழுப்புங்கள். நாடாளுமன்றில் வாக்கெடுப்பு நடைபெற்றால் அதில் பங்கேற்பதில்லை. கூட்டத்தில் பங்கேற்பதில்லை.

வெளியில் இருந்துகொண்டு கருத்துக்களை வெளியிடுகின்றார். நாடாளுமன்ற உறுப்பினருக்கான சம்பளம், முன்னாள் ஜனாதிபதிக்கான சம்பளம் உள்ளிட்ட அனைத்துச் சலுகைகளையும் பெற்றுக்கொண்டு. வீடுகளுக்குச் சென்று கோப்பியைக் குடித்துக் கொண்டு சதித்திட்டங்களைத் தீட்டுவதே அவரது வேலை. ஆட்சிக் காலத்தில் கொள்ளையிட்டது போதும். இன்றாவது நாட்டை அமைதியாக இயங்க விடுங்கள்-என்றார். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விற்பனைக்கு

யாழ். நகரின் வர்த்தக மையப் பகுதியில் பஸ் தரிப்பிடத்திற்குப் பின்புறமாக மின்சார நிலைய வீதியில் இரு கடைகளும், யாழ். ஆஸ்பத்திரி வீதியில் ஆஸ்பத்திரிக்கு முன்பாக ஆஸ்பத்திரி வீதி முகப்புடன் 10 பரப்புக்காணியும், யாழ். K.K.S வீதியில் இந்துக் கல்லூரிக்கு அண்மையில் 5 பரப்புக் காணியும் உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு: கனகசபை தர்மகுலசிங்கம்
189, 191, 193, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
077 723 2535



MAJESTIC CINEPLEX
A CEYLON THEATRES CINEMA Jaffna
கார்கில்ஸ் ஸ்குவெயர்
(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)
இப்பொழுது திரையில்




மஜெஸ்டிக் ப்ளாட்டினம்
10.00 / 1.00 / 4.00 / 7.00
வெள்ளி/சனி 9.30 PM
சில்வர்
10.15 / 1.15 / 4.15 / 7.15
வெள்ளி/சனி 9.15 PM
ப்ரொன்ஸ்
10.30 / 1.30 / 4.30 / 7.30
வெள்ளி/சனி 9.30 PM
விசாரணை ☎ 021- 2227712
facebook. CeylonTheatres
www.ceylontheatres.lk



## வீடு வாடகைக்கு

இல.106, பலாலிவீதி, யாழ்ப்பாணத்தில் (இலுப்பையடிச் சந்திக்கு அருகில்) அடிப்படை வசதிகள் கொண்டதும், சமையலறை, 2 விறாந்தை, 3 அறைகள் கொண்ட வீடு வாடகைக்குண்டு. அரச உத்தியோகத்தர்கள் விரும்பத்தக்கது. (j7594) (14,17,18)

தொடர்பு: 076 333 7045



FALC FRENCH LANGUAGE CENTRE
பிரெஞ்சு மொழி வகுப்பு



Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட International Diploma in French இலகுவாக எழுத, வாசிக்க, சரியான உச்சரிப்புடன் கதைக்க ....

2006 முதல் இன்று வரை
1185 மாணவர்கள்

IELTS
Life Skills A1,B1
வகுப்புக்களும்...

இல. 40 , பலாலி வீதி,
(ஆரியகுளம்)
15.01.2017 மு.ப .10.00
077 978 9456,021 221 7781

No.181,1St Floor
பிரதான வீதி, நெல்லியடி.
16.01.2017 பி.ப 3.30
021 320 2973


## திறப்பு விழா பொதுக்கூட்ட அறிவித்தல்

நாளை (14.01.2017) சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு புனர்நிர்மாணம் செய்யப்பட்ட எமது சங்க அலுவலக கட்டட திறப்பு விழாவும் 15.01.2017 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு சங்ககாரியாலயத்தில் பொதுக்கூட்டமும் நடைபெறும் என்பதை அங்கத்தவர்களுக்கு அன்புடன் அறியத்தருகின்றோம். அனைவரையும் தவறாது சமுகமளிக்கும்படி பணிவுடன் வேண்டுகின்றோம்.

தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கம் (J 7622) (22,18)

# ஜி.சீ.ஈ. உயர் தரப் பரீட்சை பெறுபேறுகள்

யாழ்ப்பாணம், ஜன.13

ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள் கடந்த சனிக்கிழமை வெளியாகின.

பாடசாலைரீதியாகக்கிடைத்தபெறுபேறுகளின் விவரம் வருமாறு:

**மல்லாகம் மகாவித்தியாலயம்**

**கலைப்பிரிவு**

ரா.டெதுஷா 2ஏபி, புலக்சியா 2ஏபி, கா.வைசா 2பிசி, பூ.சுகன்யா ஏபிசி, சி.யர்சினி ஏபிசி, என்.கௌசியா பி2சி, ஜே.ஜென்சியா பி2சி, எஸ்.டன்சிகா 2பிஎஸ், எஸ்.சனுசியா பிசிஎஸ், பி.யாமினி ஏபிசி, எஸ்.ஜிவியா பிசிஎஸ், வை. வசந்தன் ஏசிஎஸ்.

**வர்த்தகப் பிரிவு**

ஏ.காயத்திரி பி2சி, எஸ்.கஜமுகன் 3சி, யூ.தாட்சாயினி சி2எஸ்.

**வன்னேரிக்குளம் மகா வித்தி.**

**கலைப்பிரிவு**

செ.சர்வேஸ்வரன் 3ஏ, வை.பார்த்தீபன் 2ஏபி, ரா.நிறோஜன் ஏ2பி, வி.பிரதீப் ஏ2சி.

(தொடரும்)


## தவறிவிட்டது

து.விதுஷன் ஆகிய எனது சாரதி அனுமதிப்பத்திரமும் முக்கிய ஆவணங்களும் இருபாலைக்கும் . யாழ்ப்பாணத்துக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து 077 656 9654 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

## வாடகைக்கு

வைமன் வீதிச் சந்திக்கு அண்மையாக நாவலர் வீதியில் ஒரு அறை இணைந்த குளியலறை, மிகச் சிறிய சமையலறை திறந்த விறாந்தையுடன் அனெக்ஸ் வாடகைக்கு உண்டு.
சிறிய அரச உத்தியோகத்தர் குடும்பத்தினர் விரும்பத்தக்கது. வாடகை 10 000/=, முற்பணம் 125 000/= தேவையற்ற விசாரணைகளைத் தவிர்க்கவும்.

076 660 4584


## அறிவித்தல்

**யாழ்- வண்ணை அருள்மிகு ஸ்ரீ வீரமாகாளி அம்மன் தேவஸ்தானம்**

அம்பாள் அடியார்களுக்கும்/ உபயகாரர்களுக்கும்

மேற்படி ஆலய முன் மண்டபத்தில் 2017.01.15 ஆம் திகதி ஞாயிறு மாலை 4.30 மணியளவில் 2017 ஆம் ஆண்டுக்கான உபயக்கட்டண அதிகரிப்பு, திருப்பணி வேலைகள் சம்பந்தமான கலந்துரையாடல் நடைபெற உள்ளதால் ஆலய குருக்கள், மங்கல வாத்தியக்காரர், பூமாலை வழங்குபவர், உபயகாரர்கள், அடியார்கள், நலன்விரும்பிகள், தொண்டர்கள் போன்ற சகலரும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

து.சிறீமோகன்
பெறுநர்/பதிவாளர், மாவட்ட நீதிமன்றம்,
யாழ்ப்பாணம். (J 7618) (22,18)


ICBT CAMPUS JAFFNA
www.icbt.lk



SOFTWARE ENGINEERING
HND & BSc (Hons)
RECOGNIZED BY UGC

Qualified Lecture Panel | Library, Laboratory, Modern Lecture Hall facilities
Cafeteria | Recreation Area | Student Friendly Environment | Easy Payment
Accredited by:
Cardiff Metropolitan University, UK | European Quality Assurance Agency | NAARIC
580,Hospital Rd., Jaffna | Tel: -0214 777 888
0770 746 553 | 0769 289 784


## சேவைநலன் பாராட்டு

13.01.2017 இல் மணிவிழாக் காணும் எமது கல்லூரியின் சிரேஷ்ட விஞ்ஞான ஆசிரியர்

**திருமதி ரோகினிதேவி யோகநாதன்**

(Special Td- Science)

அவர்களின் சேவை நலன் பாராட்டு



சேவை விவரம்

16.03.1998-31.08.2000- யா/பத்தமேனி இரத்தினேஸ்வரி வித்தியாலயம்
01.09.2000-15.05.2002- பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலை
16.05.2002-06.06.2002- யா/பத்தமேனி இரத்தினேஸ்வரி வித்தியாலயம்
07.06.2002-இன்று வரை- யா/ அச்சுவேலி மத்திய கல்லூரி

சேவையிலிருந்து ஓய்வு பெறும் இவ்வேளை அவரது சேவையை மனமாரப் பாராட்டுவதுடன் இவரது ஓய்வுக் காலம் சீரும் சிறப்புமாக அமைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

Congratulations

ஆசிரியர் கழகம்– யா/ அச்சுவேலி மத்திய கல்லூரி

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யாழ் பல்கலைக்கழகத்தின்
32 ஆவது பட்டமளிப்பு
விழாவில்
நுண்கலைமாணி
(BFA) பட்டம் பெற்ற
எமது அன்பு மகள்

**செல்வி உதயகுமார் கார்த்திகா**

மேலும் பல பட்டங்கள் பெற்று சீரும் சிறப்புடனும் வாழ வாழ்த்துகின்றோம்



Congratulations

வாழ்த்துவோர்:- குடும்பத்தினர்
உதயகுமார் (கிளி), ஜீவமலர், கார்த்தீபன், சானுகா, கஜானன்
தேவாலய வீதி, சங்கானை.
நிரந்தரமுகவரி: பலாலி மேற்கு, வசாவிளான்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



தமிழ் விருட்சம், கலை இலக்கிய நண்பர்கள் வட்டம், வரியிறுப்பாளர் சங்கம் என்பவை இணைந்து ஏற்பாடு செய்த சுவாமி விவேகானந்தரின் 154 ஆவது பிறந்ததின நிகழ்வு நேற்று வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு, வவுனியா புகையிரத நிலைய வீதியில் அமைந்துள்ள சுவாமி விவேகானந்தர் சிலை முன்பாக நடைபெற்றது.(ற-5)

# முல்லை. மாவட்டத்தில் வறட்சியால் 21,000 ஏக்கர் நெற்செய்கை முற்றாக அழிவு

முல்லைத்தீவு, ஜன.13
முல்லைத்தீவு மாவட்டத்தில் காலபோகச் செய்கை மேற்கொள்ளப்பட்ட 40 ஆயிரம் ஏக்கர் நெற் செய்கையில் 21 ஆயிரத்து 339 ஏக்கர் நெற் செய்கைகள் வறட்சியால் முழுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு முல்லைத்தீவு மாவட்ட கமநல சேவைகள் திணைக்கள உதவி ஆணையாளர் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:
எஞ்சியுள்ள நெற் பயிர்களைப் பாதுகாப்பதற்கு குளங்கள் மூலம் நீர் இறைக்க எரிபொருள் வழங்க வேண்டும் என்று விவசாயிகள் கோரியுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் 2016ஆம் ஆண்டு காலபோகச் செய்கையில் 40 ஆயிரம் ஏக்கர் பயிர் செய்யப்பட்டது. தற்போது 21 ஆயிரத்து 339 ஏக்கர் முழுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. சில தினங்களுக்குள் மழை பெய்யாது விட்டால் சுமார் 30 ஆயிரம் ஏக்கர் வரையான நெற்செய்கை அழியும் அபாயம் உள்ளது.

உடையார்கட்டுக் குளம், கணுக்கேணிக்குளம், அம்பலப் பெருமாள்குளம், மருதங்குளம் ஆகிய குளங்களின் கீழ் உள்ள 10 கமநல சேவை நிலையங்களுக்குட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட நெற் செய்கைகளே தற்போது பாதிக்கப்படாதுள்ளன. அந்தப் பகுதிகளைச் சேர்ந்த 7ஆயிரத்து 727 விவசாயிகள் நீர் இறைப்பதற்கு எரிபொருள் பெற்றுத் தருமாறு முல்லைத்தீவுமாவட்ட கமநல சேவைத் திணைக்களத்திடம் கோரிக்கை விடுத்துள்ளனர். அவர்களின் கோரிக்கையை மாவட்ட செயலருக்கு அனுப்பியுள்ளோம். வயல் நிலங்களில் கிணறுகள் அமைக்க வேண்டும் என்றும் விவசாயிகள் கோரியுள்ளனர் - என்றார். (ற-21,7)

## நெல்சிப் திட்டங்களை உலகவங்கி ஆராயும்

யாழ்ப்பாணம், ஜன.13
நெல்சிப் – புறநெகும திட்டத்தின் கீழ் உள்ளூராட்சிச் சபைகளால் முன்னெடுக்கப்பட்ட உட்கட்டுமான அபிவிருத்தித் திட்டங்களை உலக வங்கியின் தேசிய திட்டப்பிரிவு ஆராயவுள்ளது.

வடக்கு மாகாண சபை உறுப்பினர்களால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய திட்டங்களின் சாதக, பாதக மற்றும் விவரண அறிக்கை தொடர்பாக ஆராயப்படவுள்ளது.

வடக்கு மாகாணத்தில் நெல்சிப்திட்டம் 2011ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு 2016ஆம் ஆண்டு முடிவடைந்தது. பெரும்பாலான உள்ளூராட்சிச் சபைகளில் முன்னெடுக்கப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களின் முன்னேற்ற விவரங்களில், வடமாகாண சபை உறுப்பினர்கள் திருப்தி காணப்படாத சூழல் காணப்படுகின்றது. பல நிபுணர் குழுக்கள் ஆராய்ந்த போதும் திட்டங்கள் தொடர்பில் தெளிவு கிடைக்காத நிலையிலேயே தேசிய திட்டப்பிரிவு அவற்றை ஆராயவுள்ளது என்று வட மாகாண முதலமைச்சரின் அமைச்சு தெரிவித்தது. (ற-50)



## கிளிநொச்சியில் முழுவீச்சில் டெங்கு ஒழிப்பு

கிளிநொச்சி, ஜன. 13
கிளிநொச்சி மாவட்டத்தில் டெங்குத் தொற்று அதிகரித்துள்ளதை அடுத்து அதைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் முடுக்கி விடப்பட்டுள்ளன. பொதுச் சுகாதாரத் துறையினரும், பாதுகாப்புத் தரப்பினரும் இணைந்து டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளில் இறங்கியுள்ளனர்.

நடப்பு ஆண்டின் முதல் பத்து நாள்களுக்குள் டெங்குத் தொற்றுக்குள்ளான 14 பேர் கிளிநொச்சி மாவட்டத்தில் அடையாளம் காணப்பட்டனர். டெங்குத் தொற்று மேலும் அதிகரிப்பதற்கு முன்னர் நிலைமையைக் கட்டுக்குள் கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. டெங்கு நுளம்பு பெருகும் இடங்கள் என்று சந்தேகிக்கப்படும் இடங்கள், பொது இடங்கள் முழுமையாகத் துப்புரவு செய்யப்படுகின்றன. டெங்கு விழிப்புணர்வுச் செயற்பாடும் சமாந்தரமாக முன்னெடுக்கப்படுகின்றது.

நேற்றுமுன்தினம் புதன்கிழமை, ஆனந்தபுரம் கிராம அலுவலர் பிரிவில் உள்ள 637 வீடுகளில் 236 வீடுகளில் சோதனை நடத்தப்பட்டது. 93 இடங்களில் டெங்கு நுளம்பு பரவுவதற்கான சூழல் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. அவை உடன் சுத்திகரிப்புச் செய்யப்பட்டன. மாவட்டப் பொது வைத்தியசாலையில் 15 இடங்கள் அடையாளம் காணப்பட்டன. அவையும் துப்புரவு செய்யப்பட்டன.

பொதுமக்கள் அதிகளவில் ஒன்றுகூடும் கிளிநொச்சி பொதுச் சந்தை, புகையிரத நிலையம் என்பவற்றில் 12 இடங்கள் டெங்கு நுளம்பு பெருகுவதற்கு ஏற்ற சூழல் உள்ளவையாக அடையாளம் காணப்பட்டு அழிக்கப்பட்டன. மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் டெங்கு ஒழிப்புச் செயற்பாடுகள் நேற்றும் முன்னெடுக்கப்பட்டன. (ற-5,35)



பமுல்லைத்தீவு மாவட்டத்தில் 5 மில்லியன் ரூபா நிதியில் அமைக்கப்பட்ட கருவாடு பதனிடும் நிலையம் கடந்த செவ்வாய்க்கிழமை முல்லைத்தீவு மாவட்டச் செயலாளர் திருமதி ரூபவதி கேதீஸ்வரனால் திறந்து வைக்கப்பட்டது. ஜனாதிபதியின் இரண்டு வருட ஆட்சி நிறைவை முன்னிட்டு தேசிய ஒருமைப்பாட்டுக்கும் நல்லிணக்கத்துக்குமான அலுவலகத்தின் நிதியுதவியுடன் முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள ஏழ்மை நிலையில் உள்ள மீனவக் குடும்பங்களுக்கு கருவாடு பதனிடும் உபகரணங்கள் வழங்கப்பட்டன. விற்பனை நிலையமும் திறக்கப்பட்டது. (ற)

## ரில்லர் விழுந்து சிறுமி காயம்

முல்லைத்தீவு, ஜன.13
விளையாடிக் கொண்டிருந்த 5 வயதுச் சிறுமி தலையில் துளையிடும் கருவி (ரில்லர்) விழுந்து காயமடைந்தார். இந்தச் சம்பவம் ஒட்டுசுட்டான், புளியங்குளத்தில் நடந்துள்ளது.

கமலநாதன் நிசாயினி என்ற சிறுமியே காயமடைந்தார். நேற்றுக்காலை தச்சு வேலைகள் நடைபெறும் இடத்தில் சிறுமி விளையாடிக் கொண்டிருந்தார். மேசையில் இருந்த துளையிடும் கருவி தவறுதலாக அவரின் தலையில் விழுந்துள்ளது. அதில் காயமடைந்த சிறுமி ஒட்டுசுட்டான் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைகளுக்காக மாஞ்சோலை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். (ற-5,7)

## பாடசாலை செல்ல வேண்டும் என்பதற்காகவே சைக்கிள்கள்

### வடக்கு விவசாய அமைச்சர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன.13
வறுமைக்கோட்டுக்குட்பட்ட மாணவர்களுக்குத் துவிச்சக்கர வண்டிகள் வழங்குவது 90 புள்ளிகளைப் பெறும் மாணவர்கள் 100 புள்ளிகளைப் பெறவேண்டும் என்பதற்காக அல்ல. அவர்கள் பாடசாலை செல்ல வேண்டும், சத்துணவு உண்ண வேண்டும் என்பதற்காகவே.

இவ்வாறு தெரிவித்தார் வடக்கு மாகாண விவசாய அமைச்சரும் பதில் முதலமைச்சருமான பொ.ஐங்கரநேசன். ‘2017ஆம் ஆண்டு வறுமையில் இருந்து விடுபடும் ஆண்டு’ எனும் தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் வடக்கு மாகாணத்துக்கான ஆரம்ப நிகழ்வு நேற்றுமுன்தினம் யாழ். பொது நூலகத்தில் நடைபெற்றது. அதில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:
போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவக்கூடிய பொறிமுறை ஒன்று இல்லாதபோதும், நாம் சில உதவிகளைச் செய்கின்றோம். அவை குறித்து ஆயிரம் கேள்விகள் எழுப்பப்படுகின்றன. கால்நடைகள் வழங்குகின்றோம். அவை வயிற்றில் கன்றுடன் இருக்கும்போது மாடுகளின் பருமனில் வித்தியாசம் இருக்கும். கன்று ஈன்ற பின்னர் அவற்றை பார்வையிடும் கணக்காய்வினர் பருமன் தொடர்பில் கேள்வி எழுப்புகின்றனர். கடந்த ஆண்டும் நாம் விவசாய, கால்நடைத் திணைக்களத்தின் ஊடாக வறுமைக்கோட்டின் கீழுள்ள மக்களுக்கு உதவி புரிந்து கணிசமான அளவு அவர்களைவறுமையில் இருந்து மீட்டோம். எமது மாகாணத்தின் வறுமையை இவை எவ்வளவு தூரம் ஒழிக்கும் என்பது கேள்விக்குறியே.

இலங்கையில் 6 மாவட்டங்கள் வறுமை நிலையில் உள்ளன. அவற்றில் 3 மாவட்டங்கள் வடக்கில் உள்ளன. தினந்தோறும் பல பட்டதாரிப் பெண்கள் உட்பட வேலை கோரி அலுவலகத்துக்கு வருகின்றனர். அவர்கள் 500 ரூபாவுக்கும் மேலாகச் செலவு செய்து 4 அல்லது 5 வேலைக்கு விண்ணப்பித்தும் வேலை கிடைக்கவில்லை. தொடர்ந்து விண்ணப்பிக்கப் பணமில்லாத நிலமையில் உள்ளனர். போர் காரணமாக உழைக்கும் ஆண்கள் அழிக்கப்பட்டனர். பலஆண்கள் முடமாக்கப்பட்டனர். இவற்றால் பெண்களே தொழில் வாய்ப்பைத் தேடவேண்டியுள்ளது -என்றார். (ற-101)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதிக்கப்பட்ட பதிலதிபர்களுக்கு பதவிகளை வழங்குக

## உடுவில் கல்விக்கோட்ட அதிபர் சங்கம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன. 13

உடுவில் கல்விக் கோட்டத்தில் பாதிக்கப்பட்ட பதில் அதிபர்களுக்கு பொருத்தமான பாடசாலைகளில், கௌரவமான பதவிகள் விரைவாக வழங்கப்பட வேண்டும்.

இவ்வாறு உடுவில் கல்விக் கோட்ட அதிபர் சங்கத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர். அதிபர் சங்கத்தால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:

புதிய தரம் - 3 அதிபர் நியமனத்தால் பாதிக்கப்பட்ட எமது கோட்ட சகோதர பதிலதிபர்களின் நிலமை தொடர்பாக எங்கள் கோரிக்கையை தயவாக முன்வைக்கிறோம். கடந்த காலங்களில் பாடசாலைகளில் அதிபர் பதவிகள் வெற்றிடமான போது ஆசிரியர்களில் ஒரு சிலர் துணிந்து பொறுப்பேற்றனர். மாணவரின் கல்வியில் பின் னடைவு ஏற்படாத வகை யில் கடமையை முன்னெடுத்துச் சென்றனர். போர்க் காலங்களில் கூட தமது சொந்தப் பணத்தைச் செலவு செய்தும், மேலதிக நேரம் உழைத்தும் வட மாகாணத்தின் கல்விச் செயற்பாடுகள் சிதைவடையாது ஓரளவேனும் பாதுகாத்தனர்.

தமக்கு நியமனம் கிடைக்குமென்று நம்பிக்கையூட்டப்பட்டு காத்திருந்த பதிலதிபர்கள், தற்போதைய நிலை மையில் விரக்தி அடைந்துள்ளனர். இவர்கள் உளப் பாதிப்பு அடையக்கூடிய நிலமையும் உள்ளது - என்றுள்ளது.

உடுவில் கல்விக் கோட்டத்தில் பாதிக்கப்பட்ட பதிலதிபர்களில் இருபது பேர் இந்த அறிக்கையில் கையெழுத்திட்டுள்ளனர். 7 பேர் கையெழுத்திடவில்லை. (ற-5,ரி)

# மோதிய பெண்களுக்கு மறியல்

காணித் தகராறால் மோதலில் ஈடுபட்ட இருபெண்களைவிளக்கமறியலில்வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்று உத்தரவிட்டது.

சாவகச்சேரி சங்கத்தானைப் பகுதியில் இடம்பெற்ற மோதல் சம்பவமொன்று தொடர்பாக சாவகச்சேரி பொலிஸார் இரு பெண்களைக் கைது செய்து சாவகச்சேரி நீதிமன்றில் நேற்றுமுன்தினம் முற்படுத்தினர்.

வழக்கை விசாரித்த நீதிவான் இரு பெண்களையும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (ற-9)



வவுனியா புகையிரதநிலைய வீதியில், தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபையால் குடி தண்ணீர்க் குழாய் பொருத்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. அதற்காக வர்த்தக நிலையங்கள் முன்பாகப் பெரும் குழிகள் வெட்டப்பட்டுள்ளன. மூன்று தினங்கள் கடந்தும் அவை மூடப்படாமல் உள்ளதால் சிரமங்களை எதிர் கொள்ள வேண்டியுள்ளது என்று வர்த்தகர்கள் தெரிவித்தனர். (ற-5)

# திண்மக் கழிவகற்றல் 60% வெற்றி

## யாழ். மாநகர ஆணையாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜன.13

யாழ். மாநகரப் பகுதியில் முன்னெடுக்கப்பட்டு வரும் திண்மக் கழிவுகளை தரம் பிரித்துச் சேகரிக்கும் நடைமுறை அறுபது வீதம் வெற்றியளித்துள்ளது.

இவ்வாறு மாநகர ஆணையாளர் பொ.வாகீசன் தெரிவித்தார். அவர் தெரிவித்ததாவது-

அரசால் நாடுமுழுவதும் கடந்த நவம்பர் மாதத்தில் திண்மக் கழிவுகளைத் தரம் பிரித்து சேகரிக்கும் நடைமுறை நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டது.

கடந்த நவம்பர் மற்றும் டிசெம்பர் மாதங்களில் மாநகரப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட திண்மக் கழிவுகளைத் தரம் பிரித்து சேகரிக்கும் நடைமுறை ஓரளவு வெற்றியளித்துள்ளது.

திண்மக் கழிவுகளை மக்கள் தரம்பிரித்து வேறாக்கி கழிவகற்றும் பிரிவினரிடம் ஒப்படைக்கின்றனர். மாநகரப் பகுதியில் உள்ள சகல குடியிருப்பாளர்களும் தமது சுற்றாடல்களில் தேங்கும் திண்மக் கழிவுகளை தரம்பிரித்து பொதியாக்கி கழிவகற்றும் பிரிவினரிடம் ஒப்படைக்க வேண்டும்.

குடியிருப்பாளர்கள் சிலர் தமது சுற்றாடல்களில் அகற்றும் கழிவுகளை வீதியோரங்களில் கொட்டிச் செல்கின்றனர். அவ்வாறு செய்வதை உடன் நிறுத்த வேண்டும். மக்களிடம் இருந்து சேகரிக் கப்பட்ட திண்மக்கழிவுகள், அதாவது தரம் பிரிக்கப்பட்ட கழிவுகளைப் பெற்றுக் கொள்ளாத கழிவகற்றும் பிரிவினர் குறித்து மக் கள் நேரடியாக என்னிடம் முறையிடலாம்.- என்றார். (ற-17)

# விபத்தில் மூவர் காயம்

கோப்பாய் மதவடிப்பகுதியில் நேற்று மு.ப. 11.30 மணியளவில் நடைபெற்ற விபத்தில் கோப்பாய் குமரபுரத்தைச் சேர்ந்த குழந்தை உட்பட மூவர் காயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

குமரபுரத்தைச் சேர்ந்த மூவரும் கைதடி நோக்கி சிறியரக மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்தனர். பின்புறமாக வந்த படிரக வாகனம் மோதியது என்று பொலிஸார் தெரிவித்தனர். காயமடைந்தவர்கள் கோப்பாய் வைத்திய சாலை நோயாளர் காவு வண்டி மூலம் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். (ற-ரி)

# போராளிகள் குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகள்

மன்னார், ஜன.13

புனர்வாழ்வு வழங்கப்பட்ட போராளிகள், போரில் இறந்த போராளிகளது குடும்பங்கள், தடுப்பில் உள்ள அரசியல் கைதிகளது குடும்பங்கள், போராட்டக் குழுக்களில் இருந்து இறந்தவர்களது குடும்பங்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் வகையில் வடக்கு கிராம அபிவிருத்தி அமைச்சால் மேற்கொள்ளப்பட்டு வரும் உதவித் திட்டத்தின் இரண்டாம் கட்ட உதவிகள் நேற்றுமுன்தினம் மன்னாரில் வழங்கப்பட்டன.

2014 ஆம் ஆண்டு வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி அமைச்சர் பா.டெனிஸ்வரனால் கொண்டுவரப்பட்ட கொள்கைப் பிரகடனத்துக்கு அமைவாக ஆரம்பிக்கப்பட்ட திட்டத்துக்கு அமைய தலா 50 ஆயிரம் ரூபா பெறுமதியான வாழ்வாதார உள்ளீடுகள் 2015 ஆம் ஆண்டு வடக்கு மாகாணம் முழுவதுமாக 860 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டன.

2016 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டில் ஒவ்வொரு மாவட்டத்திலும் 100 குடும்பங்கள் வீதம் 500 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு உதவிகள் வழங்கப்பட்டன. மன்னார் மாவட்டத்தில் இதுவரை 52 பயனாளிகளுக்கு வாழ்வாதார உள்ளீடுகள் வழங்கப்பட்டுள்ளன.

இரண்டாம் கட்டமாக நேற்றுமுன்தினம் முற்பகல் 11 மணியளவில் மன்னார் மாவட்டத்தில் உள்ள அமைச்சரது உப அலுவலகத்தில் வைத்து 16 குடும்பங்களுக்கான வாழ்வாதார உள்ளீடுகள் அமைச்சர் பா.டெனிஸ்வரனால் வழங்கப்பட்டன.

7 குளிர்சாதனப் பெட்டிகள் தத்தமது வியாபாரத்தை மேம்படுத்தவும், மாடு வளர்ப் புக்கு 6 பேருக்கும், கோழி வளர்ப்புக்கான உள்ளீடுகளைக் கொள்வனவு செய்ய 2 பயனாளிகளுக்கும், தோட்டச் செய்கைக்கு குழாய்க் கிணறு அடிப்பதற்காக ஒரு பயனாளிக்குமாக மொத்தம் 9 காசோலைகளும் வழங்கப்பட்டன. (ற-21)



பாராட்டி வாழ்த்துகின்றோம்

11.01.2017 புதன்கிழமை நடைபெற்ற
யாழ்.பல்கலைக்கழக 32 ஆவது
பட்டமளிப்பு விழாவில்
நுண்கலைமாணி
(BFA) பட்டம்பெற்ற

திருமதி கஜானனி
கலைச்செல்வன்

அவர்களை கல்வியிலும்
தொழிலிலும் சிறப்புற்று வாழ்வில்
எல்லாச் செல்வங்களையும் பெற்று
வளமுடன் வாழ மனதார
வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர் -
குடும்பத்தினர்.



# தீர்வு கிடைக்கும் வரை ஐ.நா. தமிழருக்கு உதவ வேண்டும்

## முல்லை.மாவட்ட குடிமக்கள் உரிமைக்கான அமையம் கோரிக்கை

முல்லைத்தீவு, ஜன. 13

தமிழ் மக்களுக்கு நியாயமான தீர்வு கிடைக்கும் வரையில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையும், ஆணையாளரும் தமிழ் மக்களுடன் இணைந்து இருக்க வேண்டும்.

இவ்வாறு முல்லைத்தீவு மாவட்ட குடிமக் கள் உரிமைக்கான அமையம் கோரிக்கை விடுத்துள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட குடி மக் கள் உரிமைக்கான அமையத்தினர் நேற்று முன்தினம் சிலாவத்தை பொதுநோக்கு மண்டபத்தில் செய்தியாளர் சந்திப்பொன்றை நடத்தினர். அதிலேயே இவ்வாறு கோரிக்கை விடுக்கப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட மக்கள் இன்றும் அச்சுறுத்தலுக்கு மத்தியிலே வாழ்கின்றனர். வெளி நாட்டுப் பிரதிநிதிகள் - இராஜ தந்திரிகள் எவரும் முல்லைத்தீவுக்கு வருவதில்லை. எல்லோரும் யாழ்ப்பாணம் செல்கின்றார்கள்.

போரால் பெரிதும் பாதிக்கப்பட்ட - அந்தப் பாதிப்புகளுடன் இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கும் எங்களுடைய கருத்துக்கள் கேட்கப்பட வேண்டும். தற்போது முன்னெடுக்கப்படும் நிலை மாற்றுக்கால நீதிக்கான பொறிமுறையில் முல்லைத் தீவு மக்களிடம் கருத்துக்கள் கேட்கப்பட்டன. மக்களின் கேள்விகளுக்கு இன்னும் பதில் இல்லை.

தமிழ் மக்கள் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு கிடைக்கும் வரையில் ஐ.நா. மனித உரிமைகள் சபையும், அதன் ஆணையாளரும் பாதிக் கப்பட்ட தரப்பாகிய எங்களுடன் தான் இருக்கவேண்டும்- என்று அதில் தெரிவிக்கப்பட்டது. (ற-5,7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருத்து வீடு தொடர்பில் தெளிவான முடிவு தேவை

## கிழக்கு மாகாண சபை உறுப்பினர் இரா.துரைரெட்ணம் வலியுறுத்தல்

கொக்கட்டிச்சோலை, ஜன.13

அரசின் பொருத்துவீட்டுத் திட்டம் தொடர்பில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு மக்களுக்குத் தெளிவான முடிவொன்றை அறிவிக்க வேண்டும் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் இரா.துரைரெட்ணம் குறிப்பிட்டார்.



பொருத்துவீடு விவகாரம் குறித்துக் கருத்து வெளியிட்டபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் தெரிவித்ததாவது:

போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்குப் பொருத்து வீடுகளை வழங்க அரசு திட்டமிட்டுள்ளது. நிர்ப்பந்தத்தின் காரணமாக மக்கள் இதனை ஏற்றுக்கொள்ளும் நிலை ஏற்படும். இந்த விடயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைகள் மௌனம் சாதிக்கக் கூடாது. பொருத்துவீடு தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஜனாதிபதியுடன் பேசித் தீர்வு காண வேண்டும். அல்லது ஏதும் நிபந்தனைகளுடன் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

மக்கள் விரும்பாத வீட்டைத்தான் அமைத்து கொடுப்போம் என விடாப்பிடியாக மத்திய அரசு இருப்பது உள்நோக்கம் உடையதாகவே இருக்கின்றது. வீட்டு விடயத்தில்கூடத் தமிழ் மக்களின் தலைமைகளை ஏமாற்ற முயல்வதை அநாகரிகமான செயலாகவே கருதுகிறேன். நல்லாட்சி அரசாக இருந்தால், கூட்டமைப்பின் உதவிகள் இந்த அரசுக்கு தேவையாக இருந்தால் பொருத்து வீட்டுத் திட்டத்தை மீள்பரிசீலனை செய்து மக்கள் விரும்பும் வீட்டைக் கையளிக்கவேண்டும்.

எனவே, குறிப்பிட்ட தினங்களுக்குள் மக்களுக்குப் பொருத்து வீடு தொடர்பாக தெளிவான முடிவை அறிவிப்பதோடு பாதிக்கப்பட்ட மக்களுக்கு குறிப்பிட்ட காலத்திற்குள் வீட்டைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். இது தொடர்பாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மௌனத்தைக் கலைத்து தெளிவான கருத்தை சொல்லவேண்டும் - என்றார். (த-ய)

# அரைகுறையாக அறிக்கைகளை சமர்ப்பிக்கக்கூடாது எவ்.சி.ஐ.டி.

## யோசித ராஜபக்ச வழக்கில் நீதிவான் எச்சரிக்கை

கொழும்பு, ஜன 13

தங்களது விசாரணைகள் தொடர்பில் அரைகுறை அறிக்கைகளைச் சட்டமா அதிபருக்குச் சமர்ப்பிப்பதை உடனடியாக நிறுத்துமாறு கொழும்பு மேலதிக நீதிவான் புத்திக ஸ்ரீ ராகல பொலிஸ் நிதி மோசடி விசாரணைப் பிரிவினருக்கு (எவ்.சி.ஐ.டி) கடுமையாக எச்சரிக்கை விடுத்தார்.

விசாரணையொன்று முடிந்துவிட்டதாகக் கூறிச் சட்டமா அதிபருக்கு சமர்ப்பிக்கப்படும் அறிக்கை அரைகுறையாக இருந்தால், மேலதிக நடவடிக்கைகளை எடுப்பதில் சட்டமா அதிபருக்கு முடியாமல் போவதுடன், கால தாமதமும் ஏற்படும். அத்துடன், விசாரணை பூர்த்தியாகாமல் இடைநடுவில் நிறுத்தப்பட்டு அறிக்கையை சமர்ப்பித்தால், உண்மையான குற்றவாளிகள் சமூகத்தில் சுதந்திரமாக நடமாடிக் கொண்டிருப்பார்கள். அரைகுறை விசாரணை அறிக்கைகள் மூலம் நீதியை நிலைநாட்ட முடியாது என அவர் தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் மகனான யோசித ராஜபக்ச சட்டவிரோதமாகச் சம்பாதித்த பணத்தில் 36 மில்லியன் ரூபாவுக்கு ரத்மலானையில் காணித்துண்டொன்றை வாங்கியிருப்பதாகக் குற்றஞ்சாட்டி யோசிதவுக்கும் அவரது பாட்டியான டெய்ஸி பொரஸ்டுக்கும் எதிராகத் தொடரப்பட்டுள்ள வழக்கு, விசாரணைக்கு எடுக்கப்பட்டபோதே நீதிவான் எவ்.சி.ஐ.டியினருக்கு இந்த எச்சரிக்கையை விடுத்தார்.

டெய்ஸி பொரஸ்டிடம் இருந்து மேலும் ஒரு வாக்குமூலத்தைப் பெறுவதற்கான அனுமதியை வழங்க வேண்டுமென எவ்.சி.ஐ.டியினர் விடுத்த கோரிக்கையை நிராகரித்த நீதிவான், டெய்ஸி பொரஸ்ட்டை 25 ஆயிரம் ரூபா ரொக்கப் பிணையிலும், தலா 15 இலட்ச ரூபா பெறுமதியான இரு சரீரப் பிணைகளிலும் விடுவித்ததுடன், வழக்கின் அடுத்த விசாரணையை மே மாதம் 19ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார். (தி)

# றோயல் கல்லூரி முதலாம் ஆண்டு அனுமதிகள் இடைநிறுத்தம்

கொழும்பு, ஜன 13

கொழும்பு றோயல் கல்லூரியின் 2017ஆம் ஆண்டுக்கான முதலாம் ஆண்டு அனுமதிகள் கல்வியமைச்சால் தற்காலிகமாக இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளன. இந்தக் கல்லூரியின் முதலாம் ஆண்டு அனுமதியின்போது மோசடிகள் நடந்திருப்பதாக இலங்கை ஆசிரியர் சங்கம் உட்பட பல்வேறு தரப்பினர் குற்றஞ்சாட்டியதைத் தொடர்ந்து அனுமதிகள் தற்காலிகமாக இடைநிறுத்தம் செய்யப்பட்டு விசாரணைகள் நடந்துவருவதாகக் கல்வியமைச்சின் உயரதிகாரியொருவர் தெரிவித்தார்.

றோயல் கல்லூரி உட்பட பல்வேறு பிரபல பாடசாலைகளில் முதலாம் ஆண்டு அனுமதியின்போது முறைகேடுகள் நடந்திருப்பதாகக் கிடைத்த முறைப்பாடுகளையடுத்து அந்தப் பாடசாலைகளில் விசாரணை நடத்துமாறு கல்வியமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் கடந்த வாரம் கல்வியமைச்சு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டிருந்ததையடுத்து இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (தி)

# பாடசாலைகளுக்கு இன்று விடுமுறை

கொழும்பு, ஜன 13

தைப் பொங்கலை முன்னிட்டு வடக்கு, கிழக்கு மற்றும் மத்திய ஆகிய மாகாணங்களில் உள்ள தமிழ்மொழி மூலப் பாடசாலைகள் அனைத்துக்கும், இன்று வெள்ளிக்கிழமை விடுமுறை வழங்கப்பட்டுள்ளதாகக் கல்வியமைச்சு அறிவித்துள்ளது.

இந்த விடுமுறைக்குப் பதிலாக, எதிர்வரும் 21ஆம் திகதி சனிக்கிழமை பாடசாலை திறக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று பௌர்ணமி விடுமுறை தினம் என்பதாலும், நாளை தைப் பொங்கல் தினம் என்பதைக் கவனத்தில் கொண்டும் இன்று வெள்ளிக்கிழமை பாடசாலை விடுமுறை நாளாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் மாகாண சபைக்குட்பட்ட பாடசாலைகளுக்கே விடுமுறை வழங்கப்பட்டுள்ளதாகவும், தேசிய பாடசாலைகள் தொடர்பில் மத்திய கல்வி அமைச்சே தீர்மானிக்கமுடியும் எனவும் கிழக்கு மாகாண கல்வி அமைச்சர் சி.தண்டாயுதபாணி தெரிவித்தார்.

மத்திய மாகாணத்தில் தமிழ்மொழி மூலமான பாடசாலைகளுக்கு இன்று விடுமுறை வழங்கப்பட்டுள்ளதாக மத்திய மாகாண கல்வித் திணைக்களம் அறிவித்துள்ளது.

# ஊழல் விசாரணை ஆணைக்குழுவால் 195 வழக்குகள் தாக்கல்

*கிடைத்த முறைப்பாடுகள் 7,410*

*விசாரிக்கப்பட்டவை 3,175*

கொழும்பு, ஜன 13

கடந்த இரு வருடங்களில் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவுக்கு மொத்தமாக 7,410 முறைப்பாடுகள் கிடைத்திருப்பதாகவும், அவற்றுள் 3,175 முறைப்பாடுகள் மீதான விசாரணை முடிவடைந்த பின் 195 பேருக்கு எதிராக வழக்குகள் தொடரப்பட்டிருப்பதாகவும் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

2015 இல் கிடைத்த 3,960 முறைப்பாடுகளில் 1,480 முறைப்பாடுகள் மீதும், 2016 இல் கிடைத்த 3,450 முறைப்பாடுகளில் 1,695 முறைப்பாடுகள் மீதும் விசாரணைகள் நடத்தி முடிக்கப்பட்டுள்ளன. விசாரணைகளின் பின்னர் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் 76 வழக்குகளும், நீதிவான் மன்றங்களில் 32 வழக்குகளும் தொடரப்பட்டுள்ளன.

2016 இல் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் 43 வழக்குகளும் நீதிவான் மன்றங்களில் 44 வழக்குகளும் தொடரப்பட்டுள்ளன.

இவற்றுள் அதிகப்படியான முறைப்பாடுகள் அரச ஊழியர்களைப்பற்றியவை எனவும், அதில் பெரும்பாலானவை பொலிஸ் துறையைச்சேர்ந்தவையாகும் எனவும் தெரிவித்தார். (தி)

# 2021 க்குப் பின்னரும் ஜனாதிபதி மைத்திரியே

## கூறுகிறார் தயாசிறி ஜயசேகர

கொழும்பு, ஜன 13

ஜனாதிபதித் தேர்தலில் தான் இனிமேல் போட்டியிடமாட்டேன் என்று, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்திருந்தாலும், அடுத்த ஜனாதிபதித் தேர்தலிலும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைப் போட்டியிட வைப்பதற்கு, கட்சி பரிந்துரைக்கவுள்ளதாக, சிறிலங்கா சுதந்திரக்கட்சி அறிவித்துள்ளது.



சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே விளையாட்டுத்துறை அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

இனிவரும் காலப்பகுதியில், ஜனாதிபதித் தேர்தலின் பொது வேட்பாளராக எவரையும் பரிந்துரைப்பதற்கு, எங்களுக்கு யோசனை இல்லை. எங்களுடைய ஆதரவு அவருக்கு இருக்கின்றமையால், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இந்த யோசனைக்கு ஒத்துக் கொள்வார்.

நாட்டிலுள்ள அனைத்துச் சமூகங்களிடமிருந்தும் வாக்குகளைப் பெற்றுக் கொள்ளக்கூடிய ஒரேயொரு ஜனாதிபதி என்றால், அது மைத்திரிபால சிறிசேனவே. அவருக்குச் சிறு பான்மை சமூகத்தின் ஆதரவு அதிகளவில் உள்ளது.

2015ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 8ஆம் திகதி இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளராகப் போட்டியிட்ட ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை நம்பி, 62 சதவீதமான மக்கள் வாக்களித்தனர்.

அவர் எதிர்வரும் 5 ஆண்டு காலத்துக்கு நாட்டை நல்லதொரு முறையில் வழிநடத்துவார் என்று அனைவரும் இன்னும் நம்பிக்கை கொண்டுள்ளனர். அடுத்து வரும் ஜனாதிபதித் தேர்தலில் அவர் போட்டியிடும் போது, நிச்சயமாக அவரை வெற்றியீட்டச் செய்வோம் - என்றார். (தி)

# அரசின் வறுமை ஒழிப்பு தோல்வி

## 14 மாவட்டங்களில் வறுமை தாண்டவம்

கொழும்பு, ஜன 13

இலங்கை அரசு முன்னெடுத்த வறுமை ஒழிப்புத் திட்டம் தோல்வியடைந்திருப்பதாகவும், தற்சமயம் நாட்டின் 14 மாவட்டங்களில் வறுமை நிலவுவதாகவும் குடிசனப் புள்ளிவிவரத் திணைக்களத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த நான்கு மாதங்களில் எடுக்கப்பட்ட புள்ளி விவரங்களின் அடிப்படையில் இந்த 14 மாவட்டங்களும் இனங்காணப்பட்டுள்ளன.

கடந்த நான்கு மாதங்களுக்கான வறுமை வெட்டுப்புள்ளிகள்: டிசெம்பர் 4,130, நவம்பர் 4,089, ஒக்ரோபர் 4,064, செப்ரெம்பர் 4,038.

வறுமை நிலவும் மாவட்டங்களும் வெட்டுப் புள்ளிகளும் காலி 3,992, மாத்தறை 3,967, அம்பாந்தோட்டை 3,804, அநுராதபுரம் 3,907, பொலநறுவை 4,073, அம்பாறை 4,098, குருநாகல் 3,990, புத்தளம் 4,125, மொனராகலை 3,753, பதுளை 3,959, கொழும்பு 4,293, கம்பஹா 4,287, களுத்துறை 4,181, கேகாலை 4,170 எனவும்,

திருகோணமலை குறைந்தபட்சம் கடந்த நான்கு மாதங்களில் 4,130 வெட்டுப்புள்ளிகளுடன் வறுமைக் கோட்டை அண்மித்து நிலைத்திருப்பதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (தி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திட்டங்களை எதிர்த்ததால் சந்தர்ப்பங்களை இழந்தோம்

## அம்பாந்தோட்டைத் திட்டத்தை எதிர்க்க வேண்டாமென சு.க. கோரிக்கை



கொழும்பு,ஜன.13
அபிவிருத்தித் திட்டங்களைக் காலங்காலமாக எதிர்த்து வந்தமையால்தான் எமது நாட்டுக்கு கிடைத்த பல சந்தர்ப்பங்களை நழுவ விட்டிருக்கின்றோம். அபிவிருத்தித் திட்டங்களை எதிர்த்தால் நாம் எவ்வாறு வறுமையில் இருந்து விடுபடுவது என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சி கேள்வியெழுப்பியுள்ளது.

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அமைச்சர் விஜிதமுனி சொய்சா இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தேசிய அரசு நாட்டில் விவசாயத் துறையை முன்னேற்றுவதற்குப் பெரிய திட்டங்களை முன்னெடுத்து வருகிறது. விவசாயத்துறையை முன்னேற்றுவது போன்று நாட்டில் வறுமையையும் ஒழிக்க வேண்டும். வறுமைக்கு விடை கொடுக்காவிடின் நாம் தேசிய அரசில் இணைந்து ஆட்சி செய்வதில் அர்த்தமேயில்லை.

எமது நாட்டின் தொழில் துறையை முன்னேற்ற வேண்டிய பெரிய பொறுப்பொன்று உள்ளது. இதற்கு நாட்டில் காணப்படும் துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்களை அபிவிருத்தி செய்ய வேண்டும். நாட்டில் அபிவிருத்திக்குத் தேவையான அனைத்து வளங்களும் காணப்படுவதாக முதலீட்டை மேற்கொள்ளும் சீனா போன்ற நாடுகள் ஏற்றுக்கொண்டுள்ளன.

அம்பாந்தோட்டை பொருளாதார வலயம் தொடர்பில் பொய்யான பரப்புரைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்தப் பொருளாதார வலயத்துக்கு அம்பாந்தோட்டையில் ஆயிரத்து 200 ஏக்கர் காணியும், மாத்தறையில் 2 ஆயிரம் ஏக்கர் காணியும், மொனராகலையில் 7 ஆயிரம் ஏக்கர் காணியுமே பெறப்படவுள்ளன.


முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக்காலத்திலும் இவ்வாறான அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

அதற்காகவே விமான நிலையங்கள் மற்றும் துறைமுகங்கள் அமைக்கப்பட்டன.

தற்போது அவர்கள் இவற்றை எதிர்ப்பதில் எவ்விதமான நியாயமும் இல்லை. அம்பாந்தோட்டையில் நாங்கள் காணிகளை விற்பதற்கான நடவடிக்கையை முன்னெடுக்கவில்லை. வரி அறவீட்டின் அடிப்படையிலேயே கொடுக்கவுள்ளோம்.

நாளுக்குநாள் கடன் தொகையும் அதற்காக செலுத்த வேண்டிய வட்டித்தொகையும் அதிகரித்த வண்ணமே உள்ளன. அபிவிருத்தித் திட்டங்களை எதிர்த்ததன் காரணமாகவே எமக்கு கிடைக்கப் பெற்ற பல சந்தர்ப்பங்களை இழந்து, இன்று தவித்துக் கொண்டு இருக்கின்றோம்.

வறுமை, கடன்சுமை, சிறுநீரக நோய்களில் இருந்து நாம் விடுபட வேண்டுமாயின் எமது நாடு முன்னேற வேண்டும். அதற்கு அபிவிருத்தித் திட்டங்கள் அவசியம்-என்றார். (ஐ)



இத்தாலிய கடற்படையின் பேர்காமினி வகையைச் சேர்ந்த, ஐ ரி எஸ் கராபினியர் என்ற நீர்மூழ்கி எதிர்ப்புப் போர்க்கப்பல் நேற்று கொழும்புத் துறைமுகத்துக்கு வந்துள்ளது. நான்கு நாள்கள் நல்லெண்ணப் பயணமாக கொழும்புத் துறைமுகம் வந்த இத்தாலிய போர்க்கப்பலுக்கு சிறிலங்கா கடற்படையினர் பாரம்பரிய முறைப்படி வரவேற்பு அளித்தனர்.(ஐ)

# ஜனாதிபதி தலைமையில் அடுத்த தேர்தல்

## அமைச்சர் பைஸர் முஸ்தபா தெரிவிப்பு

கொழும்பு,ஜன.13
தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையிலேயே 2021ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குள் நடைபெறவுள்ள அனைத்துத் தேர்தல்களும் நடைபெறும் என்று உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சர் பைஸர் முஸ்தபா தெரிவித்தார்.

அத்துடன், எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தலும் ஜனாதிபதியின் தலைமையிலேயே நடைபெறும் என்றும் கூறினார்.

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அடுத்த ஜனாதிபத் தேர்தலில் தற்போதைய ஜனாதிபதியும், சுதந்திரக்கட்சியின் தலைவருமான மைத்திரிபால சிறிசேனவே வேட்பாளராகக் களமிறங்க வேண்டுமேன சுதந்திரக்கட்சியின் மத்தியசெயற்குழு தீர்மானித்துள்ளது. கட்சியின் தலைவராக அவர் செயற்படுவதால் மத்திய செயற்குழுவின் தீர்மானத்தை அவர் ஏற்றுக்கொள்வார்.

நாட்டில் காணப்படும் சிறுபான்மை இனங்கள் உட்பட அனைத்துத் தரப்பினதும் ஆதரவைப் பெற்ற ஒரே தலைவராக மைத்திரிபால சிறிசேனவே காணப்படுகிறார். புதிய அரசமைப்பு கொண்டுவரப்படாமல் தற்போது காணப்படும் ஜனாதிபதி முறையில் தேர்தல் நடைபெற்றால் மைத்திரியே களமிறங்குவார்.

19 ஆவது திருத்தச்சட்டத்தில் ஜனாதிபதியின் பதவிக்காலம் ஐந்து ஆண்டுகளாகக் காணப்படுகிறது. ஆனால், அவர் 19 ஆவது திருத்தச்சட்டத்துக்கு முன்னர் ஜனாதிபதியாக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர். இதன் காரணமாக அவர் 2021ஆம் ஆண்டுவரை ஜனாதிபதியாகப் பதவிவகிக்க முடியும். எனவே, அவரின் தலைமையிலேயே அடுத்து வரும் உள்ளூராட்சி, மாகாண சபைகள் மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்கள் நடைபெறவுள்ளன-என்றார். (ஐ)

# அரசே போராட்டத்தை போர்க்களமாக்கியது

## டலஸ் ஆவேசம்

கொழும்பு,ஜன.13
அம்பாந்தோட்டையில் நடைபெற்ற போராட்டத்தின்போது குண்டர்களை அரசே களமிறக்கிப் போராட்டத்தைப் போர்க்களமாக்கிவிட்டு, தற்போது எதிரணியின் அரசியல் தலைவர்களைக் கைதுசெய்வதாக நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும குற்றஞ்சாட்டியுள்ளார்.

பொரளையில் அமைந்துள்ள என்.எம். பெரேரா ஞாபகார்த்த நிலையத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தபோதே நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

அம்பாந்தோட்டைத் துறைமுகத்தை நாட்டுக்கு இலாபமற்ற முறையில் விற்பனை செய்தல் மற்றும் துறைமுகத்தை அண்டிய 15ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பை வெளிநாட்டு நிறுவனத்துக்கு விற்பனை செய்தல் ஆகியவற்றுக்கு எதிர்ப்புத் தெரிவித்து தேசிய சொத்துக்களைப் பாதுக்காக்கும் அமைப்பு போன்ற சிவில் சமூக அமைப்புகள் அமைதியான முறையில் போராட்டம் ஒன்றை நடத்துவதற்குத் திட்டமிட்டிருந்தன. அந்த எதிர்ப்புச் செயற்பாட்டுக்குப் பலம் சேர்க்கும் நோக்குடன் ஒருங்கிணைந்த எதிர்க் கட்சியின் உறுப்பினர்கள் இணைந்து கொண்டோம். போராட்டத்தில் 600 இற்கும் அதிகமான பிக்குமார் கலந்து கொண்டனர். குறிப்பாக அநுநாயக்க தேரர்களும் இதில் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. அமைதியான முறையில் பேரணியாக நாம் மாகம்புர பகுதிக்கு நுழைய முற்பட்டபோது, பொலிஸ்மா அதிபர் பூஜித ஜெயசுந்தரவின் படை எம்மைத் தடுத்தது.

அதனை மீறிச் சில குறுக்கு வீதிகள் ஊடாக நாம் அமைதியான முறையில் போராட்டத்தை முன்னெடுத்தபோது அங்கு பொலிஸார் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். இந்த பொலிஸ்படைக்குப் பின்னால் கொழும்பு மற்றும் ஏனைய மாவட்டங்களிலிருந்து கொண்டு வரப்பட்ட குண்டர்கள் இருந்தனர். கத்தி, துப்பாக்கி மற்றும் பொல்லுகளுடன் இருந்த இந்தக் குண்டர்களை அரசின் உறுப்பினர்கள் அப்பகுதியில் களமிறக்கியிருந்தனர். அந்தக் குண்டர்களே போராட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கு எதிராகக் கல்லுகளால் தாக்குதல் மேற்கொண்டனர். அமைதியாகப் போராட்டத்தில் கலந்துகொண்டவர்களுக்கு எதிராக தண்ணீர் பீச்சப்பட்டதுடன், கண்ணீர்ப்புகையும் அடிக்கப்பட்டது. 6 பிக்குமார் பலத்த காயங்களுக்கு உள்ளாகியதுடன் 6 பிக்குமார் கைதுசெய்யப்பட்டனர். அமைதிப் போராட்டத்தில் ஈடுபட்ட 40இற்கும் அதிகமான அப்பாவிப் பொதுமக்களும் கைதுசெய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவத்தை அடிப்படையாக கொண்டு எதிர்த்தரப்பு அரசியல் பிரதிநிதிகளைக் கைது செய்யும் நடவடிக்கைகளை இந்த அரசு பொலிஸ் திணைக்களத்தின் ஊடாக முன்னெடுத்து வருகிறது என்றார். (ஐ)

# நல்லிணக்க வாரம் பிரகடனம்; ஜனவரி 8 ஆம் திகதி முதல்

## 14 ஆம் திகதி வரை அனுஷ்டிப்பு

கொழும்பு,ஜன.13
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, தேசிய ஒருங்கிணைப்புக்கும் நல்லிணக்கத்துக்கும் பொறுப்பான அமைச்சர் என்ற வகையில், அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் ஜனவரி 8 ஆம் திகதி முதல் 14ஆம் திகதி வரையான காலப்பகுதியை நல்லிணக்க வாரமாகப் பிரகடனப்படுத்தினார்.

அரச நிறுவனங்களிலும், பாடசாலைகளிலும், பல்கலைக் கழகங்களிலும் நல்லிணக்க வாரகாலத்தில் சமாதானம், நல்லிணக்கம், ஒருமைப்பாடு ஆகியவற்றின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்தி நல்லிணக்கம் தொடர்பான பிரகடனத்தை நடைமுறைப் படுத்துவதற்கான உறுதிமொழி வழங்கும் செயற்பாடுகள் நாடளாவிய ரீதியில் இடம்பெற்று வருகின்றன.

கொழும்பு நாலந்தா கல்லூரியில் நேற்று முன்தினம் காலை 9.00 மணிக்கு இடம்பெற்ற நல்லிணக்கப் பிரகடன நிகழ்வில், ராஜாங்க அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசி, நல்லிணக்க அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதி, நாலந்தா கல்லூரி அதிபர் ஜயசுந்தர, [illegible] அலுவலர்கள், மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் பங்கு பற்றி நல்லிணக்கத்துக்கான உறுதி மொழியை எடுத்தனர்.

நாட்டின் இன,மத, மொழி, பிரதேசம் தொடர்பான பல்வகைத் தன்மையின் செழிப்பு இனங்காணப்பட்டு அவற்றுக்கு மதிப்பளிக்க வேண்டிய அவசியம் வலியுறுத்தப்பட்டது. (ஐ)


# குளவி கொட்டி வயோதிபர் சாவு

நுவரெலியா மாவட்டம் திம்புள்ள, பத்தனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொட்டகலை ஸ்டோனிகிளிப் தோட்டப்பகுதியில் குளவிக் கொட்டுக்கு இலக்காகி ஒருவர் உயிரிழந்தார். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

மாரிமுத்து ஆறுமுகம் (வயது-68) என்பவரே இவ்வாறு உயிரிழந்தார். உறவினர் வீட்டுக்குச் சென்றபோது வழியில் மரத்திலிருந்த குளவிக் கூட்டிலிருந்து கலைந்த குளவிகள் இவரைக் கொட்டியுள்ளன.

குளவிகள் கொட்டியதில் கடுமையாகப் பாதிக்கப்பட்ட இவர் சிகிச்சை பயனின்றி நேற்று முன்தினம் உயிரிழந்தார். (ஐ-ய)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## நுணாவில் அ.த.கவில் சுத்திகரித்த குடிதண்ணீர் விநியோகம்

தென்மராட்சி, ஜன.13

கைதடி நுணாவில் அ.த.க.வித்தியாலயத்தில் சுத்திகரிக்கப்பட்ட குடிதண்ணீர் விநியோகத் திட்டம் நேற்றுமுன்தினம் ஆரம்பிக்கப்பட்டது.

வித்தியாலயத்தில் கிணறு இருந்தும், அதன் தண்ணீர் குடிதண்ணீராகப் பயன்படுத்த முடியாத நிலை காணப்பட்டதால் மாணவர்கள் தமது தேவைக்கு தத்தமது வீடுகளிலிருந்து குடிதண்ணீரைக் கொண்டுவந்தனர்.வித்தியாலய தேவைக் காக அயலில் உள்ள குடிதண்ணீர்க் கிணறுகளிலிருந்து தண்ணீர் பெறப்பட்டது.

புலம் பெயர் நாடொன்றிலிருந்து அண்மையில் வந்திருந்த வித்தியாலய பழைய மாணவனான கங்கேஸ்வரன், பாடசாலையில் குடிதண்ணிருக்குக் காணப்பட்ட தட்டுப்பாடு நிலமையைப் பார்வையிட்டு சுத்திகரிக்கப்பட்ட குடிதண்ணீர் விநியோகத்துக் கான நிதியை வழங்கினார்.

500 லீற்றர் கொள்ளளவு கொண்ட பிளாஸ்ரிக் தொட்டியுடன் சுத்திகரிப்பு செய்யும் கருவிகள் பொருத்தப்பட்டுள்ள குடிதண்ணீர் விநி யோகத் திட்டத்தை திருமதி அருண்ஜா கங்கேஸ்வரன் நேற்று ஆரம்பித்தார். (ற-9)

## மதுபானசாலையை மூடுவதற்கு எதிர்ப்பு!

முல்லைத்தீவு, ஜன. 13

முல்லைத்தீவு மாவட்டத்தில் அமைந்துள்ள மதுபானசாலையை மூடுமாறு பொது அமைப்புக்கள் கடந்த திங்கட்கிழமை கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தின. இந்த நிலையில், அந்த மதுபானசாலையை மூட வேண்டாம் எனக் கோரி கையெழுத்திட்டு மாவட்டச் செயலரிடம் ஒரு தரப்பினர் மனுவொன்றைக் கையளித்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் நகரில் மதுபான சாலை எதுவும் இல்லை. திறக்கப்பட்ட மதுபான சாலையை மூட நடவடிக்கை எடுக்க வேண்டாம் என்று அந்த மனுவில் கோரப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் நகரின் மையத்தில் உள்ள மதுபானச் சாலையை மூடுமாறு கோரிக்கை விடுத்து நகரில் கவனவீர்ப்புப் போராட்டம் கடந்த திங்கட் கிழமை நடைபெற்றது. வட மாகாண முதலமைச்சர், மதுவரித் திணைக்கள ஆணையாளர் ஆகியோருடன் ஜனாதிபதிக்கும் மனுக்கள் அனுப்பப்பட்டன.

தற்போது மதுபான நிலையம் தொடர்ந்தும் இயங்க அனுமதிக்க வேண்டும் எனக் கோரி இன்னொரு சாரார் மாவட்டச் செயலரிடம் மனுக் கையளித்துள்ளனர். மனுக் கிடைத்ததை முல்லைத்தீவு மாவட்டச் செயலர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் உறுதி செய்தார். (ற-5,10)

# பணி செய்ய முடியாமலே தீர்மானங்கள் நிறைவேற்றம்

### வடக்கு விவசாய அமைச்சரை சாடுகிறார் எதிர்க்கட்சித் தலைவர்

யாழ்ப்பாணம், ஜன. 13

வடக்குமாகாண சுற்றுச்சூழல் அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தனது அமைச்சின் கீழ் உள்ள பணிகளைச் செய்ய முடியாமல், தீர்மானங்களாகக் கொண்டு வந்து பிரேரணைகளின் எண்ணிக்கைகளை அதிகரிக்கும் வகையில் செயற்படுகின்றார்.

இவ்வாறு வடக்கு மாகாண எதிர்க் கட்சித் தலைவர் சி.தவராசா குற்றம் சுமத்தினார்.

வடக்கு மாகாண சபையின் அமர்வு கடந்த செவ்வாய்க் கிழமை நடைபெற்றது. வடக்கு மாகாண விவசாய சுற்றுச் சூழல் அமைச்சர் பொ.ஐங்கரநேசன் பிரேரணை ஒன்றை முன் மொழிந்தார்.

வடக்கு மாகாணம் இன்று எதிர்கொண்டு வரும் சுற்றுச்சூழல் பிரச்சினைகளில் பிளாஸ்டிக் கழிவு பெரிய பிரச்சினையாக உள்ளது. பிளாஸ்டிக் கழிவுகளாலும் பிளாஸ்டிக் பைகள் போன்றவையாலும் பாதகமான விளைவுகள் ஏற்பட்டு வருகின்றன.

இலங்கை அரசு 20 மைக்கிரோன்கள் அல்லது அதற்குக் குறைவான தடிப்புக் கொண்ட பிளாஸ்டிக் பொருள்களை உற்பத்தி செய்வதற்கும், பயன்படுத்துவதற்கும் சுற்றாடல் சட்டத்தின்படி தடை விதித்துள்ளது. இந்தச் சட்டத்தை மீறுவோர்களுக்கு தண்டப் பணமும் சிறைத் தண்டனையும் விதிக்க வாய்ப்பு உண்டு. இந்தத் தடை வடக்கில் முழுமையாக நடைமுறைக்கு வரவில்லை. இது தொடர்பான இறுக்கமானசெயற்பாடுகள் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 22 ஆம் திகதியிலிருந்து நடைமுறைப் படுத்தப்படும். வடக்கு மாகாணத்துக்கு உட்பட்ட சகல இடங்களிலும் ஒரு நாள் பாவனைக்கு உரிய பிளாஸ்டிக் குவளைகள், பிளாஸ்டிக் பொருள்கள் பயன்படுத்துவதை முற்றாகத் தவிர்க்க வேண்டும்- என்றுஅவர் பிரேரணையை முன்மொழிந்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் தவராசா கருத்துத் தெரிவித்தார். இந்த விடயம் உங்கள் அமைச்சுக்கு உரிய பொறுப்பு. இதனை உங்கள் அமைச்சின் ஊடாக செயற்படுத்த வேண்டும். உங்கள் அமைச்சின் இயலாத் தன்மையால் இதை எல்லாம் பிரேரணையாகக் கொண்டு வந்து நேரத்தையும் வீணாக்கி, பிரேரணைகளின் எண்ணிக்கைகைகளையும் கூட்டி வடக்கு மாகாண சபையில் அதிக பிரேரணைகள் நிறைவேற்றப்பட்டுள்ளன என்பதை காட்டுவதற்குரிய செயற்பாடுகளே இவை. இவ்வாறான பிரேரணைகளைக் கொண்டு வருவதை நிறுத்துங்கள்- என்றார்.

ஆளும் கட்சி உறுப்பினர் து.ரவிகரன் கருத்துத் தெரிவித்தார்.

எதிர்கட்சித் தலைவர் சி.தவராசா தெரிவித்த கருத்துக்கு நானும் உடன்படுகின்றேன். சுற்றுச்சூழல் அமைச்சராக இருக்கின்ற ஐங்கரநேசனின் பொறுப்பே இந்த விடயம். அவர் தனது அமைச்சின் ஊடாக இந்தக் கடமையைச் செய்ய வேண்டும். - என்று அவர் குறிப்பிட்டார்.

பதிலளித்து கருத்துத் தெரிவித்த அமைச்சர் பொ.ஐங்கரநேசன், வடக்கு மாகாண சபையில் ஒரு விடயம் கதைக்கப்படுகின்றது என்றால் அது அனைத்து இடங்களிலும் அதிர்வை ஏற்படுத்தும். இந்தப் பிரேரணையை எதிர்க்காது விடுங்கள்.- என்றார். (ற-5,8)

டெங்குக் கட்டுப்பாட்டில் ஈடுபட்ட

## சுகாதாரப் பரிசோதகர்களை மிரட்டிய பெண்ணுக்கு மறியல்

### மன்னார் நீதிமன்றம் உத்தரவு

மன்னார், ஜன. 13

டெங்கு நுளம்புப் பரிசோதனையில் ஈடுபட்ட பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களை கடமையைச் செய்ய விடாது இடையூறு ஏற்படுத்தி அச்சுறுத்திய பெண்ணை எதிர்வரும் 25 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைத்தது மன்னார் நீதிமன்றம்.

மன்னார் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. மன்னார் பொதுச் சுகாதார மருத்துவ அதிகாரி வி.ஆர்.சி.லெம்பேட் தலைமையிலான பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் இணைந்து டெங்கு நுளம்பைக் கட்டுப்படுத்தும் வகையில் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

மன்னார் தாழ்வுப்பாடு கிராமத்தில் டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கையில் ஈடுபட்ட குழுவினர், வீட்டு உரிமையாளர்கள் மூவருக்கு எதிராகவும், ஆலய பங்குச் சபை மற்றும் மன்னார் பிரதேச சபை ஆகியனவற்றுக்கு எதிராகவும் மன்னார் நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்தனர்.

நீதிமன்ற அழைப்பாணைக் கட்டளையை தாழ்வுப்பாடு கிராமத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டவர்களுக்கு மன்னார் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் வழங்கினர்.

அழைப்பாணைக் கட்டளை பிறப்பிக்கப்பட்ட வீட்டு உரிமையாளரான பெண் ஒருவர், நீதிமன்றக் கட்டளையை உதாசீனம் செய்தார். பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களுக்கு அவர்களின் கடமையைச் செய்ய விடாது இடையூறு ஏற்படுத்தி, அவர்களை அச்சுறுத்தினார்.

நேற்றுமுன்தினம் புதன் கிழமை வழக்குகள் மன்னார் நீதிமன்றத்தில் நீதிவான் முன்னிலையில் விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டன. கடமைக்கு இடையூறு ஏற்படுத்தி, அச்சுறுத்திய பெண் தொடர்பில் நீதிமன்றின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டது. நீதிவான் அந்தப் பெண்ணை எதிர்வரும் 25 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

இரண்டு வீடுகளின் உரிமையாளர்கள் குற்றத்தை ஒப்புக் கொண்டதால் தலா 25 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

ஆலய பங்குச் சபை மற்றும் மன்னார் பிரதேச சபை ஆகியவை தமது குற்றத்தை ஒப்புக்கொள்ளாததால் வழக்கு விசாரணை ஜூன் மாதம் 16 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டது. (ற-5,56)



*யாழ்ப்பாணம் வேலணை மண்கும்பான் வெள்ளைக் கடற்கரை ஜும்மா பள்ளிவாசலுக்கு நீர் இறைக்கும் இயந்திரம் யாழ் கிளிநொச்சி உலமா சபை கிளை தலைவர் சுபியான் மௌலவியால் அன்பளிப்புச் செய்யப்பட்டது. போரால் பாதிப்புக்கு உள்ளான இந்தப் பள்ளிவாசல் தற்போது பலரது முயற்சியின் பயனாக மீளத் திருத்தப்படுகின்றது. (ற-32)*

## கணக்காய்வுப் பணியில் ஈடுபட்டவர்களை கணக்காய்வு சேவைக்குள் உள்ளீர்க்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன. 13

வடக்கு மாகாண சபையில் கணக்காய்வுப் பணியில் ஈடுபட்டவர்களைத் தேவையான – உரிய நிபந்தனைகள் மற்றும் நியதிகளின் அடிப்படையில் வடக்கு மாகாண கணக் காய்வுச் சேவைக்குள் உள்வாங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வடக்கு மாகாண சபை கோரிக்கை விடுத்துள்ளது. வடக்கு மாகாண சபையின் அமர்வு கடந்த செவ்வாய்க் கிழமை நடை பெற்றது. ஆளும் கட்சி உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் இந்த விடயம் தொடர்பிலான பிரேரணையை முன்மொழிந்தார்.

மாகாண சபைகள் தோற்றம் பெற்றதிலிருந்து 28 ஆண்டுகளாக மாகாண சபைகளின் தலைமைச் செயலாளர்கள் மற்றும் தலைமை உள்ளகக் கணக்காய்வாளர்கள் ஆகியோரால் வழங்கப்பட்ட கடமைப் பட்டியலின்படி கணக்காய்வுக் கடமையில் ஈடுபட்டுவரும் மாகாண உள்ளக கணக்காய்வுச் சேவையில் உள்ளீர்க்கப்படுவதற்கு முகாமைத்துவ உதவியாளர்கள் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் விருப்பம் தெரிவித் துள்ளனர். அவர்களை, 1985 ஆம் ஆண்டு கணக்காய்வாளர் தலைமைத் திணைக்களத்தால் கணக்காய்வுப் பரீட்சகர் பதவிக்கான சேவைப் பிரமாணக் குறிப்பு கொண்டு வரப்பட்ட பொழுது, முகாமைத்துவ உதவியாளர்களை கணக்காய்வுப் பரீட்சகர் சேவைக்கு நிபந்தனைகள் மற்றும் நியதிகள் அடிப்படையில் உள்வாங்கியதைப் போன்று, தற்பொழுது வடக்கு மாகாண சபையில் கணக்காய்வு வேலை யில் ஈடுபட்டவர்களை தேவையான உரிய நிபந்தனைகள் மற்றும் நியதிகளின் அடிப்படையில் வடக்கு மாகாண கணக்காய்வு சேவைக்குள் உள்வாங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இது குறித்துஉள்நாட்டலுவல்கள் அமைச்சரையும், வடக்குமாகாண ஆளுநரையும் வடக்கு மாகாண சபை கோர வேண்டும். உள்ளீர்ப்பு நடவடிக்கையின் இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் வரை சம்பந்தப்பட்ட உள்ளகக் கணக்காய்வு வேலைகளில் ஈடுபட்டிருக்கும் முகாமைத்துவ உதவியாளர்கள் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் இடமாற்றங்களை வடக்கு மாகாண முதலமைச்சர் இடைநிறுத்தி வைக்க வேண்டும் - என்று பிரேரணை முன்மொழியப்பட்டது.

அதன்போது ஆளும் கட்சி உறுப்பினரான அனந்தி சசிதரன், முகாமைத்துவ உதவியாளர்களாக கடமையாற்றியவர்கள் விருப்பின் அடிப்படையிலேயே தெரிவு செய்யப்பட்டனர். இவ்வாறு 8 முகாமைத்துவ உதவியாளர்கள் தெரிவு செய்யப்பட்டு கணக்காய்வாளர்களாக கடமையாற்றி வருகின்றனர். அவர்களுக்கான சம்பள உயர்வுகள் கணக்காய்வாளர்களுக்குரிய சுற்றறிக்கைகளின் படியே வழங்கப்பட்டு வருகின்றன. சில மாதங்கள் கடமையாற்றிய பட்டதாரிகளை கணக்காய்வாளர்களாக நியமித்து அவ்வாறு கடமையாற்றியவர்களை மீண்டும் முகாமைத்துவ உதவியாளர்களாகச் செயற்படச் சொல்வது சரியானது அல்ல.- என்று குறிப்பிட்டார். (ற-5,8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்ப்புகளால் அபிவிருத்தி தடைப்படாது

## உறுதிபடக் கூறினார் ஜனாதிபதி



கொழும்பு,ஜன.13
அபிவிருத்திச்செயற்பாடுகளின் போது அரசு மீது எத்தகைய குற்றச்சாட்டுக்கள் சுமத்தப் பட்டாலும், விமர்சனங்கள் மேற் கொள்ளப்பட்டாலும் அவை எல் லாற்றையும் எதிர்நோக்கி நாட் டின் அபிவிருத்திப் பணிகளை உரியவாறு மேற்கொள்வேன் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.
பகமுன கமநல சேவைகள் மத்திய நிலையத் தின் புதிய இருமாடிக் கட்டிடத்தின் திறப்பு விழா நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. நிகழ்வில் உரையாற்றிய ஜனாதிபதி மேலும் தெரிவிக்கும்போது,
ரஜரட்ட விவசாய மக்கள் நீண்ட காலமாக எதிர்நோக்கிய தீர்க்கப்படாத தண்ணீர்ப் பிரச்சினைக்கு தீர்வாக மொரகஹகந்த பாரிய நீர்த்தேக்கத்திட்டம் அரசால் நடை முறைப்படுத்தப்பட்டுள்ளதுடன், கடந்த 40 வருடகாலத்துக்கும்மேலாக அரசியல் மேடைகளில் வெறும் வாக்குறுதியாக மட்டுமே காணப்பட்ட இந் தப் பிரச்சினைக்கு தற் போதைய அரசாலேயே தீர்வுகாணப்பட்டுள்ளது. காலநிலை மற்றும் வானிலை நிலைமை களால் எதிர்காலத்தில் ஏற்படவுள்ள வறட்சி யின் போது, விவசாய மக்களின் நலன்களுக் காக மேற்கொள்ளப்பட வேண்டிய ஏற்பாடுகள் குறித்து விவசாயதிணைக்களம், மகாவலி அதி கார சபை மற்றும் கமநல சேவைகள் திணைக் களம் என்பவற்றுக்கு ஏற்கனவே அரசால் ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன. அந்த நிலைமைகளை எதிர்கொள்வதற்கு அரசால் மேற்கொள்ளப்படக்கூடிய அனைத்து நடவடிக்கைகளும் முன்னெடுக் கப்படும் - என்றார். (ஐ)

## ஹெரோயினுடன் யுவதி கைது

பதுளை, ஜன.13
மொனராகலை பஸ் நிலை யத்தில் நேற்றுமுன்தினம், நீண்டநேரம் காத்திருந்த யுவதி ஒருவரின் கைப்பை யிலிருந்து30கிராம்ஹெரோ யின் போதைப்பொருள் மீட்கப்பட்டதுடன், அவரைச் சந்தேகத்தின்பேரில் கைது செய்துள்ளதாக மொன ராகலைப் பொலிஸார் தெரிவித்தனர்.
கைதுசெய்யப்பட்ட யுவதி செல்வந்தப் பெண்களைப் போன்று நவீனரக ஆடை களை அணிந்திருந்ததாகக் கூறப்படுகிறது. அவரை நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ள தாக பொலிஸார் தெரிவித்த னர். (ஐ-ய-41)

## புதையல் தோண்டியோருக்கு அபராதம்

திருமலை, ஜன.13
திருகோணமலை - புல்மோட்டை, இலந்தைக்குளம் காட்டுப்பகுதியில் புதையல் தோண்டிய குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட 9 நபர் களுக்கும் நேற்றுமுன் தினம் தலா 90 ஆயிரம் ரூபா வீதம் தண்டப்பணம் விதித்தது திருகோணமலை குச்சவெளி சுற்றுலா நீதி மன்றம்.
யான் ஓயாவை அண்மித்த இலந்தைக் குளம் பகுதியில் புதையல் தோண்டிய குற்றச்சாட்டின் பேரில் இவர்கள் 9 பேரும் கடந்த மாதம் கைது செய்யப்பட்டனர்.
அனுமதியின்றி அரசுக்குச் சொந்தமான காட்டுக்குள் சென்றமை, தொல்பொருள் களைச் சேதமாக்கியமை மற்றும் புதையல் தோண் டியமை என மூன்று குற்றச்சாட்டுக்கள் இவர் கள் மீது சுமத்தப்பட்டிருந் தன. (ஐ-ய-45)



## கிழக்கின் சுற்றுலாத்துறை வளர்ச்சிக்கு ஆஸி. உதவி

மட்டக்களப்பு, ஜன.13
ஆஸ்திரேலிய அரசின் நிதி யு தவியுடன் கிழக்கு மாகாணத் தில் சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்யும் திட்டங் கள்ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கிழக்கு மாகாண முதலமைச் சர் செய்னுலாப்தீன் ஹாபிஸ் நசீர் அஹமட் தெரிவித்தார்.
கிழக்கின் சுற்றுலாத்துறை அபிவிருத்தித் திட்டத்தின் அங் குரார்ப்பண நிகழ்வு நேற்று முன்தினம் முதலமைச்சர் தலைமையில் இடம்பெற்ற போதே அவர் இதனைத் தெரி வித்தார்.
ஆஸ்திரேலிய உயர்ஸ்தானி கரின் உத்தயோகபூர்வ இல் லத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் உயர்ஸ்தானிகர் பிரயிஸ் ஹட்செசன் மற்றும் திறன் அபிவிருத்தி, தொழிற் பயிற்சி அமைச்சர் மகிந்த சமரசிங்க உட்படப் பலர் கலந்து கொண்டனர்.
இலங்கையின் ஒளிமயமான எதிர்காலத்துக்கு ஆஸ்திரே லியா முழுமையான ஆத ரவை வழங்கும் என உயர் ஸ்தானிகர்பிரயிஸ்ஹட்செசன் கிழக்கு முதலமைச்சரிடம் உறுதியளித்தார். (ஐ-ய-46)

## தகவல் அறியும் சட்டம் அடுத்த மாதம் நடைமுறைக்கு

கொழும்பு,ஜன.13
தகவல் அறியும் சட்டம் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 3 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும். இதற்கிணங்க அன்றைய தினத்திலிருந்து மக்கள் தமக்குத் தேவையான தகவல் களைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று அமைச்சரவைப் பேச்சாளரும், நாடாளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுஜன ஊடக அமைச்சருமான கயந்த கருணாதிலக தெரிவித்தார்.
அரச தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற அமைச் சரவையின் வாராந்த முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.
நல்லாட்சி அரசின் வாக்குறுதிக்கமைவாக தகவல் அறியும் சட்டம் தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 3 ஆம் திகதி வெளியிடப்படவுள்ளது.
தற்போது அனைத்து அரச நிறுவனங்களினது பிரதான அலுவலகங்களில் தகவல் தொடர்பான அதிகாரிகளை நியமிப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளோம். இது தொடர்பில் அரச அதிகாரிகளை தெளிவுபடுத்தும் வேலைத்திட் டம் நடைமுறைப்படுத்தப்படும் எனவும் தெரிவித்தார். (ஐ)

## நோயாளர் அறை மீண்டும் திறப்பு

கொழும்பு,ஜன.13
ஏ.எச்.வன்.என்.வன் வைரஸ் பரவியதன் காரணமாக தற்காலிகமாக மூடப்பட்ட கண்டி பொது வைத்திய சாலையின் 65 ஆம் இலக்க நோயாளர் அறை மீண்டும் திறக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலைப் பணிப்பாளர் மருத்து வர் சமன் ரத்நாயக்க தெரிவித்தார்.
குறித்த வைத்திய சாலையில் 48 மணி நேரத்தில் 3 நோயாளர்கள் உயிரிழந்தமை காரணமாக நேற்றுமுன்தினம் முதல் 65 ஆம் இலக்க நோயாளர் அறை தற்காலிகமாக மூடப்பட்டிருந்தது.
வைத்தியசாலையின் குறித்த அறையில் வேகமாகப் பரவிய ஏ.எச். வன்.என்.வன் வைரஸ் காரணமாக இந்த உயிழப்புக்கள் ஏற்பட்டதாக அடையாளம் காணப்பட்டதாகவும் வைத்தியசாலைப் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார். (ஐ)

## தமிழ்ப் பண்ணையாளர்கள் மீது பௌத்த தேரர்கள் தாக்குதல்

### வியாழேந்திரன் எம்.பி. கண்டனம்



செங்கலடி, ஜன.13
மட்டக்களப்பு - பொலன் னறுவை எல்லைக்கிராமங் களில் கடந்த செவ்வாய்க் கிழமை பௌத்த தேரர்களால் தமிழ்ப் பண்ணையாளர்கள் தாக்கப்பட்டுள்ளதாகத் தெரி விக்கப்படுகிறது.
மட்டக்களப்பு மாவட்டத்தில் செங்கலடி மற்றும் கிரான் பிர தேச செயலகப் பிரிவிலுள்ள எல்லைக் கிராமங்களான மயிலத்தமடு, மாதவணை பகுதியில் வைத்தே பௌத்த தேரர்களால் பண்ணையா ளர்கள் தாக்கப்பட்டனர்.
சம்பவத்தை அடுத்து மட்டக் களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ச.வியாழேந்திரன் நேற்றுமுன்தினம் அங்கு நேரில் சென்று தாக்குதலுக்கு இலக்கானவர்களையும் ஏனைய கால்நடை வளர்ப் பாளர்களையும் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.
இதுதொடர்பாக நாடாளு மன்ற உறுப்பினர் வியா ழேந்திரன் தெரிவிக்கையில், மயிலத்தமடு, மாதவணை எல்லைக் கிராமங்களில் பெரும்பான்மை இனத்த வர்களால், பண்ணையா ளர்களின் மாடுகளைத் துப் பாக்கியால் சுடுவது, கால் நடைகளைக் கடத்துவது, பண்ணையாளர்ககளைத் தாக்குவது போன்ற செயற்பாடு கள் தற்போதும் மேற்கொள் ளப்படுகின்றன. கடந்த வரு டத்திலும் தமிழ்ப் பண்ணை யாளர் ஒருவர் மிகமோசமான முறையில் தாக்கப்பட்டார்.
எல்லைக் கிராமங்களான மயிலத்தமடு, மாதவணை என்பவற்றை அண்மித்த பகுதிகளில் சட்ட விரோதக் குடியேற்றம் மற்றும் நிரந்தர வீடுகள் அமைப்பதற்கு நீதி மன்ற தடை உத்தரவு இருந்த போதும், அவை இடம்பெற்றுக் கொண்டுதான் இருக்கின்றன.
மட்டக்களப்பின் எல்லைக் காவலர்களாக, பல துன்பங் களையும் பிரச்சினைகளை யும் தாங்கிக்கொண்டிருக்கும் எமது தமிழ் பண்ணையாளர் களின் பாதுகாப்பை உறு திப்படுத்துவதற்குத் நட வடிக்கை எடுக்கப்படும் - என் றார். (ய-47)

# தமிழ், முஸ்லிம் மக்கள் ஒன்றுபடுவது அவசியம்

## நாடாளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன் வலியுறுத்து

செங்கலடி, ஜன.13
நாட்டில் புதிய அரசமைப்புச் சட்டம் உருவாக்கப்படும் நிலையில், தமிழ், முஸ் லிம் சமூகங்கள் கசப்பான உணர்வுகளை மறந்து ஒன்றுபட்டுச்செயற்பட வேண் டியது காலத்தின் கட்டாயம் என தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சீ. யோகேஸ் வரன் தெரிவித்தார்.
மட்டக்களப்பில், பாடசாலை நிகழ்வொன்றில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றுகை யிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தொடர்ந்து தெரிவிக் கையில்,
இனப்பிரச்சினைத் தீர்வு விட யத்தில் இந்தச்சந்தர்ப்பத்தை நழுவவிட்டால், இன்னு மொரு சந்தர்ப்பம் கிடைக் குமா என்பது கேள்விக் குறியே.
அரசியல் தீர்வுத்திட்டத்தைக் குழப்பும் வகையில் முன் னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தலையிலான கூட்டு எதிரணி செயற்பட்டு வருகிறது. தமிழ் மக்களுக்கு நியாயமான ஒரு தீர்வு கிடைத்துவிடக்கூடாது என்ற விடயத்தில் மகிந்த அணி மிகத் தீவிரமாக உள்ளது.
இந்த நிலையில் வடக்கு-கிழக்கிலே வாழுகின்ற தமிழ் - முஸ்லிம் சமூகங்கள் இணைந்து அரசியல் தீர் வைப்பெற்றுக்கொள்வதற்கு [illegible] வேண்டும் - என்றார். (ஐ-ய-47)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையின் மீள்வருகை ஜனநாயக பலத்துக்குக் கிடைத்த வெற்றி

## பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு



ஜனநாயகத்தைப் பலப்படுத்துவதற்கு கடந்த ஆண்டுகளில் அரசு முன்னெடுத்த நடவடிக்கைகளுக்கு கிடைத்துள்ள சாதகமான பலாபலனே ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையின் அனுமதியும், மீள் வருகையும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை மீதான கரிசனையோடு மீண்டும் ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையை வழங்குவதற்கு தீர்மானித்துள்ளதான தகவலை ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்ததையடுத்து பிரதமர் வெளியிட்ட விசேட தகவல் அறிக்கையிலேயே மேற்படி விடயங்கள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

மேலும், "மக்களது உரிமைகளை பாதுகாத்து, ஜனநாயகத்தை பலப்படுத்துவதற்காக கடந்த இரண்டு வருடங்களில் அரசு முன்னெடுத்த நடவடிக்கைகளின் பிரதிபலனாக ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகை மீளக் கிடைக்கப்பெற்றுள்ளது.

இலங்கையின் மனித உரிமைகள் தொடர்பான நடவடிக்கைகளில் ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையானது மிகவும் தாக்கம் செலுத்துகிறது. முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக்காலத்தில் இலங்கையில் நிலவிய மனித உரிமை மீறல் சம்பவங்களை காரணம்காட்டி, குறித்த வரிச்சலுகையை இலங்கைக்கு வழங்குவதை ஐரோப்பிய ஒன்றியம் இடை நிறுத்திக்கொண்டது.அதன் பின்னர் பலசுற்றுப் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றிருந்தன. இந்த சந்தர்ப்பத்திலே தற்போதைய நல்லாட்சியில் முன்னேற்றகரமான மாற்றங்களைச் சுட்டிக்காட்டி, குறித்த வரிச்சலுகையை மீள இலங்கைக்கு வழங்குவதாக ஐரோப்பிய ஒன்றியம் அறிவித்துள்ளமை மகிழ்வளிக்கிறது." என அவர் கருத்துரைத்துள்ளார்.

இலங்கையில் ஏற்பட்டுள்ள சமூக மற்றும் அரசியல் மாற்றங்களுக்கு வலு சேர்க்கும் வகையிலே ஐரோப்பிய ஒன்றியம் இலங்கைக்கு அதிகரித்த வர்த்தக வாய்ப்புக்களை வழங்கத் தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

*"ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையின் மீளளித்தலானது, ஆடை உள்ளிட்ட உள்நாட்டு உற்பத்திப் பொருள்களை ஐரோப்பிய சந்தைகளுக்கு அதிகளவில் ஏற்றுமதி செய்வதற்கான சந்தர்ப்பங்களையும், அதனூடான புதிய வேலைவாய்ப்புக்களையும் உருவாக்கவுள்ளது. இலங்கையின் உற்பத்திகளுக்கான தீர்வை வரி குறைக்கப்படவுள்ளது."*



"இலங்கையின் மனித உரிமைகள், தொழிலாளர் சட்டங்கள், சுற்றாடல் பாதுகாப்பு மற்றும் நல்லாட்சி விடயம் உள்ளிட்ட பன்னாட்டுத் தரத்திலான 17 விடயங்களில் இலங்கை செயற்பட்டுள்ளமை காரணமாகவே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது."

# பயோ இன் கூறியர் கல்விக் கண்காட்சி கொழும்பில்

இன்ரர்நஷனல் இன்ஸ்ரிரியூட் ஒவ் கெல்த் சயன்ஸ் நிறுவனத்தின் கல்வியியல் மற்றும் ஆராய்ச்சியியலின் தகவு மையமாக விளங்கும் பயோ இன் கூறியர் முதன் முறையாக 'பயோ இன் கூறியர்' கல்விக் கண்காட்சியை ஏற்பாடு செய்துள்ளது.

இக்கண்காட்சி கொழும்பு தாஜ் சமுத்ரா ஹோட்டலில் எதிர்வரும் 15ஆம் திகதி காலை 9 மணி தொடக்கம் மாலை 6மணி வரை இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி சர்வதேச அங்கீகாரம் பெற்ற 50 இற்கும் மேற்பட்ட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பல்கலைக்கழகங்களும் கல்வி நிறுவனங்களும் இக்கண்காட்சியில் கலந்து கொள்ளவுள்ளன. மாணவர்கள் தமது உயர் கல்விக்கான பல்கலைக்கழகங்கள், கல்வி நிறுவனங்கள் மற்றும் பட்டப்படிப்பு பாடநெறிகளைத் தெரிவு செய்வதற்கு இக் கண்காட்சி அரிய சந்தர்ப்பத்தை வழங்கவுள்ள தாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பல்வேறு வெளிநாட்டு பல்கலைக்கழகப் பிரதிநிதிகளுடனான நேரடிக் கலந்துரையாடல் மூலம் மாணவர்கள் தமது உயர் கல்வித் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு வாய்ப்பு கிடைப்பது மட்டுமல்லாது, பல்வேறு தொழில்சார் வல்லுநர்களும், தொழில் வழிகாட்டிகளும் இக் கண்காட்சியில் பங்கேற்பதனால், அவர்களிடமிருந்து உயர் கல்விக்கு தேவையான ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் பெற்றுக்கொள்ள முடியுமெனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேலும், தொழில்சார் வழிகாட்டல்கள் மற்றும் உயர்கல்வி தொடர்பான கருத்தரங்குகளும் இக்கண்காட்சியில் பெறவுள்ளதோடு மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களுக்கென சிறப்புத் தொழில்சார் செயலமர்வுகளும் இடம் பெறவுள்ளதாகத் தெரியப் படுத்தப்பட்டுள்ளது.

வணிகம்

# வங்கியல்லாத நிதிச்சேவைகள் துறையில் சி.டி.பி. நிறுவனம் தங்க விருதை வென்றது





தேசிய வர்த்தக சம்மேளனத்தின் மூலம் ஒழுங்கு செய்யப்பட்ட தேசிய வர்த்தகச்சிறப்பு விருதுகள் விழாவில் வங்கியல்லாத நிதிச் சேவைகள் துறையில் சி.டி.பி. நிறுவனம் தங்க விருதை பெற்றுக்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், நிர்வாக நடைமுறை [illegible] உகிப்படுத்துதலில் கவன[illegible] கொண்டுள்ள நிலைபேறான தன்மைகள், கூட்டாண்மை நிர்வகித்தல் தனித்தன்மைகள் என்பவற்றுக்காகவும் சிறப்பு விருதை பெற்றுக்கொண்டுள்ளது.

இது தொடர்பில் சி.டி.பி. இன் பணிப்பாளரும், முதன்மை நிறைவேற்று அதிகாரியுமான மகேஷ் நாணயக்கார கருத்துரைக்கையில், எமது நிதிசார் தளத்தில் மட்டுமன்றி எமது வலிமையுடன் இணைக்கப்பட்ட சீரான முடிவுகளை நாம் வெளிப்படுத்தி வருகிறோம். சமூக மேம்பாடு தொடர்பிலான கரிசனை மூலம் அடிப்படை நிதி [illegible] உள்ளடக்கத் தத்துவ[illegible] பலித்து வருகிறோம். முக்கிய அம்சங்களான ஸ்திரத்தன்மை, உறுதி மற்றும் நீடிப்பு போன்றவற்றை இந்த விருது அங்கீகரித்துள்ளது. தேசிய அபிவிருத்திக்கு பங்களிப்பு வழங்கும் மக்களின் நீடித்த பொருளாதார மேம்பாட்டைக் கட்டியெழுப்பும் வகையிலான வர்த்தகத்தை நாம் முன்னெடுத்து வருகிறோம்"- என்றார்.

மேற்படி விருது வழங்கல் முயற்சியானது தெரிவு செய்யப்பட்ட பிரிவுகளில் ஒட்டுமொத்த செயற்திறனை வெளிப்படுத்தும் நிறுவனங்களை தேசிய வர்த்தக மேன்மை விருதுகள் ஊடாக அங்கீகரிப்பதுடன் வெற்றியீட்டும் நிறுவனங்கள் தொழிற்துறைக்கு முன்மாதிரியான வகையிலே நிலைநிறுத்தப்படுகிறது. இந்த அங்கீகாரம் என்பது உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ரீதியில் நாட்டினுள்ளான முதலீடுகளை ஈர்ப்பதுடன், தரம், புத்துருவாக்கம், உற்பத்திச் செயற்பாடுகளின் விருத்தி மற்றும் வெளிப்படைத் தன்மை போன்றவற்றை தொடர்ச்சியாக ஊக்குவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



# அறிவியல்

## பூமியின் உள்மையப் பகுதியில் ஆதாரப் பொருள்கள் கண்டறிவு


பூமியின் உள்மையப் பகுதியில் இதுவரை அறிந்துகொள்ளப்படாத ஆதாரப்பொருள் ஒன்று அடையாளம் கண்டு கொள்ளப்பட்டுள்ளதான தகவல் ஜப்பான் விஞ்ஞானிகளால் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

இதன்படி பூமியின் உள்மையப் பகுதியில் நிலவுகின்ற உயர் தட்பவெப்ப நிலையையும்–அழுத்தங்களையும் மீள் உருவாக்கம் செய்து மேற்கொள்ளப்பட்ட சோதனைகளின்போதே இரும்பு மற்றும் நிக்கலுக்கு அடுத்தபடியாகக் கிடைத்துள்ள ஆதாரப்பொருளானது, சிலிக்கானாக இருக்கலாமென்பதான ஊகம் விஞ்ஞானிகளால் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

இன்னுமொரு முக்கியமான ஆதாரப் பொருளாக இருப்பது சிலிக்கான் என நாங்கள் நம்புகிறோம். பூமியின் உள்மையப் பகுதியின் எடையில் ஏறத்தாழ 5 சதவீதமாக இது உள்ளது. இரும்பு-நிக்கல் உலோகக் கலவையில் இது கலந்திருக்கலாம் என டோக்கியா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஆய்வாளர் ஈஜி ஒக்டானி, பி.பி.சி. செய்திச் சேவைக்கு தெரிவித்துள்ளார்.

மேலும் ஆயிரத்து 200 கிலோமீற்றர் ஆழமுடைய பூமியின் உள்மையப் பகுதி திடமான ஒரு பந்து போன்றதாகக் கருதப்படுகிறது. அந்த வகையிலே இந்தப் பகுதிக்குள் அதிர்வலைகளை உட்செலுத்தி அதன் மூலமாக அப்பகுதி எதனால் ஆனது? எப்படி ஆக்கப்பட்டுள்ளது? என்பது தொடர்பில் விஞ்ஞானிகள் தொடர்ச்சியாக ஆய்வுகளை மேற்கொண்டுவருகின்றனர்.

இரும்பால் உருவாக்கப்பட்டுள்ள பூமியின் உள்மையப் பகுதியானது, 85 சதவீதம் இரும்பாலும், அண்ணளவாக 10 சதவீதம் நிக்கலாலும் உருவாக்கப்பட்டுள்ளமை நோக்கத்தக்கது.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org


## ஜல்லிக்கட்டு வழக்கில் உடனடித் தீர்ப்பில்லை

சென்னை, ஜன. 13
ஜல்லிக்கட்டை நடத்துவதற்கு அனுமதிக்க வேண்டும் என்று வலியுறுத்தித் தொடரப்பட்ட வழக்கில் உடனடியாகத் தீர்ப்பு வழங்க முடியாது என்று இந்திய உச்ச நீதிமன்றம் நேற்றுமுன்தினம் தெரிவித்தது.

ஜல்லிக்கட்டுக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கில் உயர் நீதிமன்றம் ஜல்லிக்கட்டு நடத்த தடை விதித்தது. தமிழக அரசின் வற்புறுத்தலால், மத்திய அரசு ஜல்லிக்கட்டு நடத்த ஜனவரி 8 ஆம் திகதி அனுமதி வழங்கி, அறிக்கை வெளியிட்டது. இதை எதிர்த்து தொடரப்பட்ட வழக்கில் உயர்நீதிமன்றம் மீண்டும் ஜல்லிக்கட்டுக்கு இடைக்காலத் தடை விதித்தது. தடையைஎதிர்த்து முறைப்பாடு செய்யப்பட்டது. விசாரணையின்போது, ஜல்லிக்கட்டு மீதான தடையை நீக்கி, தமிழ்நாட்டில் ஜல்லிக்கட்டுக்கு அனுமதி வழங்க வேண்டும் என மத்திய அரசின் தரப்பில் வலியுறுத்தப்பட்டது. இதேபோல் தமிழக அரசின் சார்பிலும் ஜல்லிக்கட்டு விதிமுறைகள் மற்றும் அதன் பாரம்பரியத்தை விளக்கி விவாதிக்கப்பட்டது. எனினும் இந்த விடயத்தில் உடனடித் தீர்ப்பு வழங்க முடியாது என்று தெரிவித்த மன்று வழக்கைப் பிற்போட்டது. (ம)

# ரஷ்யாவுடன் உறவில்லை

## ட்ரம்ப் அடித்தார் பல்டி



வொஷிங்டன், ஜன. 13
ரஷ்யாவுடன் இதுவரை தனக்கு உறவேதும்இல்லை என்று தெரிவித்தார் அமெரிக்காவின் ஜனாதிபதியாகப் பொறுப்பேற்கவுள்ள டொனால்ட் ட்ரம்ப். ரஷ்யா, அமெரிக்காவில் இணைய ஊடுருவல்களை நடத்தியிருக்கலாம் என்ற அச்சத்தையும் அவர் வெளியிட்டார் என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

அமெரிக்காவின் ஜனாதிபதித் தேர்தல் அண்மையில் இடம்பெற்றது. குடியரசுக் கட்சியின் வேட்பாளரான டொனால்ட் ட்ரம்ப், ஜனநாயகக்கட்சியின் வேட்பாளரான ஹிலாரி கிளிங்டனைத் தோற்கடித்து ஜனாதிபதியாகத் தெரிவானார். ஹிலாரியின் தோல்விக்கு ரஷ்யா மீது குற்றஞ் சுமத்தப்பட்டது. ரஷ்யாவின் இணைய ஊடுருவலாளர்கள் ஹிலாரியினதும் ஜனநாயகக் கட்சியினதும் இணையங்களை ஊடுருவி ட்ரம்பின் வெற்றிக்கு உதவினர் என்று அமெரிக்க உளவுத்துறை குற்றஞ் சாட்டியது.

ஹிலாரியின் இணையம் மட்டுமல்லாமல் ட்ரம்பின் போட்டியாளர்கள் சகலரது இணையங்களும் ஊடுருவப்பட்டன. ட்ரம்பின் இணையம் ஊடுருவப்பட்டதற்கான எந்தச் சான்றும் இல்லை என்று அண்மையில் அமெரிக்க உளவுத்துறை தெரிவித்தது. இதனையடுத்து ரஷ்யாவுடன் ட்ரம்புக்கு தொடர்புள்ளது, ஒப்பந்தங்கள் மற்றும் உறவுகள் உள்ளன என்று பரவலாகச் செய்திகள் வெளியாகின. இந்த நிலையில் ட்ரம்ப், குறித்த தகவல்களை மறுத்தார்.

ட்ரம்ப் ரவரில் நேற்று முன்தினம் நடந்த செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு மறுப்புத் தெரிவித்தார்.

எனக்கும் ரஷ்யாவுக்கும் இடையில் எவ்வித உறவும் இல்லை. அவ்வாறு வெளியாகும் கருத்துக்கள் போலியானவை. உளவுத்துறை ஒன்று இவ்வாறு கருத்துக்களைத் திரிபுபடுத்துவது அவமரியாதைக்குரியது.

தேர்தல் காலங்களில் ரஷ்யா சில வேளைகளில் ஊடுருவல்களை நடத்தியிருக்கலாம். அதற்குச் சாத்தியக் கூறுகள் உள்ளன என ட்ரம்ப் மேலும் தெரிவித்தார். (ம-எ)



தாய்லாந்து வெள்ளப்பெருக்கால்

## உயிரிழப்பு 25ஆக உயர்ந்தது பத்து லட்சம் மக்கள் பாதிப்பு

பாங்கொக், ஜன. 13
தாய்லாந்தின் தெற்குப் பகுதியில் கடந்த 10 நாள்களாக பெய்துவரும் தொடர் மழை காரணமாக உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 25 ஆக உயர்ந்தது. பொருள் சேதமும் மிகையாக ஏற்பட்டது.

18 பேர் உயிரிழந்தனர் என்று ஏற்கனவே அறிவிக்கப்பட்ட நிலையில், இந்த எண்ணிக்கை 25ஆக உயர்வடைந்தது. நகோர் சி தம்மராட் மாகாணம் பெரிய பாதிப்பை எதிர்கொண்டுள்ளது. ஒட்டுமொத்தமாக ஆயிரத்துக்கும் அதிகமான கிராமங்களை வெள்ளநீர் சூழ்ந்துள்ளது. 10 லட்சம் மக்கள் நேரடியாகப் பாதிக்கப்பட்டனர். 3 லட்சத்து 60 ஆயிரம்பேரின் உடைமைகள் அடித்துச்செல்லப்பட்டன. வீதிகள் முழுவதுமாக மூழ்கியுள்ளதால் போக்குவரத்துக்களும் முடங்கியுள்ளன. இதனால் மீட்புப் பணிகளும் மந்தகதியில் இடம்பெற்று வருகின்றன. வெள்ள இடரில் அகப்பட்டவர்களுக்கு உலங்குவானூர்தியின் மூலம் உலர் உணவு வழங்கப்படுகிறது. ஆயிரத்து 500 பாடசாலைகள் மூடப்பட்டன. ஆயிரத்துக்கும் அதிகமான பாடசாலைகள் சேதமடைந்தும் உள்ளன. விவசாய நிலங்களும் நீரில் மூழ்கின.

பொதுவாக தாய்லாந்தில் நவம்பர் மாதம் முதல் ஜனவரி மாதம் வரைவறண்ட மற்றும் குளிர்ந்த வானிலையே நிலவும். இந்த ஆண்டு வழக்கத்துக்கு மாறாக கனமழை பெய்துள்ளது என்று தாய்லாந்து ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. (ம-எ)

## வடகொரிய நகர்வைக் கண்காணிக்க உயர் ரக ராடரை அமெ. நிறுவியது

வோஷிங்ரன், ஜன. 13
வடகொரியாவின் நகர்வுகளைக் கண்காணிப்பதற்கு உயர்ந்த தொழில்நுட்பத்துடன் கூடிய ராடரை நிறுவியது அமெரிக்கா.

பன்னாட்டுச் சட்டதிட்டங்களை மீறி வடகொரியா அவ்வப்போது பல்வேறுபட்ட அணுவாயுதச் சோதனைகளை நடத்தி வருகிறது. இதனால் அந்த நாட்டின் மீது ஐக்கிய நாடுகள் சபை பல பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளது. வடகொரியாவின் முக்கிய ஆதாரமான நிலக்கரி விற்பனையைமுடக்கும்வகையில் எந்தவொரு நாடும் வடகொரியாவிடமிருந்து நிலக்கரியை இறக்குமதி செய்யக்கூடாது என்று சில வாரங்களுக்கு முன்னர் தடையுத்தரவு பிறப்பித்தது. இதன்மூலம் வடகொரியா தனது முக்கிய வருவாயை இழந்து அணுவாயுத சோதனையைக் கைவிடும் என்பது ஐக்கிய நாடுகள் சபையின் நோக்கம். ஆனால் வடகொரியா அதற்குக் கட்டுப்படவில்லை. தற்பொழுது, புதிய ஏவு கணையொன்றின் கட்டுமானத்தையும் வடகொரியா தீவிரமாக முன்னெடுத்து வருகிறது. இந்த நிலையில் வடகொரியாவின் நகர்வுகளைக் கண்காணிக்க உயர்ந்த தொழில்நுட்பங்களுடன் கூடிய ராடரை அமெரிக்கா நிறுவியது. ஹவாய் தீவிலேயே குறித்த ராடர் நிறுவப்பட்டது. (ம-எ)



## 6,400 ஆமைகள் இந்தியாவில் மீட்பு

இந்தியாவின் கொல்கத்தா துறைமுகத்துக்குக் கடத்தப்படவிருந்த 6 ஆயிரத்து 400 நன்னீர் ஆமைகள் இந்தியாவில் நேற்றுமுன்தினம் மீட்கப்பட்டன. உத்தரபிரதேச மாவட்டத்தின் அமேதி பகுதியில் மூடைகளில், கிட்டத்தட்ட நான்கு தொன்னுக்கும் அதிகமான எடை கொண்ட ஆமைகள் வைக்கப்பட்டிருந்தன. இந்த ஆமைகள் கங்கைநதிப் பள்ளத்தாக்குப் பகுதிகளில் இருந்து பிடிக்கப்பட்ட ஆமைகள் என்று தெரிவிக்கப்பட்டது. சம்பவம் தொடர்பில் ஒருவர் கைதானார். அவர் ஆமைகளைக் கடத்தும் ஒரு பெரிய கடத்தல் வலையமைப்புடன் சம்பந்தப்பட்டவர் என்று அதிகாரிகள் தெரிவித்தனர். (ம-எ)

## தடைகளைத் தகர்த்து கடலூரில் அரங்கேறியது ஜல்லிக்கட்டு

சென்னை, ஜன. 13
தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டான ஜல்லிக்கட்டுக்கு தடை விதிக்கப்பட்டிருக்கும் நிலையில், தடைகளைத் தகர்த்து கடலூரில் ஜல்லிக்கட்டு நேற்று இடம்பெற்றது.

மிருகவதைச் சட்டத்தின் கீழ் இந்தியாவில் ஜல்லிக்கட்டுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.


தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டு என்றும், ஜல்லிக்கட்டு மீதான தடையை நீக்க வேண்டும் என்றும் தமிழ்நாட்டில் பரவலாகப் போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

ஆனால், தொடர்ந்தும் தடைப் பட்டியலிலேயே ஜல்லிக்கட்டு உள்ளது. இந்த நிலையில் நாம் தமிழர் கட்சியின் ஏற்பாட்டில் கடலூரில் நேற்று ஜல்லிக்கட்டு நடைபெற்றது. 10 காளைகள் போட்டியில் பயன்படுத்தப்பட்டன. 300 வீரர்களும் கலந்துகொண்டனர் என்று இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. (ம-எ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



தோற்றம்
14 . 02 . 1936

மறைவு
10 . 01 . 2017

## நாகலிங்கம் நவரத்தினம்

**(முன்னாள் அரசாங்க ஒப்பந்தகாரரும், விரவாணி சப்தகன்னிமார் தேவஸ்தான ஆதீனகர்த்தாவும்)**

வாதரவத்தையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட நாகலிங்கம் நவரத்தினம் 10.01.2017 செவ்வாய்க்கிழமை சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - தங்கம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான ஐயாக்குட்டி - பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற தங்கச்சிப்பிள்ளையின் அன்புக் கணவரும், தானையா, சிற்றம்பலம், இராசையா, கனகசபை, காலஞ்சென்ற அழகம்மா மற்றும் நவமணி, மகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான ஆச்சிமுத்து செல்லம்மா மற்றும் இரத்தினம் சிவபாக்கியம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், யோகராசா (சிரேஷ்ட முகாமைத்துவ உதவியாளர் - வலயக்கல்வி அலுவலகம் - திருகோணமலை), றஞ்சினிதேவி, சுசீலாதேவி (ஜேர்மனி), பரமானந்தராசா (சுவிஸ்), கோமளாதேவி (லண்டன்), இலக்குணராசா (தொழில்நுட்ப உத்தியோகத்தர் - உள்ளூர் அதிகார சபை, கரவெட்டி), குலதேவராஜா (தொழில்நுட்ப உத்தியோகத்தர் - பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களம், திருகோணமலை) ஆகியோரின் பாசமிகு தந்தையும், பாரதிதாசன் றஞ்சிதமலர் (நிதி உதவியாளர் - கல்வி அமைச்சு, திருகோணமலை), நித்தியானந்தன் (ஜேர்மனி), சுலோசனா (சுவிஸ்), பத்மஸ்ரீ (லண்டன்), சிறீதா (ஆசிரியை - யா/யார்க்கரு விநாயகர் வித்தியாலயம், கரவெட்டி), விஜிதா (முகாமைத்துவ உதவியாளர் - இலங்கை துறைமுக அதிகாரசபை, திருகோணமலை) ஆகியோரின் அன்பு மாமனாரும், பிரியதர்ஷன், நிலக்ஸன், கஜீபன், யதுமிலன், பகீத், வினோஷா, துஷிபுவன், தினேஷா, நிறோஷா, நிவிசன், நிஜிதன், சாம்பவி, சனஞ்சயன், சுகீர்த்தனா, தனுஷ், ஜெலக்ஸ், ஹரிப்பிரியா, ஹரிஷன், மோகனப்பிரியா, நவமிதுலன், அஷ்வினி, விதுர்சன், அம்ரிதா ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.01.2017) வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 10 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக வாதரவத்தை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: ந.பரமானந்தராசா**
**(சுவிஸ் - 0041 7994 02473)**
**ந.குலதேவராஜா - 077 982 3396,**
**ஜெ.பத்மஸ்ரீ (லண்டன்)**

**வாதரவத்தை,**
**புத்தூர்.**

(சி/225)(11,17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## நிறைவேற்று அதிகார முறை ஒழிக்கப்படுமா, இல்லையா?

**2015** ஆம் ஆண்டு ஜனவரியில் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலின்போது, நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறை முற்றாக ஒழித்துக் கட்டப்படும் என்ற வாக்குறுதி மக்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. பரப்புரைகளின்போது பிரதானமாக வலி யுறுத்தப்பட்டிருந்த விடயங்களில் ஒன்றாகவும் அது இருந் துள்ளது.

இருந்தபோதிலும் கடந்தவாரம் இடம்பெற்ற சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் அமைச்சர்கள் கூட்டத்தில், நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறை ஒழிக்கப்படலாகாது, இப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவே 2020 ஆண்டில் இடம்பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலிலும் போட்டியிட்டு பதவியில் அமர வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தது. இது மக்களுக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதியைக் கேலிக் கூத்தாக ஆக்குவதாகும். சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் பொதுச் செயலாளர் துமிந்த சில்வாவால் முன்வைக்கப்பட்ட அந்தத் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதாகத் தெரியவந்துள்ளது. இந்தத் தீர்மானம் குறித்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எதுவும் கூறியதாகத் தெரிய வரவில்லை. அந்தக் கூட்டம் அவர் தலைமையிலேயே நடந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

தேர்தலின்போது அளிக்கப்பட்ட வாக்குறுதியின் பிரகாரமே, 19ஆவது திருத்தச் சட்டம் கொண்டு வந்து நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. நாடாளுமன்றில் சகல கட்சிகளும் அதனை ஆதரித்திருந்தன. அதன்படி ஜனாதிபதிக்கு இருந்த அதிகாரங்களில் பலவும் நீக்கப்பட்டன. ஏனைய அதிகாரங்களும் புதிய அரசமைப்பின் மூலம் ஒழிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்பட்டிருந்த நிலையிலேயே, சுதந்திரக்கட்சி அமைச்சர்கள் இவ்வாறான ஒரு தீர்மானத்தை எடுத்திருக்கிறார்கள். நிறைவேற்று அதிகாரங்கள் இருந்தமையால்தான் மகிந்த ராஜபக்ச காலத்தில் குடும்ப ஆட்சியும், எதேச்சாதிகாரமும் தலைதூக்கி ஆட முடிந்தது. சகல துறைகளிலும் ஊழல், நிர்வாகச் சீர்கேடு, என்பவை தலைதூக்கி யிருந்தன. சட்டத்துறை, நீதித்துறைகளிலும் நிறைவேற்று அதிகாரம், தன் தலையீட்டை நிலைநாட்டியிருந்தது. தங்கள் விருப்பப்படி செயற்படாமைக்காக உயர் நீதிமன்ற தலைமை நீதியரசர் மீது குற்றப்பத்திரிகை நிறைவேற்றப்பட்டு, பதவி நீக்கம் செய்யப்பட்டார். 18ஆவது அரசமைப்புத் திருத்தத்தை நிறைவேற்றி, அதன் மூலம் எத்தனை தடவைகள் வேண்டுமானாலும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டு பதவியில் அமர்ந்து கொள்ள வழி சமைத்துக் கொண்டார் முன்னாள் ஜனாதிபதி. இரண்டாம் நிலை ஜனாதிபதி போல் பாதுகாப்புச் செயலர் செயற்பட்டதையும், இந்த நாடு பார்த்துக் கொண்டிருந்தது. ஆக, வெளிநாடுகளின் படை, ஆயுதம் மற்றும் மூலோபாய நிபுணத்துவ உதவிகளைப் பெற்றுக்கொண்டு, தமிழீழ விடுதலைப் புலிகளைத் தோற்கடித்தமையே ராஜபக்ச செய்திருந்த மாபெரும் சாதனையாக அடிமட்டச் சிங்கள மக்கள் நம்புகிறார்கள். அந்தச் செல்வாக்கின்மீதே அவரும், அவருடன் ஒட்டிக்கொண்டிருப்பவர்களும் இன்று அரசியலில் தலைதூக்கிக் கொண்டிருக்க முடிகின்றது. எனவே மீண்டும் அந்த நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையைக் கொண்டு வருவதற்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சியினர் விரும்புகிறார்கள் என்றால், அதன் நோக்கம் என்ன?

நிறைவேற்று அதிகாரம் நீக்கப்பட்டு இப்போது இருக்கும் நிலைமை நீடித்தால், ஆட்சிக்கு வரும் கட்சி ஐ.தே.கட்சியானால், அதன், செயற்பாடுகளை ஜனாதிபதியால் கட்டுப்படுத்த முடியாமல் போய்விடும். சுதந்திரக்கட்சி ஆட்சி அமைக்கும் நிலை ஏற்படும் என்றும் கூறமுடியாது. எதிர்த்தரப்பினர் கூறு வதுபோல், மகிந்த ராஜபக்ச தலைமையில் ஆட்சி அமையுமானாலும், சுதந்திரக்கட்சியின் இப்போதைய அமைச்சர்களின் நிலை இரண்டும் கெட்டான் நிலையாகும். எனவேதான் அவர்கள் ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரங்களை நீக்கவேண்டாம், தொடர்ந்தும் மைத்திரிபாலவே அந்தப் பதவியில் இருக்க வேண்டும் என்று விரும்புகிறார்கள். இருந்தாலும் அப்படியான ஒரு நிலைப்பாட்டை அந்தக் கட்சியின் மத்திய குழு எடுக்கவில்லை. இதனை முன்னாள் ஜனாதிபதியும், சிறிலங்கா சுதந்திரக்கட்சி போசகர்களில் ஒருவருமாகிய சந்திரிகா குமாரதுங்க சுட்டிக்காட்டி இருக்கிறார்.

தேர்தலின்போது அளிக்கப்படும் வாக்குறுதிகளை மீறிச்செயற்படுவதென்பது இலங்கை அரசியலில் குறிப்பாக, பெரும்பான்மைக் கட்சிகளின் வரலாற்றில் பதிந்துபோயுள்ள சங்கதிகளே. ஆனால், நிறைவேற்று அதிகாரத்தை ஒழிப்பதாக அளிக்கப்பட்ட வாக்குறுதியானது, நிச்சயம் நிறைவேற்றப்படவேண்டும். இல்லையெனில், அடுத்தமுறை மக்களை இவர்கள் எதிர்கொள்வது இலகுவான விடயமாக இருக்காது.



# மகிந்தவின் ஆட்சிக் கவிழ்ப்பு திட்டம் வெறும் கனவேதான்

மகிந்த ராஜபக்ச மீண்டும் ஆட்சிப் பொறுப்பில் அமர்வது குறித்து நினைப்பதற்கே தமிழ் மக்கள் அச்சமடைகின்றனர். கடந்த காலங்களில் அவர்கள் அனுபவித்த துன்பங்கள் அவர்களுக்கு இத்தகையதொரு நிலையை ஏற்படுத்திவிட்டன. மிருகங்களைவிடக் கேவலமாகவே மகிந்த ஆட்சியில் தமிழர்கள் நடத்தப்பட்டனர். இறுதிப்போரின்போது புலிகளுக்கு எதிரான போர் எனக் கூறிக்கொண்டு தமிழர்களை ஒட்டுமொத்தமாக அழிக்கும் நடவடிக்கைகளே இடம்பெற்றன.

சேரலாதன்

நல்லாட்சி அரசை இந்த ஆண்டுக்குள் கவிழ்த்து விடுவோமென முன்னாள் ஜனாதிபதியும், கூட்டு எதிரணியின் தலைவருமான மகிந்த ராஜபக்ச பகிரங்கமாகக் கூறியுள்ளார். அரசின் பக்கமிருந்து அமைச்சர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் கூட்டு எதிரணியில் இணையவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். ஆனால் அரச தரப்பினர் இதை உடனடியாகவே மறுத்துள்ளதுடன், மகிந்தவின் பக்கமிருந்து பலர் அரசுடன் இணையவுள்ளமை தான் உண்மை எனத் தெரிவித்துள்ளனர்.

இந்த வெவ்வேறு முரண்பட்ட கருத்துக்களால் உண்மையான நிலையை அறிய இயலாது மக்கள் குழம்பிய நிலையில் காணப்படுகின்றனர். மைத்திரிபால சிறிசேன என்ற எளிமையான மனிதர் கடந்த ஜனாதிபதி தேர்தலில் மகிந்த ராஜபக்ச என்ற சர்வ வல்லமையும் படைத்த மனிதரைத் தோற்கடித்தபோதிலும். அரசியல் ரீதியாக மகிந்தவை வெற்றி கொள்ள அவரால் முடியவில்லை. விக்கிரமாதித்தனை வேதாளம் துரத்திச் சென்றதைப்போன்று, மகிந்தவும் மைத்திரியைவிடாது துரத்திக் கொண்டிருக்கின்றார். மகிந்தவைக் கைகழுவி விட மைத்திரியால் முடியவில்லை என்பது தெளிவாகத் தெரிகின்றது.

கடந்த 2009ஆம் ஆண்டு போர் ஓய்ந்துவிட்டதாகக் கூறப்பட்ட போதிலும், வடக்கு-கிழக்கில் வசிக்கும் மக்களான [illegible] இன்னமும் முடிவுக்கு வரவில்லை. மகிந்த அரசுடன் ஒட்டிக்கொண்டிருந்தவர்களால் அச்சமானதொரு சூழ்நிலை உருவாக்கப்பட்டிருந்தது. இவற்றைத் தடுப்பதற்கு அரசினாலும் நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை. இடம்பெயர்ந்த மக்களின் நிலைமை பரிதாபகரமான கட்டத்தை எட்டிநின்றது. வலிகாமம் வடக்கிலிருந்து இடம்பெயர்ந்து சென்ற மக்களில் பெரும் தொகையானவர்கள் தமது சொந்த இடங்களில் மீள்குடியமர முடியாத நிலை காணப்பட்டது. புதிய ஜனாதிபதி, பதவி ஏற்றுக் கொண்ட பின்னர், நாட்டில் சமாதானமும் அமைதியும் திரும்பத் தொடங்கின. தமிழ் மக்களின் பிரச்சினைகள் சிலவற்றுக்கான தீர்வுகளும் காணப்பட்டன. ஏராளமான பிரச்சினைகள் தீர்வு காணப்படா[illegible]மலேயே உள்ளன. தாவுகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்பாக ஏற்பட்ட இழுபறி நிலைக்கு மகிந்த தரப்பினரே பிரதான காரணம் என்பதைக் கூறத் தேவையில்லை.

**தமிழ் மக்களைப் பகைத்துக்கொண்ட மகிந்த**


மகிந்த ராஜபக்ச மீண்டும் ஆட்சிப் பொறுப்பில் அமர்வது குறித்து நினைப்பதற்கே தமிழ் மக்கள் அச்சமடைகின்றனர். கடந்த காலங்களில் அவர்கள் அனுபவித்த துன்பங்கள் அவர்களுக்கு இத்தகையதொரு நிலையை ஏற்படுத்திவிட்டன. மிருகங்களை விடக் கேவலமாகவே மகிந்த ஆட்சியில் தமிழர்கள் நடத்தப்பட்டனர். இறுதிப்போரின்போது புலிகளுக்கு எதிரான போர்எனக் கூறிக்கொண்டு தமிழர்களை ஒட்டுமொத்தமாக அழிக்கும் நடவடிக்கைகளே இடம்பெற்றன. வெள்ளைக் கொடியுடன் சரணடைந்தவர்களும் ஈவுஇரக்கமின்றி மிலேச்சத்தனமான வகையில் கொலை செய்யப்பட்டனர். தமிழ்ப்பெண்களும் பெண்போராளிகளும் மானபங்கப் படுத்தப்பட்டனர். பின்னர் இவர்களில் பலர் கொலை செய்யப்பட்டனர். ஆனால் இவை தொடர்பாக அரசு அலட்டிக் கொள்ளவில்லை. மாறாக பொதுமக்கள் ஒருவருக்குக் கூடப் பாதிப்பு ஏற்படாதவகையில், புலிகளிடமிருந்து மக்களைப் பாதுகாப்பதற்கான மனிதாபிமானப் போரையே தான் நடத்தியதாகக் கூறியது.

ஆனால், ஐ.நா.மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிரான தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டன. இதில் போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்களுக்கு எதிரான விசாரணைகள் சர்வதேசத்தின் பங்களிப்புடன் இடம்பெறவேண்டுமென்பது முக்கியமானது. ஆனால், இந்த விடயத்தில் மகிந்த அரசு போன்றே மைத்திரி அரசும் நடந்து கொள்கின்றமை தமிழ் மக்களுக்கு ஏமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

தமிழர்களைப் பொறுத்தவரையில் மத்தியில் ஆட்சியமைக்கும் அரசுகளின் தயவிலேயே வாழ வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது. ஆனால், பெரும்பான்மையினத்தவர்களே ஆட்சிக் கதிரையில் அமர்வதால் சிறுபான்மையினரின் நலன்கள் புறக்கணிக்கப்பட்டு வருகின்றமை தொடர்கதையாகிவிட்டது. தற்போதைய ஜனாதிபதி சிறுபான்மையின மக்கள் தொடர்பாக காருண்யம் காட்டுகின்ற மனப்பக்குவம் பெற்றவராக இருப்பினும், இனவாதிகளுக்கு அடிபணிந்து போகின்ற குணநலன் மிக்கவராகவும் காணப்படுகின்றார். அவரது பலவீனத்தை மகிந்த தமக்குச் சாதகமாகத் திருப்புவதற்கு முற் படுகின்றார். மகிந்த தரப்பினருக்கு எதிரான விசாரணைகள் உரிய வகையில் இடம்பெறாது இழுத்தடிக்கப்படுவதும், அரசுக்கு எதிரான மனப்பான் மையை மக்கள் மத்தியில் ஏற்படுத்தி வருகின்றது. எதிர்த்தரப்பினர் தாம் அரசினால் பழிவாங்கப்படுவதாகக் கூறி மக்களின் அனுதாபத்தைப் பெறுவதற்கு முயல்கின்றார். மேலும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிராக சிறிலங்கா சுதந்திரக் கட்சியினரைத் தூண்டிவிடுகின்ற செயற்பாடுகளும் இடம்பெறுகின்றன.

**ரணிலை வெறுத்தொதுக்க முயலும் சுதந்திரக் கட்சியினர்**

**சிறிலங்கா சுதந்திரக் கட்சியினர் ரணில் விக்கிரமசிங்க பிரதமர் பதவியில் அமர்ந்திருப்பதை ஏற்கனவே விரும்பாத நிலையில், எதிர்மறையாக அவர்களின் உணர்வுகளைத் தூண்டிவிடுவதில் எதிரணியினர்கள் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.**



“ சிறிலங்கா சுதந்திரக் கட்சியினர் ரணில் விக்கிரமசிங்க பிரதமர் பதவியில் அமர்ந்திருப்பதை ஏற்கனவே விரும்பாத நிலையில், எதிர்மறையாக அவர்களின் உணர்வுகளைத் தூண்டிவிடுவதில் எதிரணியினர்கள் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். இதைவிட அரசின் தவறான நடவடிக்கைகளை மக்கள் முன்பு கொண்டு செல்வதும் எதிரணியின் முக்கிய செயற்பாடாகக் காணப்படுகின்றது. அத்தியாவசியப் பொருள்களின் விலையுயர்வு மக்களைப் பெரிதும் பாதித்துள்ளது. குறிப்பாக அரிசியின் விலை இரண்டு மடங்காக அதிகரித்ததால் அன்றாடம் உழைத்துச் சீவியம் நடத்துகின்ற குடும்பங்கள் பெரும் அவலங்களை எதிர்கொண்டு வருகின்றன.

இதைவிட, அரசின் தவறான நடவடிக்கைகளைமக்கள் முன்பு கொண்டு செல்வதும் எதிரணியின் முக்கிய செயற்பாடாகக் காணப்படுகின்றது. அத்தியாவசியப் பொருள்களின் விலையுயர்வு மக்களைப் பெரிதும் பாதித்துள்ளது. குறிப்பாக அரிசியின் விலை இரண்டு மடங்காக அதிகரித்ததால் அன்றாடம் உழைத்துச் சீவியம் நடத்துகின்ற குடும்பங்கள் பெரும் அவலங்களை எதிர்கொண்டு வருகின்றன.

தமது பிரச்சினைகள் தொடர்பாக அங்கவீனமடைந்த முன்னாள் படைவீரர்களும் போராட்டத்தில் ஈடுபட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது. அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனாவுக்குக் கையளிப்பதையும் மகிந்த தரப்பினர் எதிர்த்து வருவதுடன், அது தொடர்பாக அரசுக்கு எதிராகப் பெரிய அளவில் பரப்புரைகளையும் மேற்கொண்டு வருகின்றனர்.

**ஆட்சிக் கவிழ்ப்புக்கான வாய்ப்புக் குறைவே**

ஆனால் நாடாளுமன்றத்தில் நல்லாட்சி அரசுக்கு ஆட்சியைத் தொடர்வதற்கான பெரும்பான்மைப் பலம் உள்ளதால் ஆட்சிக் கவிழ்ப்பு இடம் பெறுவதற்கான வாய்ப்புக்கள் குறைவாகவே உள்ளன. முன்னர் தெரிவிக்கப்பட்டமை போன்று ஜனநாயக வழிகளுக்கு அப்பால் சென்று படையினரின் உதவியுடன் மட்டுமே ஆட்சிக் கவிழ்ப்பை மேற்கொள்ள முடியும். ஆனால் இதுவொரு எளிதான காரியமாக இருக்கமாட்டாது. அமெரிக்கா உள்ளிட்ட சில நாடுகள் அவ்வாறொரு நிலை ஏற்படுமாயின் நேரடியாக இலங்கையில் தலையீடு செய்யக்கூடிய சாத்தியங்கள் அதிகமாக உள்ளன.

ஆகவே எந்த வகையிலாது ஆட்சியைக் கலைக்கவேண்டும் என்ற மகிந்தவின் கனவு எளிதில் நிறைவு பெறமாட்டாது எனக்கூறிவிட முடியும். இனவாத நடவடிக்கைகள் காரணமாக சிறுபான்மை இனத்தவரின் வெறுப்பைச் சம்பாதித்துள்ள கூட்டு எதிரணியினர், பெரும்பான்மையின மக்களை மட்டுமே நம்பியுள்ளனர். ஆனால், பெரும்பான்மையின மக்களை மட்டுமே நம்பியிருப்பதால் பயன் கிடைக்காது என்பதைக் கடந்த ஜனாதிபதி தேர்தல் அவர்களுக்கு எடுத்துக் காட்டிவிட்டது. சிறுபான்மையினரான தமிழ், முஸ்லிம் மக்களின் வாக்குகளால் தான் மைத்திரி தேர்தலில் வெற்றி பெற்று ஜனாதிபதியானார். ஆகவே ஆட்சியைக் கவிழ்ப்பதும், தேர்தலில் வெற்றிபெற்று அரசை அமைப்பதும் மகிந்த தரப்புக்கு வெறும் கனவாகவே மாறிவிடப் போகின்றன.

மகிந்தவின் கடந்தகால செயற்பாடுகளை அறிந்தவர்கள் மகிந்த தரப்பினர் அதிகாரத்துக்கு வருவதை ஒரு போதுமே விரும்பமாட்டார்கள்.



# வாசகர் திருமுகம்

## பெண்களுக்குப் பாதுகாப்பு அவசியம்

ஒரு பெண் தனித்து இரவு வேளையில் எவ்வித அச்சமும் இல்லாமல் பயணிக்க முடியும் என்றதொரு நிலை தமிழர் பிரதேசங்களில் நிலவிய காலகட்டமொன்று முன்னர் இருந்ததென்னமோ உண்மைதான். அந்த நிலை முற்று முழுதாக மாறி, பெண்கள் பகலில் கூடத் தனித்து எங்கும் பயணிக்க முடியாதென்ற சூழ்நிலை அண்மைய காலத்தில் தமிழர் பகுதிகளில் குறிப்பாக, யாழ். குடாநாட்டில் நிலவி வருவது பலரும் அறிந்ததொன்றே.

அந்த வகையில் பலதரப்பட்ட வகைகளில் அதிகரித்துவரும் பெண்கள் மீதான வன்முறைகளைக் கட்டுப்படுத்த தீவிர நடவடிக்கை எடுக்கப் போவதாக யாழ்ப்பாண மூத்த பொலிஸ் அத்திட்சகர் உறுதியளித்திருப்பது யாழ்.குடாநாட்டுப் பெற்றோர்கள் பலருக்கு நிம்மதியைத் தந்துள்ளது. அந்த வகையில் பெண்களது பாதுகாப்பை உறுதிப்படுத்த பொலிஸ் தரப்பினர் துரித, உரிய நடவடிக்கையை மேற்கொள்வர் என எதிர்பார்ப்போம்.

ப.இராசு
இருபாலை

## தேர்தல்கள் உரிய வேளையில் நடத்தப்படுவதே சிறப்பு

உரிய வேளையில் உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தலை நடத்தாது, அதனைத்தள்ளிப்போட்டு வருவதற்குப் பல நொண்டிச் சாட்டுக்களை முன்வைத்து வருகின்றது நல்லாட்சி அரசு. குறித்த தேர்தலைப் பின்போட்டு வருவது ஜனநாயகத்துக்கும் பொது வாக்குரிமைக்கும் விரோதமானது என அண்மையில் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவரே மனம் நொந்து கருத்து வெளியிட்டுள்ளார். இந்த நிலையில் தேர்தலில் தமது தரப்புக்கு வெற்றி வாய்ப்புக்கான தருணம் ஏற்படும் வரை அதனை அரசு பின்போட்டு வருகின்றது என்ற குற்றச்சாட்டும் ஒருபுறம் முன்வைக்கப்பட்டு வருகிறது. சோதிடர்கள் கொடுத்த கயிறை விழுங்கிக் கொண்டு வெற்றி வாய்ப்புக்கான தருணமிதுவே எனக் கணக்கிட்டு உரிய வேளைக்கு முன்னரே ஜனாதிபதித் தேர்தலை நடத்திய மகிந்த மண் கவ்விய கதையும் நல்லாட்சி அரசுக்குத் தெரியாத ஒன்றல்ல.

அந்த வகையில் 'ஓடு மீனோடி உறுமீன் வருமளவும் வாடியிருந்த கொக்கு' கடைசியில் ஏமாந்தது போன்றில்லாமல், ஜனநாயக நடைமுறைக்கு மதிப்பளித்து உள்ளூராட்சித் தேர்தலை நல்லாட்சி அரசு உடனடியாக நடத்த முன்வருவதே நியாயமானது.

ப.வேலும் மயிலும்
[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT



**படி**
உரையாற்றுவதற்கா கவோ உபதேசம் செய் வதற்காகவோ படிக் காதே.
*- ஜேம்ஸ் ஆலன்*



**எளிமை**
எளிமையைப் பின்தொடர்ந்து மகிழ்ச்சி வருகிறது.
*- கெதே*




**அன்பு**
எதன்மேல் நாம் அன்பு செலுத்துகிறோமோ, அதுவே எம்மை உரு வாக்குகின்றது.
*- யொஹன் கேத்தே*

# வரலாற்றில் இன்றைய தினம்

1994 - போர்க் கைதிகளை விடுவிப்பதில் இராணுவத் தளபதி அக்கறை எனத் தெரிவிப்பு.
1995 - அரசியல் தீர்வு குறித்த பேச்சு அடுத்த மாதம் முதல் வாரத்தில் நடக்கும் என பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் கேணல் அனுரத்த ரத்வத்த தெரிவிப்பு.
2004 - தனது பதவிக் காலத்தை மேலும் ஒரு வருடம் நீடிக்க முடியும் என ஜனாதிபதி சந்திரிகா தெரிவிப்பு.
2008 - கிழக்கில் தேர்தலை ஆயுத வன்முறைகள் மூலம் வெல்ல அரசும் அதன் துணைக் குழுக்களும் முயற்சி என முஸ்லிம் காங்கிரஸ் பகிரங்கக் குற்றச்சாட்டு.
2016 - மைத்திரி அரசின் நல்லிணக்க முயற்சிக்கு இந்தியா பாராட்டு.

# கலிலியோ கலிலி



விஞ்ஞானி கலிலியோ உண்மையை உலகிற்கு எடுத்துக் கூறியவர். உண்மையைச் சொன்ன அவர் என்ன ஆனார்?

கலிலியோ கலிலி இத்தாலிய விஞ்ஞானி. எமது சூரிய குடும்பத்தின் அமைப்பு, வான சாஸ்திரம் ஆகியவை குறித்துப் புதிய விடயங்களைக் கண்டுபிடித்து அறிவித்தவர். அவருடைய கண்டுபிடிப்புகள்தான் புதிய சிந்தனையை உருவாக்கின. இத்தாலியின் பிசா நகரில் 1564 ஆம் ஆண்டு பெப்ரவரி 15ஆம் திகதி பிறந்த இவர், 1642ஆம் ஆண்டு ஜனவரி 8 ஆம் திகதி இறந்தார்.

வானவியல் அறிஞர், வேதியியல் வல்லுநர், கணிதவியலாளர், தத்துவஞானி, கண்டுபிடிப்பாளர் எனப் பன்முக ஆற்றல் பெற்றவர். தொலைநோக்கி, கொம்பாஸ், தேர்மா மீற்றர் ஆகியவை இவரது கண்டுபிடிப்புகளில் முக்கியமானவை. இயற்பியலின் தந்தை, நவீன அறிவியலின் தந்தை, நவீன வானியலின் தந்தை என் றெல்லாம் அழைக்கப்படுகிறார்.

1610 ஆம் ஆண்டு, வியாழன் கிரகத்தை நான்கு பொருள்கள் சுற்றுவதைக் கண்டுபிடித்தார். இவை, வியாழனின் மிகப்பெரிய நிலவுகளாகும். லோ, கலிஸ்டோ, ஈரோப்பா, கனிமீடு என்று இவை அழைக்கப்படுகின்றன.


கலிலியோ, கோபர் நிகோலஸ், ஜோகன்னஸ் கெப்லர் ஆகியோரின் ஆய்வுகள் முதன்முறையாக சூரியனை நடுநாயகமாகக் கொண்டு பூமி உள்ளிட்ட கோள்கள் சுற்றி வருவதாக நிரூபித்தன.

பூமியில் கடல் அலைகள் உருவாவதற்கு நிலவுதான் காரணம் என்ற கெப்லரின் கோட்பாட்டை ஏற்க கலிலியோ மறுத்தார்.





# வர்ணம் தீட்டுவோம் வாங்க....



# கருமியின் அவல முடிவு



ஒருமுறை மாந்தோப்பு என்ற ஊரில் இருந்த ஆற்றில், ஓடக்காரர் ஓடத்தை ஓட்டிக் கொண்டிருந்தார். அந்த ஓடத்தில் ஒரு கருமியும், எண்ணெய் வியாபாரி ஒருவரும் அமர்ந்திருந்தனர்.

ஓடம் நதியின் நடுவே சென்றபோது, முதலை ஒன்று ஓடத்தை வழி மறித்தது. தன் வாயை, ஆவெனப் பிளந்து காட்டியது.

முதலையைக் கண்டதும் மூவரும் திடுக்கிட்டனர்.

வாயைப் பிளந்த முதலை மூவரையும் நோக்கியது.

நான் மிகவும் பசியோடு இருக்கிறேன். எனவே, உங்கள் மூவரில் ஒருவர் எனக்கு இரையாகிட வேண்டும். மூவரில் யார் இரையாகப் போகிறீர்கள் என்பதை நீங்களே தீர்மானம் செய்து கொள்ளுங்கள், என்றது.

உடனே ஓடக்காரர் அழ ஆரம்பித்தார்.

ஐயோ! நான் என்ன செய்வேன்! என்னை நம்பி என் குடும்பம் இருக்கிறது. என்னை முதலை விழுங்கி விட்டால், அவர்களின் கதி அதோகதியாகிவிடும்–என்றார்.

இதைக் கேட்ட எண்ணெய் வியாபாரியோ, என் பெண்ணுக்கு திருமண ஏற்பாடு செய்துள்ளேன்.

நான் முதலைக்குப் இரையாகி விட்டால், அவளது திருமணம் நின்றுவிடும். அவள் வாழ்க்கையே கேள்விக் குறியாகிவிடும்– என்றார்.

உடனே கருமி, ஐயோ! அம்மா! என்று தன் வாயிலும், வயிற்றிலும் அடித்துக் கொண்டார். என் பணமெல்லாம் யார் அனுபவிப்பார்கள்! இப்போதுகூட என் மடி நிறைய பணம் இருக்கிறது. முதலை என்னை விழுங்கினால் இந்தப் பணமும் முதலையின் வாயில் சென்றுவிடுமே! நான் இறக்க மாட்டேன். இங்கிருந்து தப்பித்துச் சென்றிடுவேன். நீங்கள் இருவரில் ஒருவர் முதலைக்கு இரையாகுங்கள்– என்றார்.

அந்நேரம் முதலையானது ஓடத்தின் மீது பாய்ந்து கருமியை விழுங்கிய பின்னர் மற்ற இருவரையும் பார்த்தது.

வியாபாரியே! நீ உன் மகளுக்காக வாழ்கிறாய்; ஓடக்காரர் மனைவி, மக்களுக்காக வாழ்கின்றார்.

நீங்கள் இருவரும் மற்றவர்களுக்காக வாழ்வதால் உங்களை விட்டு வைத்தேன். இந்தக் கருமி பணத்திற்காக வாழ்ந்ததால் அவரை விழுங்கினேன்– என்றது முதலை.

முதலையின் பதிலைக் கேட்டு உறைந்து போயினர் இருவரும்.



# நல்வழி காட்டுங்கள்

- எது இதமானது?
  தர்மம்
- எது நஞ்சு?
  பெரியவர்களின் அறிவுரையை அவமதிப்பது.
- எது மதுவைப் போல மயக்கம் தரும்?
  பற்று
- யார் கள்வர்கள்?
  புலன்களை இழுத்துக் கொண்டு போகும் விடயங்கள்.
- யார் எதிரி?
  சோம்பல்
- எதற்கு எல்லோரும் பயப்படுவார்கள்?
  சாவு
- எவர் குருடனை விடக் குருடன்?
  ஆசைகள் உள்ளவன்.
- எவர் சூரன்?
  கெட்ட வழியில் மனம் செல்லாமல், அதை அடக்குபவன்.

# கொக்... கொக்... சேவல்



கொக்..கொக் கொக்
கொக்கரக்கோச் சேவல்! அழகுக்
கொண்டை உள்ள சேவலுன்
கொக்கரக்கோ உலகை எழுப்புகிறதே
(கொக்)

கொள்ளையழகு இறகும் வாலும்
கொற்றவனாய் உன்னைக் காட்டும்.
கொக் கொக் கொக்காம்
கொக்கியால் கோழியை வளைக்கிறாய்.
(கொக்..)

கொண்டைச் சேவல் கொக்கரக்கோ
கொல்லையில் நின்று கூவுவாய்
கொக்கரக்கோ கொடியை ஏற்றி
கொக்கரித்து நாள் தொடக்குகிறாய்
(கொக்..)

வெள்ளை, கறுப்பு சேவல்
கொள்ளையிடும் கலப்பு நிறம்
உள்ளம் கவரும் கொக்கரக்கோ
உள்ளபடி ஒன்று தான்
(கொக்..)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நட்சத்திரப் பலன்கள்

*(டிசெம்பர் மாதம் 15ஆம் திகதி இறுதியாக வெளிவந்த நட்சத்திரப் பலன்களின் தொடர்ச்சி.)*

**பூச நட்சத்திரப் பலன்கள்**

பிரகஸ்பதி என்ற குருபகவான் இந்த நட்சத்திரத்தில் அவதரித்தார். இதன் அதிபதி சனி பகவான் ஆவார். இந்த நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் எப்பொழுதும் தெய்வபக்தியுடனும் நல்ல சிந்தனையுடனும் வாழ்வார்கள்.அழகிய உடல் அமைப்பும், அழகிய வாயும் உடையவர்கள். கண்கள் அழகாகவும் நெற்றி உயர்ந்தும் எப்பொழுதும் சுறுசுறுப்புடனும் விளங்குவர். தாய் தந்தையரிடம் பற்றும் பாசமும் உள்ள இவர்கள், வாசனைத் திரவியங்களைப் பூசிக்கொள்வதில் ஆர்வமும் சந்தோசமும் உடையவர்கள். அடிக்கடி பொய் பேசுவார்கள். இவர்களின் சொல்லுக்கும் செயலுக்கும் சம்பந்தமே இருக்காது.

**பூசம் 1ம் பாதம்**

எப்பொழுதும் பேராசை பிடித்த இவர்கள், மற்றவர்களிடமிருந்து தனித்து வாழும் ஆர்வம் உடையவர்கள். நீண்ட காலம் வயிற்று வலியால் அவதியுறுவர், பிறருடைய குற்றம் குறைகளை வெகு எளிதாகக் கண்டு அவர்களைக் கேலி செய்வர். நல்ல அறிவும் ஆற்றலும் உள்ள இவர்கள் எப்பொழுதும் சுயநலமாக வாழ்வர்.

**பூசம் 2ம் பாதம்**

நல்ல பொருள் சேர்த்துப் பணக்காரராக வாழ ஆசைப்படுவர். பலபேர்களிடம் நல்ல நட்புடனும் சிநேகத்துடனும் வாழ்வர். தனக்காக வாழாமல் பிறருக்காகப் பணத்தை வீண் செலவு செய்பவரார்களாகவும், நல்ல அனுபவம் உடையவர்களாகவும் இருப்பார்கள். எதிலும் நிதானமாகச் செயற்படுவர். மற்றவர்களின் குற்றம் குறை களை வெகு எளிதில் கண்டுபிடித்து விடுவர்.

**பூசம் 3ம் பாதம்**

நல்ல மெலிந்த தேகம் உடையவர்கள். எல்லோருக்கும் நல்லவர்களாகவும், எல்லோரையும் அனுசரித்துப் போகும் விருப்பம் உள்ளவர்களாகவும் விளங்குவர். பிறர் சொல் கேட்காதவர்கள், எப்பொழுதும் உண்மையுடன் நடந்து கொள்வர், சதா சிரித்த முகத்தோடு இருப்பர். பெண்களால் அவமானப்படுவர்.

**பூசம் 4ம் பாதம்**

எப்பொழுதும் கெட்ட எண்ணம், கெட்ட சிந்தனைகள் உடைய இவர்கள், கர்வத்துடன் இருப்பார்கள். மற்றவர்களின் துன்பங்களைக் கண்டு ஆனந்தப்படுவார்கள். காமகுணம் அதிகம் காணப்படும். இவர்கள் தமக்கு நிகர் யாரும் இல்லை என்ற எண்ணம் உடையவர்கள்.

**நாளை**

**தை-01**

சனிக்கிழமை -14.01.2017

திதி: துதியை பி.ப.03.43

நட்சத்திரம்: ஆயிலியம் பி.இ.02.02

ராகுகாலம்:09.34-11.04 வரை

சுபநேரம்:03.34-05.04 வரை

தைப்பொங்கல்

# அதிபர் பதவிதான் வேண்டும் அடம்பிடிக்கும் அதிபர்கள்

வடக்கு மாகாணத்தில் உள்ள கடமை நிறைவேற்று அதிபர்கள் கடந்த செவ்வாய்க் கிழமை வடக்கு மாகாண சபை முன்பாகப் போராட்டம் நடத்தியிருந்தனர். வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் போராட்டம் நடத்திய அதிபர்களுடன் பேச்சு நடத்தி விட்டு அவைக்குள் திரும்பும்போது, மாகாண சபை உறுப்பினர் ஒருவர், "இவங்களே பரீட்சையில் சித்தியடையக் காணேல்ல. பிள்ளைகளை எப்படிச் சித்தியடைய வைக்கப் போறாங்கள்" என்று சக உறுப்பினர்களுடன் பேசிக் கொண்டார்.

உண்மைதான். அந்த உறுப்பினரின் கருத்தில் நியாயம் இருக்கத்தான் செய்கின்றது. அதிபர் தேர்வுக்கான போட்டிப் பரீட்சையில் தோற்றிச் சித்தியடையத் தவறிய கடமை நிறைவேற்று அதிபர்கள், பரீட்சையில் தோற்றிச் சித்தியடைந்தவர்களுக்கு அதிபர் பதவி கொடுக்கக் கூடாது என்று போராடுவதில் எந்த நியாயமும் இருக்கப் போவதில்லை.

வடக்கு மாகாணத்தின் கல்வித் தரம் வீழ்ச்சியடைந்து செல்கின்றது. "எப்படியிருந்த எங்களுடைய கல்வித் தரம் இன்று இந்த நிலைக்குப் போய் விட்டது" என்று ஒப்பாரி வைக்காதவர்கள் கல்விப் புலத்தில் குறைவு. கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகள் கடந்த ஆண்டு வெளியாகியவுடன், யாழ்ப்பாணம் உள்ளிட்ட வடக்கு மாகாணத்தின் மாவட்டங்கள் பின்னடைவைச் சந்தித்து விட்டன என்று முதலாவதாகக் குரல் எழுப்பியவர், இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலர் சரா புவனேஸ்வரன்.

வடக்கின் கல்வித் தரம் வீழ்ச்சியடைந்ததற்குப் பல காரணங்கள் சொல்லப்படுகின்றன. மாணவர்களைச் சரியாக வழிநடத்தும் அதிபர்கள் இல்லாததும் அதில் ஒரு காரணம். அதிபர் தரத்துக்குத் தகுதியானவர்கள் கடந்தகாலப் போர்ச் சூழ்நிலை காரணமாக கிடைக்காமல் போய்விட்டனர். ஆனால் போர்ச் சூழல் முடிந்த பின்னர், நாம் விரும்பியோ விரும்பாமலோ சிவில் வாழ்க்கைச் சூழலுக்குள் பிரவேசித்து விட்டோம். பதவிகள், அந்தந்தப் பதவிக்குரிய தகுதிகளின் அடிப்படையில் வழங்கப்பட வேண்டும். அப்போதுதான் அந்தப் பதவியின் வழியில் உயர் பயனைப் பெற முடியும். எனவே கல்வித் தரம் முன்னேற வேண்டுமாயின், அதிபர் பதவிக்குத் தகுதியானவர்கள் நியமிக்கப்பட வேண்டும் என்பதும் தவிர்க்க முடியாததாகின்றது.

வடக்கின் கல்வித் தரத்தின் மீது இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் சரா புவனேஸ்வரனுக்கு உண்மையான அக்கறை இருக்குமாயின், அதிபர் பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கு அந்தப் பதவியைப் பெற்றுக் கொடுக்கப் போராட வேண்டும். ஆனால் அவரோ, அதிபர் பரீட்சையில் சித்தியடையத் தவறி, குறுக்கு வழியில் அதிபர் பதவியைப் பெற்றிடத் துடிக்கும் கடமை நிறைவேற்று அதிபர்களுக்கு ஆதரவாகச் செயற்பட்டு வருகின்றார்.




இலங்கை ஆசிரியர் சங்கம், அதிபர் பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்குப் பாடசாலைகள் வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன்னிலைப்படுத்தியதால், ஏட்டிக்குப் போட்டியாக கடமை நிறைவேற்று அதிபர்களுக்காக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் களம் கண்டிருக்கின்றது. இரு தொழிற் சங்கங்களுக்கும் இடையிலான போட்டியினால் பாதிக்கப்படப் போவது மாணவர்கள்தான்.

மாணவர்கள் நலனில் இதயசுத்தியுடனான, உண்மையான அக்கறை இருக்குமாக இருந்தால், கடமை நிறைவேற்று அதிபர்கள் தங்கள் போராட்டத்தைக் கை விட்டு, அதிபர் தரத்தில் சித்தியடைந்தவர்களுக்கு வழிவிட்டுக் கொடுத்து, தமக்கு வழங்கப்படுகின்ற வேறு பதவிகளை ஏற்பதுதான் நியாயமானது.

இதன் மூலமாக அவர்கள் வடபகுதியின் கல்வி வளர்ச்சிக்குப் பெரிதும் உதவ முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வானாதி பூத சராசரம் தழைக்கும் சிவபூஜைத் தவப்பேறு கண்டோம்

கே.எஸ்.சிவஞானராஜா

இந்துசமயப்பேரவையால்கடந்தமாதம் 4 ஆம் திகதி ஞாயிறன்று, பேரவையில் அமைந்துள்ள நடராஜர் மண்டபத்தில் சிவபூசை மாநாடு மிகவும் பக்திபூர்வமாகவும், விளக்கபூர்வமாவும் நடைபெற்றது.

முழுமுதற்கடவுளராகிய சிவபெருமானையும், அம்பாளையும் பார்வதிசமேத பரமேஸ்வரராகக் கண்டுகளிக்கும் பேற்றை இந்து சமயப் பேரவை கொண்டிருக்கிறது. சிவனே சைவ சமயத்தவர்களுக்கு தவமாக்கும் தெய்வம். திருமுறைகளில் பொலிந்து காணப்படும் தெய்வமாக சிவபெருமான் அருள் சுரக்கின்றார், பொருள் நிறைக்கின்றார், வரம் தருகின்றார். கருக் கொள்கின்றார், பெருக் கெடுக்கின்றார். செருக்கு அடக்குகின்றார். இதனாலன்றோ திருமுறைகளை என்றும் ஓதுமாறும், அதன் ஆன்மிகப் பேற்றைப் பெற்று வாழ்வில் உய்யுமாறும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் இடித்துரைக்கின்றார். நாம் என்ன செய்கின்றோம்? சைவசமய அங்கீகாரமான தீட்சை பெறாமல், சிவபூசை செய்யாமல், திருமுறையோதாமல், நில்லாதவற்றை நிலையென்றுணர்ந்து கொண்டு, காற்சட்டை, மேற்சட்டை, பெனியன், போர்வையோடு வலு ஒய்யாரமாகவும், துணிவோடும், அதிகாரத்தோடும் கோயிலுக்குள் பயணிக்கிறோமே! என்னகொடுமையிது? சமயத்தோடு புலுடா விடலாமா? இத்தகு சிந்திக்கத்தக்க 'சிவபூசை அலைகள்' எனது உடம்பை அதிரச் செய்தன, விடைகிடைத்தது. 'அந்தணர் என்போர் அறவோர்' என்ற கருத்து மேன் மேலும் ஒலித்தது.

### அலைகள்

அன்றைய தினம், தவப்பேறாகி அமையும் வண்ணம், மந்திர அலைகளால் பேரவையை நிரப்பிய குருவானவர்கள்;
01.கிரியாக்கிரம ஜோதி, பிரதமசிவாச்சாரியார், சிவஸ்ரீ ச. சோமாஸ்கந்தக் குருக்கள், 02.இணுவில் சாஸ்தா குருகுல அதிபர் சிவஸ்ரீ தா. மகாதேவக் குருக்கள், 03.இந்துக்குருமார் ஒன்றியத் தலைவர், சிவாகம ஞானதிலகம், சிவ ஸ்ரீ ச.மனோகரக் குருக்கள், 04.சுன்னாகம் கதிரமலைச் சிவன் கோயில் பிரதம சிவாச்சாரியார் கிரியாக்கிரம ஜோதி சிவஸ்ரீ ஞா.சர்வேஸ்வரக் குருக்கள், 05. கலாபூசணம், வித்தியா பூசணம் சிவ ஸ்ரீ ப.சிவானந்தசர்மா, சமஸ்கிருத பண்டிதர் பிரம்ம ஸ்ரீ சுவாமி பஞ்சாட்சர ஐயர், பொன்னாலைப் பண்டிதர் தி.பொன்னம்பலவாணர், நகுலேஸ்வரம் ஆதீனகர்த்தா ராஜராஜஸ்ரீ கு.நகுலேஸ்வரக் குருக்கள் ஆகியோர் போற்றி வணங்கத்தக்கவர்களாவர்.

### உண்மை

இறைவனுக்கு அடுத்தபடியாக வணங்கப்பட வேண்டியவர்கள் அந்தணப் பெருமக்களேயாவர். இறைவன் திருமேனியைத் தொட்டு, நீராட்டி, சீராட்டி, அழகூட்டி, மணமூட்டி, ஆடை அணிகலன்கள் அணிவித்து, மிகப் பொறுமையோடு, ஆறுகாலப்பூசைகளையும் நாளாந்தம் சலிக்காது ஒழுங்காகச் செய்பவர்கள் அந்தணர்களே. ஆகமவிதியின்படி அந்தணர்கள் அல்லாதவர்கள் மூலஸ்தானத்துக்குள்ளே செல்வது ஏற்புடையதல்ல. அவ்வாறு நாம் பூசைசெய்வதற்கு, ஆகம விதிப்படியமைந்த கோயில் நிர்வாகம் எம்மை ஒரு போதும் அனுமதிக்காது. அப்படியிருக்கும்போது சிவப்பிராமணர்களையும் அவர்களது கடமைகளையும் நிந்திப்பது ஆரோக்கியமானதல்ல. சிவதீட்சையும், சிவபூசையும் ஆற்றி வழிபாடாற்றுகின்ற பல அந்தணச் சிவாச்சாரியார்களை நாம் உளமாரக் கண்டு அனுபவிக்கின்றோம். இத்தகு பெறுமதியானவர்களினாலேயே உலகம் இன்றும் வாழ்ந்து வருகிறது. எனவே அந்தணப் பெருமக்கள் சார்பாக குரல்கொடுக்கவல்ல, பொன்னாலை, சிவஸ்ரீ ச.சோமாஸ்கந்தக் குருக்களின் தலைமையில் சுன்னாகம் கதிரமலைச்சிவன் கோயில் பிரதம சிவாச்சாரியார், மூத்த சிவாச்சாரியார், சிவஸ்ரீ ஞா. சர்வேஸ்வரக்குருக்களின் பெறுமதியான உரையும்,விளக்கங்களும்கண்டு அனுபவித்து மகிழத்தக்கவையாகும். சபையிடமிருந்து தொடுக்கப்பட்ட கேள்விகளுக்கும், சந்தேகங்களுக்கும் சிவாச்சாரியார் தக்க பதில் அளித்தார்.
சமஸ்கிருதங்களிலே உள்ளவாறு, பொருள் தெரிந்து, வேத வாழ்வு பெறுவார்களாயின் உலக வாழ்வு உன்னதமாகும். மந்திரங்கள் யாவும் சமஸ்கிருதத்திலே உள்ளபடியால், அது புரிந்தவர்களுக்கு பஞ்சாமிர்தமாகவும், புரியாதவர்களுக்கு வேம்பாகவும் கசப்பதனால் விமர்சனங்கள் எழுவது கவலைக்குரியதே.

> நடராஜப் பெருமான் தினம்தோறும் அருள் பாலிப்பதற்கான ஒழுங்கான காலைப்பூசை ஆச்சாரிய அபிஷேகமதன் பேறு கொண்ட ஈசான சிவம் சக்திகிரீவனால் மனமுவந்துநடத்தப் பெறுகிறது.

### ஈசானசிவம்

வடமொழியாம் சமஸ்கிருதத்தில் உள்ளவாறு சிவபூசையை நாள்தோறும் அனுஷ்டித்து, எல்லாம் வல்ல பரம் பொருளுக்கும், காசினிக்கும் மகிமை சேர்ப்பார்களாக இருந்தால், உலகம் எப்போதோ துன்பங்களிலிருந்து விடுபட்டிருக்கும்; விடுதலையும் பெற்றிருக்கும். இந்து சமயப்பேரவையிலே, நாளாந்தம்சிவபூசைஒழுங்காகச்செய்து வருகிறார் அதன் செயலாளர் ஈசான சிவம் ஸ்ரீ சிவ சக்திகிரீவன். பேரவையின் உட்புறத்தில் அமைந்துள்ள சிவமயமான நாடராஜ பீடத்திலும், வெளி மண்டபத்தில் அமைந்துள்ள அம்பாள் சமேத நட ராஜர் கொலுவிலும் ஒழுங்காகச் சிவ பூசை ஆற்றப்படுகிறது. வேறெங்கணும் காணப்படாத சிவ பூசை, உரிய நைவேத்தியங்களோடு பேரவையில் அற்புதமாகிறது. ஒரு தனியாளாக இருந்து சிவ. பூசை செய்து, அரச கடமைகளையும்சரிவரச் செய்து, பேரவையையும்நடத்தி, சிவபூசை மாநாடுகளையும், சைவசமயப் பேருரைகளும் வழங்கி ஐயங்களைத் தெளிவாக்கும் ஓர் அரங்காக இந்து சமயப் பேரவையை நடத்தி வருகிறார். பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் ஐயாவைத் தலைவராகக்கொணடுச.சற்குணராஜா (சிமாட்டி)வைப் பொருளாளராக இயங்கவைத்து இலங்கையின் சைவ சமய வரலாற்றில் ஓர் ஆகம விதிப் பாதையைச் செப்பனிட்ட வண்ணம் பேரவை பயணிக்கின்றது.

நடராஜப் பெருமான் தினம்தோறும் அருள் பாலிப்பதற்கான ஒழுங்கான காலைப்பூசை ஆச்சாரிய அபிஷேகமதன் பேறு கொண்ட ஈசான சிவம் சக்திகிரீவனால் மனமுவந்து நடத்தப் பெறுகிறது. இதுவொன்றேநாடும், வீடும் அமைதி பெறப்போதும் என்று சொன்னாலும்கூட, சகல ஆலயப் பொறுப்பாளர்களும், அந்தணப் பெருமக்களும், மக்களும் சிவதீட்சையைப் பெறும்போதும், செய்யும்போதும் அதைப் பற்றி உணரும் போதும் நாடுதானாகச் சுபீட்சமடையும். இந்தத் தாற்பரியம், சிவதீட்சை பெறாத அனைவருக்கும் அதனை உணர்த்துவதாய் அமைந்திருந்தது. ஈசான சிவம், சிவ ஸ்ரீ சோமஸ்கந்தக்குருக்கள் சிவ ஸ்ரீ ஞா.சர்வேஸ்வரக் குருக்கள் ஆகியோர் இந்தமாநாட்டின் இலக்கையடைவதற்கு பெரிதும் பெரும் பங்காற்றியுள்ளனர். சபையில் இருந்தவர்களும் சிவபூசை, சிவதீட்சை, சிவ கைங்கரியம், சிவ அனுட்டானம், சிவ மந்திரம், சிவாகக்கினி, சிவனடியார்கள், சிவபுராணம், சிவசிந்தனை ஆகிய பேறுடன் சிந்தித்து உணர்ந்தவர்களாய் நிறைவு பெற்றனர்; திருப்தி கொண்டனர்.

### தேறல்

சிவபூசை மாநாடுகள் வருடந்தோறும் அடிக்கடி நடத்தப்படல்வேண்டும். இதன் மூலமே சிவத்தின் பெறுமதியை மக்களால் உணரமுடிகிறது. நீ அதுவாகின்றாய் என்ற உண்மை பெறப்படுகிறது. ஆரம்ப தீட்சை, விசேட தீட்சை, நிர்வாண தீட்சை நயனம் பரிசம், மானசம், வாசகம், சாத்திரம், யோகம் ஒளத்திரி ஆகிய சம்பத்து நிலைகளும் ஒவ்வொரு சைவ சமயிக்கும் அவசியமான தொன்றேயாம். அதிருங்கழல் பணிந்து அர்ச்சிக்கும் போது சிவம் பிரகாசிக்கும். கட்டடங்கள், மண்டபங்கள், சாதனைகள், நிர்வாகங்கள் வெல்லப்படும். அதேவேளை சிவம்சார்ந்த எமது பூசைகள் வெல்வதற்கும், அதன் பெறுமதியை உணர்வதற்கும், பின்பற்றுவதற்கும் பேரவை தொடர்ந்தும் தன்னை அர்ப்பணிக்கும் என நம்பலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடோக்கு
## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 4 | | | | 6 | |
| | 3 | | | 8 | | 7 | | |
| 9 | | 8 | | | | | | 1 |
| | | 4 | | 5 | | | 3 | |
| | | | 8 | | 2 | | | |
| | 2 | | | 6 | | 9 | | |
| 1 | | | | | | 8 | | 4 |
| | | 3 | | 9 | | | 2 | |
| | 9 | | | | 6 | | | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 2 | 1 | 8 | 6 | 7 | 9 | 5 | 3 |
| 8 | 6 | 5 | 3 | 4 | 9 | 1 | 2 | 7 |
| 3 | 9 | 7 | 5 | 2 | 1 | 6 | 8 | 4 |
| 6 | 5 | 4 | 9 | 1 | 3 | 8 | 7 | 2 |
| 2 | 3 | 8 | 4 | 7 | 6 | 5 | 1 | 9 |
| 1 | 7 | 9 | 2 | 8 | 5 | 3 | 4 | 6 |
| 7 | 8 | 3 | 6 | 5 | 4 | 2 | 9 | 1 |
| 5 | 1 | 6 | 7 | 9 | 2 | 4 | 3 | 8 |
| 9 | 4 | 2 | 1 | 3 | 8 | 7 | 6 | 5 |

சுடோக்கு
ஒரு எண் விளையாட்டு.
தர்க்கரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).
இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற் கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்பவேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப் பானிய நிறுவனமான நிகோலி இதனை அறி முகப் படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.



# தனுஷ் தயாரிப்பில் விஜய்

விஜய், கீர்த்தி சுரேஷ் நடித்துள்ள பைரவா படம், இரசிகர்களுக்கு பொங்கல் விருந்தாகத் திரைக்கு வருகிறது. இதையடுத்து தெறி பட இயக்குனர் அட்லி இயக்கத்தில் நடிக்கிறார் விஜய். இவரது 61 ஆவது படமாக உருவாகும் இதன் படப்பிடிப்பு தொடங்கியுள்ளது. இதையடுத்து விஜய் நடிக்கும் 62 ஆவது படம் பற்றி உறுதி செய்யப்படாத ருசிகர தகவல் வெளியாகி இருக்கிறது. நடிகர் தனுஷ், விஜய்யின் ரசிகராகத் தன்னை வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறார். விஜய்யின் ஒவ்வொரு படத்துக்கும் அவர் வாழ்த்துத் தெரிவித்து வருகிறார். இதற்கிடையில் தயாரிப்பாளராகவும் ஆகியிருக்கிறார் தனுஷ். சூப்பர் ஸ்டார் ரஜினி நடிக்கும் புதிய படத்தைத் தயாரிக்கவுள்ளார். இந்தப் படத்தை கபாலி இயக்குனர் பா.ரஞ்சித் இயக்குகிறார். இதையடுத்து விஜய் நடிக்கும் படத்தைத் தயாரிக்க தனுஷ் தரப்பில் பேசப்பட்டு வருவதாகக் கூறப்படுகிறது. ஏ.ஆர்.முருகதாஸ் இயக்கும் படத்தில் விஜய் நடிக்க, அப்படத்தை தனுஷ் தயாரிப்பதற்கான வேலை நடப்பதாகத் தெரிகிறது.

அட்லி படத்தில் நடிக்கும் விஜய் தனது அடுத்த படம் பற்றி எந்த அறிவிப்பும் விடுக்காத நிலையில், இந்தத் தகவல் கசிந்திருப்பதால் இது ரசிகர்களிடையே இப்போதே பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. ஏ.ஆர்.முருகதாஸ் தற்போது மகேஷ்பாபு நடிக்கும் படத்தை இயக்கி வருகிறார். ஏற்கனவே விஜய் நடித்த துப்பாக்கி, கத்தி ஆகிய படங்களை இயக்கிய முருகதாஸ் மீண்டும் அவருடன் இணைவதற்குத் தயாராகவே இருப்பதாகவும் கூறப்படுகிறது.



ஏழு கழுத வயசானாலும்...
என்னதான் நாத்திகம்
பேசினாலும், நைட் தனியா
தூங்கும் போது வீட்ல ஒரு செம்பு
திடீர்னு விழுந்துட்டா...
அவ்வளவுதான் உசுரே
போயிடுது...!



தினமும் ஆடை அணியும்
போது மட்டும் வருகிறது, சாப்பிடும்
போது வருவதேயில்லை,
உடம்பைக் குறைக்க வேண்டும்
என்ற நினைப்பு

ரீச்சர்: பாகிஸ்தான் தீவிரவாதி
பள்ளிக்கூடத்துக்குள்ள தாக்குதல்
செய்யவந்தால் என்ன செய்வீங்க?




மாணவன்: நேராக ஆசிரியர்
ஓய்வறைக்குக் கூட்டிக்கிட்டு வந்து
விட்டுட்டு ஓடிடுவோம் ரீச்சர்!

பிஸ்கட் விளம்பரத்துல காட்டிற
முந்திரி, பாதாம் எல்லாம்
பேக்கிங் செக்‌ஷன்ல பேக்
பண்றவங்க சாப்பிட்டுருவாங்க போல...



பிஸ்கட்டில ஒண்ணுமே இல்லையேடா?





**மேடம்:** கடந்த கால முயற்சிக்கான பலன் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் மறைமுகப் போட்டி குறையும். வருமானம் சீராகும். பணியாளர்கள், மாணவர்கள் ஆர்வத்துடன் படிப்பர்.



**இடபம்:** பேச்சு, செயலில் நிதானத்தை கடைபிடிப்பது நல்லது. தொழில், வியாபாரத்தில் மிதமான வருமானம் கிடைக்கும். பணியாளர்கள் பணிச்சுமைக்கு ஆளாக நேரிடும். பெண்கள் குடும்ப நலனுக்காகப் பாடுபடுவர்.



**மிதுனம்:** தடைகளைத் தகர்த்தெறிந்து முன்னேறுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால் புதிய சாதனை ஏற்படும். பணவரவும் நன்மையும் அதிகரிக்கும். குடும்பத்தில், சுப நிகழ்ச்சி நடத்தத் திட்டமிடுவீர்கள்.



**கடகம்:** மனதில் குழப்பம் ஏற்பட்டு மறையும். தொழில், வியாபாரத்தில் சுமாரான லாபம் கிடைக்கும். பணியாளர்கள், சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கப் பெறுவர். பெண்களால் குடும்ப ஒற்றுமை சிறக்கும்.



**சிங்கம்:** சிறு செயலையும் நேர்த்தியுடன் செய்து முடிப்பீர்கள். தொழில், வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி உண்டாகும். பணக் கடனில் பெரும்பகுதி அடைபடும். குடும்பப் பிரச்சினையில் சுமுகத் தீர்வு கிடைக்கும்.



**கன்னி:** புதிய விடயங்களை அறிவதில் ஆர்வம் கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் பணவரவு அதிகரிக்கும். பணியாளர்கள் பணிச்சுமையில் இருந்து விடுபடுவர். பெண்கள் வெகுநாள் எதிர்பார்த்த சுப செய்தி வந்து சேரும்.



**துலாம்:** எதிலும் பொறுமையுடன் செயற்படுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் சுமாரான ஆதாயம் கிடைக்கும். பெண்கள் வீட்டுச் செலவுக்காக கடன் வாங்க நேரிடலாம். உடல் நலனில் அக்கறை தேவை.



**விருச்சிகம்:** சுயநலத்துடன் சிலர் உங்களை அணுகலாம். தொழில், வியாபாரத்தில் ஆதாயம் சுமாராக இருக்கும். உடல் நலனில் அக்கறை தேவை. பெண்கள், பிள்ளைகளின் நலனுக்காகப் பாடுபடுவர்.



**தனுசு:** புத்தி சாதுரியத்துடன் செயற்படுவீர்கள். தொழில், வியாபாரம் திட்டமிட்ட வளர்ச்சி இலக்கை அடையும், ஆதாயம் அதிகரிக்கும். நண்பரிடம் கொடுத்த பணம் திரும்பக் கிடைக்கும்.



**மகரம்:** இனிய பேச்சால் அனைவரையும் கவர்வீர்கள். தொழில், வியாபார வளர்ச்சிக்கான வாய்ப்பு கிடைக்கும். ஆதாயம் அதிகரிக்கும். பணியாளர்கள் பணியிடத்தில் செல்வாக்குடன் திகழ்வர்.



**கும்பம்:** மனதில் குழப்பம் உருவாகி மறையும். எவரிடமும் வாக்குவாதம் செய்ய வேண்டாம். தொழில், வியாபாரத்தில் நிலுவைப்பணியை நிறைவேற்றுவது நல்லது. பணியாளர்கள் பணிச்சுமைக்கு ஆளாவர்.



**மீனம்:** குடும்ப விடயங்களை பிறரிடம் பேச வேண்டாம். தொழில், வியாபாரத்தில் மிதமான லாபம் கிடைக்கும். பணியாளர்கள் பணி விடயமாக வெளியூர் செல்வர். மாணவர்கள் ஆர்வத்துடன் படிப்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# சவ்வரிசி லட்டு



**தேவையானவை**
சவ்வரிசி - 1 கப்
நெய் - 3 மேசைக் கரண்டி
பாதாம் பருப்பு - 10-15
முந்திரிப்பருப்பு - 5-6,
பொடித்த சீனி- 1 கப்

## செய்முறை

சட்டியில் சிறிது நெய் விட்டு சூடானதும், மிதமான தணலில் பாதாம், முந்திரி, சவ்வரிசியை ஒவ்வொன்றாகத் தனித்தனியே வறுத்து ஆற விடவும். பின்பு அனைத்தையும் மிக்சியில் அரைக்கவும். ஒரு பாத்திரத்தில் அரைத்த கலவை, சீனித்தூள், மீதியுள்ள நெய் ஆகியவற்றை விட்டு நன்கு கலந்து, சிறு சிறு லட்டுகளாக பிடித்து, பாதாம், காய்ந்த திராட்சையால் அலங்கரித்து பரிமாறவும். குழந்தைகளுக்கும், பெரியவர்களுக்கும் நாக்கில் எச்சில் ஊற வைக்கும் இந்த லட்டு.

# பயனுள்ள சில உணவு மருத்துவக் குறிப்புகள்




- தினம் ஒரு வாழைப்பழம் சாப்பிட்டு வந்தால் மலச்சிக்கல் ஏற்படாது. உடலும் ஆரோக்கியமாக இருக்கும்.
- மலச்சிக்கல் உள்ளவர்கள் விளாம் பழம் அல்லது வில்வம் பழத்தின் உட்சதையை எடுத்து, சர்க்கரை சேர்த்து உண்டு வர மலச்சிக்கல் நீங்கும்.
- குழந்தைகளின் உணவில் வல்லாரையை அடிக்கடி சேர்த்து வந்தால் ஞாபகசக்தி விருத்தியாகும்.
- இரைப்பை குடற்புண் உள்ளவர்கள், வாரத்தில் இரண்டு, மூன்று தடவை வாழைத்தண்டு அல்லது வாழைக்கிழங்கை பருப்புக்கறியாக அல்லது பச்சடியாக, பாற்சொதியாக செய்து சாப்பிட்டு வரக் குணம் ஏற்படும்.
- கிராணிக்கழிச்சல் எனப்படும் நாள்பட்ட வயிற்றோட்டம் உள்ளவர்களும், சாப்பிட்ட பின் வயிற்றால் போகும் பிரச்சினையுள்ளவர்களும், வாழைத்தண்டுச் சாற்றை கால் கோப்பையளவில் தினம் 2,3 தடவை பருகிவரக் குணம் காண்பர்.
- மூல நோய் உள்ளவர்கள் கருணைக் கிழங்கு அல்லது தாமரைக் கிழங்கை அடிக்கடி கறி சமைத்து உண்டு வரலாம்.
- அக்கரம் எனப்படும் வாய்ப் புண்ணால் அவதிப்படுபவர்கள் அகத்தியிலையை பாற்சொதி செய்து சாப்பாட்டில் சேர்த்துக் கொள்ளலாம். மணித்தாக்காளிப் பழம் அல்லது இலையையும் உணவில் சேர்த்துப் பயன் பெறலாம்.
- சிறுநீர் எரிச்சலுள்ளவர்கள் வெள்ளரிக்காயைச் சாப்பிடலாம். வெள்ளரிக்காயை பாற்கறியாக அல்லது குழம்பாகச் செய்தும் பயன்படுத்தலாம்.
- வெள்ளைபடுதல் என்னும் நோயால் பாதிக்கப்படும் பெண்கள் நீற்றுப் பூசணிக்காயை கறி சமைத்து உண்பதால் நலம் பெறலாம்.
- மாதவிடாய்க் காலங்களில் அதிக குருதி வெளியாகும். பெரும்பாடு என்னும் நோயினால் அவதியுறும் பெண்கள், விடத்தல் இலையைப் பிட்டு மாவுடன் சேர்த்துக் குழைத்து, பிட்டாக அவித்து உண்டு வருவதால் நலம் பெறலாம்.
- சிறுநீரகக் கல்லால் பாதிக்கப்பட்டவர்கள் முள்ளங்கி, சுரைக்காய் என்பவற்றைத் தமது உணவில் சேர்த்துக் கொள்ளலாம்.
- தாய்ப்பால் கொடுக்கும் பெண்கள் ஈரப்பலாக்காயைக் கறி சமைத்து உண்பதால், தாய்ப்பால் அதிகம் சுரக்கும். ஈரப்பலாக்காயைக் கறி சமைக்கும்போது வெந்தயம், உள்ளி, முருங்கையிலை என்பவற்றைச் சேர்த்துச் சமைப்பதால் வாய்வு, வயிற்றுப் பொருமல் போன்றவை ஏற்படாமல் பாதுகாத்துக் கொள்ளலாம்.
- நீரிழிவு நோயுள்ளவர்கள் வாரத்தில் 2,3 தடவை பாகற்காய்ச் சாறு கால் கோப்பை வீதம் காலையில் பருகி வரலாம். பாகற்காய்ச் சாறு குடலில் குளுக்கோசு அகத்துறிஞ்சப்படுவதைக் குறைப்பதுடன், குருதியில் உள்ள குளுக்கோசு அளவு அதிகரிப்பதையும் கட்டுப்படுத்துகிறது. குடல்கிருமிகளை அழிப்பதிலும் பாகற்காய்ச் சாறு உதவும்.

# தண்ணீர்க் கோப்பை




சிரட்டையால் உருவான தண்ணீர்க் கோப்பை அறிமுகமாகியுள்ளது. அலங்காரப் பொருளாகவும், நீர் ஊற்றி வைக்கவும் இந்தப் பாத்திரம் பயன்படும். இது 350 ரூபாவில் இருந்து விற்பனை செய்யப்படுகிறது.




# தலையலங்காரம்

1 இரு பக்கங்களிலும் தலை-முடியை வெட்டி, நடுப்பகுதி முடியைத் தயார் செய்க.
2 நடுப்பகுதி முடிக்கு ஜெல் இட்டுக் கொள்க
3 பின்னர் விரவினால் படத்தில் காட்டியவாறு மேற் பக்கமாக வாரி அலங்காரத்தை நிறைவு செய்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலி...!

## தனித்து வாழும் வீரன்



புலிகளின் பாதுகாப்புப் பற்றி சமீப காலங்களில் அதிகம் வலியுறுத்தப்படுவது வரவேற்கத்தக்கது. இருந்தபோதிலும் நாம் ஏன் புலிகளைப் பாதுகாக்க வேண்டும் என்பதான புரிதல் தெளிவாக, விரிவாக விவாதிக்கப்படுவதில்லை. விவாதிக்கப்படவில்லை. இதன் விளைவு கூண்டில் அடைத்து வைத்தே புலிகளைப் பாதுகாத்துவிட முடியும்போது அதற்கு ஏன் சிரத்தை எடுத்துக் கொள்ள வேண்டும் என்பதான கேள்வி எழுப்பப்படுகிறது; எழுகிறது. இவைதவிர புலிகளுக்குக் கொடுக்கப்படும் முக்கியத்துவம் என்பது ஏனைய மிருகங்களுக்கு ஏன் கொடுக்கப்படுவதில்லை என்ற கேள்விகளும் எழுந்து மறைகின்றன.

புலிகளின் பாதுகாப்பிற்கு முதலில் சொல்லப்படும், சொல்லப்பட்டு வருகின்ற எழுந்தமானமான காரணம் இந்த உலகில் இல்லாத ஒரு உயிரினத்தை எம்மால் பாதுகாத்து விட முடிகிறது என்றால் புலி இனத்தை பாதுகாத்துவிட வேண்டும் என்பதே. ஆனாலும் அறிவியல் சொல்வதென்பது வேறு. ஆம், புலிகளின் பாதுகாப்பைப் பற்றித் தெரிந்துகொள்வதற்கு முன்பாக நாம் அவற்றின் குணங்களைப் புரிந்து கொள்ள வேண்டும்.

1. புலி தனித்து வாழும் மிருகம்.
2. புலியொன்று தனக்கென்று ஒரு எல்லையை காட்டினுள் தீர்மானித்துக் கொள்கிறது. சிறுநீர் கழிப்பதன் மூலமும், மரங்களில் கீறல்களை உண்டாக்குவதன் மூலமும் ஏனைய புலிகளுக்கு தன்னுடைய எல்லைக் கோட்டை தெரியப்படுத்துகிறது. தெளிவுபடுத்துகிறது.
3. தனக்குக் கிடைக்கும் உணவின் தேவைகளைப் பொறுத்து (மான், காட்டெருமை, காட்டுப்பன்றி மற்றும் இன்னும் பல) தன்னுடைய எல்லைகளைத் தீர்மானித்துக் கொள்கிறது
4. உணவு எளிதாகக் கிடைக்குமிடங்களில் எல்லையைச் சுருக்கவும், உணவு அருமையாகக் கிடைக்கும் இடங்களில் எல்லையை விரிவாக்கிக் கொள்ளவும் கற்றுக் கொள்கிறது.

ஆக, புலிகள் பாதுகாப்பாக வாழப் போதுமான உணவு அவசியமாகிறது. இதனால் புலிகள் பாதுகாக்கப்படும்போது புலிகளின் உணவு சார்ந்து ஏனைய உயிரினங்களும் பாதுகாக்கப்படுகின்றன. அந்த உயிரினங்கள் வாழ அவற்றின் உணவு சார்ந்த தேவைகளும் பாதுகாக்கப்படுகின்றன. இவை உணவுச் சங்கிலி சிதைவுறாமல் சமனிலைத் தன்மைகளோடு இருந்திட உதவுகிறது.

எப்போதாவது அரிதான சந்தர்ப்பங்களில் இணை சேருகின்ற புலிகள் ஒரு வார காலத்தில் பிரிந்து செல்கின்றன. புலிகள் வாழ அடர்ந்த வனப் பகுதியும், நீர்த் தேவைகளும், மனித இடையூறுகள் அற்ற பகுதியும் அவசியம் தேவைப்படுகிறது.

வேட்டையாடுவதன் மூலம் புலிகள் அழிக்கப்படுவதால் உணவுச் சங்கிலி முற்றிலுமாக அதிர்வுறுகிறது. பிளவடைகிறது. வனத்தின் உண்மைத் தன்மை என்பது குறையும். நூறு சதவிகிதம் தரமான வனம் தன்னுடைய தரத்தை, தரா தரத்தை இழக்கத் தொடங்கும். பின்னர் வனம் சுருங்கத் தொடங்கும். வனப் பிர்தேசம் குறைவடைய மழை குறையும். மழை குறைந்தால் நீர்ப்பற்றக்குறை ஏற்படும். உலகம் அழிவை நோக்கி வேகமாக நகரத் தொடங்கும் என்கின்றனர் விலங்கியல் ஆய்வாளர்கள்.

ஆக, புலிகளையும் மற்ற விலங்கினங்களையும் வேட்டையாடுவதைத் தவிர்க்க வேண்டும். வனமும், விலங்குகளும், பறவைகளும் ஏனைய அனைத்து உயிரினங்களும் காக்கப்படுவது அவசியமாகின்றது. அவசியப்படுகின்றது. இந்த உலகம், இந்தத் தேசம் அனைத்து உயிரினங்களுக்கும் பொதுவானது. மனிதனுக்கு மட்டுமல்ல, உருமறைப்போடு தேசமெங்கும் உலவும் புலிகளுக்குமானது!


## நெஞ்சை விட்டகலாத ஏழாம் ஆண்டு நினைவலைகள்



அமரர் சின்னத்துரை பத்மரூபன் (ரூபன்)

தோற்றம் 07.02.1980 — மறைவு 02.01.2010

திதி: அபரபக்க துதியை (13.01.2017)

மனமென்ற சிறையில் குடிகொண்ட நினைவாய்
வாழும் காலமெல்லாம் அழியாத நினைவாய்
ஏழாண்டுகள் போனதுவோ கனக்கின்ற நெஞ்சோடு
உன்னை நினைவு கூருகின்றோம் இன்று

புகையிரத நிலைய வீதி,
சுன்னாகம் தெற்கு, சுன்னாகம்.

குடும்பத்தினர்.



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 25.08.1946



மறைவு 28.12.2015

அமரர் வைத்தி நவரத்தினம்

திதி: திருதியை

அன்பிலே தெய்வமாய் அறிவிலே ஆசானாய்
பண்பின் இலக்கணமாய் பாசத்தின் உறைவிடமாய்
குடும்பத்தின் ஒளிவிளக்காய் எம்மை வழிப்படுத்தி
இன்பமாய் நாம் வாழ எல்லாம் எமக்களித்து
இறைவனடி சேர்ந்தனையோ ! நெஞ்சிருக்கும் வரை
நாம் மறவோம் உம் நினைவால் வாழ்ந்திருப்போம்

நீங்கா நினைவுகளுடன்

நாவற்காடு, அச்சுவேலி தெற்கு,
அச்சுவேலி.

(ஜே/7361)(12.18)

மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், குடும்பத்தினர்.



## மரண அறிவித்தல்கள்

### கனகசபை சண்முகநாதன் (வேவி)



வடலியடைப்பு, பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கனகசபை சண்முகநாதன் (வேவி) 10.01.2017 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபை - தங்கம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சிவசம்பு - பூரணாகாந்தி தம்பதிகளின் பாசமிகு மருமகனும், வசந்தாதேவியின் அன்புக் கணவரும், சயந்தன், துசியந்தன், சஜீவன், துசித்தா ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிவராஜினி, ரேவதி, அமுதினி, புஸ்பகரன் ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்றவர்களான நடராசா, சரஸ்வதி, விஜயரத்தினம் ஆகியோரின் பாசமிகு சகோதரரும், அஸ்மிதா, அபிசா, அசிந், அஜன், அஸ்வின், அஸ்வினி ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.01.2017) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை, உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வடலியடைப்பு,
பண்டத்தரிப்பு

(C/23801)
(11,18)

தகவல்:
குடும்பத்தினர்.

021 225 1128



### கனகசபை மகேந்திரன்

(ராஜன் -Jaguar Furniture Shop-Montreal,J.F.S Ontario Inc உரிமையாளர்)



அன்னை மடியில்: 11.06.1956
ஆண்டவன் அடியில்: 09.01.2017

யாழ். மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், கனடா Toronto Markham ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட கனகசபை மகேந்திரன் 09.01.2017 திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ் சென்றவர்களான கனகசபை - விசாலாட்சி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற விஸ்வலிங்கம் மற்றும் அருமைநாயகி தம்பதிகளின் அன்பு மருமகனும் சிவேஸ்வரியின் (குஞ்சு) அன்புக் கணவரும் தேனுகாவின் அன்புத் தந்தையும் ரவிச்சந்திரன், உதயகுமாரன், சிவராசா, சிறீஸ்கந்தராஜா, விமலாதேவி, கலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரரும் பலராமனின் அன்பு மாமனாரும் தம்பிஜயா, சின்னத்துரை ஆகியோரின் அன்பு மருமகனும் இராசம்மாவின் அன்புப் பெறாமகனும் நாகேஸ்வரி, சிவபாதம், பாஸ்கரன், வசந்தா, சத்தியபாமா, புஸ்பவதி, வதனா, சோழன், ஞானச்செல்வம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் காலஞ்சென்ற சுதர்சன் மற்றும் சுஜீவன், தயன், பார்த்தீபன், சரண்யா, கம்சா, சபீனா, வினோ, மனோ, ரூபன், பரத், கலச்சிகா, அர்ச்சுன், லாவண்யா, கண்சன் ஆகியோரின் அன்புப் பெரிய தந்தையும் காலஞ்சென்ற சுகந்தன் மற்றும் கேகயன், உயாந்தினி, விதுஷனா, அகிலாஷ், சில்வியா, அலெக்ஸ்கோபி, கவின் கிருத்திகன், நிசோபன், வர்ஷிக ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (16.01.2017) திங்கட் கிழமை கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(J/7394)
(12,17,18.)

தகவல்:
குடும்பத்தினர்

சின்னத்துரை: 076 883 6160,
நாகேஸ்வரி: 021 733 3444


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டுத் திதியும் நினைவஞ்சலியும்

அன்னை மடியில்
16 . 08 . 1954



ஆண்டவன் அடியில்
25 . 12 . 2015

## அமரர் செல்வி சின்னத்துரை திலகவதி

உங்கள் அன்பு, அழகு முகம் கண்டு ஓராண்டு ஆனதுவே தங்கை திலகி! அண்ணா, அண்ணா என ஒரு பொழுதினிலே எத்தனை குரல் கேட்டிருப்பேன். இன்று எங்கள் அனைவரையும் ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு, மீளாத்துயில் கொண்டு ஒருவருடம் ஆனதுவே! ஒரு வருடம் அல்ல எத்தனை வருடங்கள் கடந்தாலும் உங்கள் நினைவுகள், அழகு முகம் எங்களை ஒருபோதும் விட்டகலாது. இருந்த இருப்பினிலே சொந்தமெல்லாம் அரவணைத்து தொலைபேசியிலே தொடர்பு கொண்டாய்! பிறந்த தினங்கள், இறந்த திதிகள், ஆலய தினங்கள் அனைத்தையும் அந்தந்த நேர காலங்களில் அறிவிக்கும் பெருமையை எம்குடும்பத்தில் முன்னின்று மேற்கொண்டாய். இன்று அவற்றை அறியாமல் திணறுகின்றோம். அப்பா, அம்மாவை இழந்த நிலையில் குடும்பத்தின் ஒளி விளக்காய் முன் நின்றாய். இன்று அனைவரையும் பரிதவிக்க விட்டு இறைவனடி சேர்ந்து விட்டாய். உங்கள் ஆத்மா சாந்தி பெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

'விஷ்ணுமகால்',
ஏ-9 வீதி, பளை.


குடும்பத்தினர்.


# கிளி.!

## சாயம் போதல் முதுமையின் வண்ணப் பிரதிபலிப்பு



பச்சை உடம்பில் சிவப்பு மூக்கு. கிளிக்கு யார் வர்ணம் பூசியது..? இந்தக் கேள்விகளுக்கு பதில் சொல்வதற்கு முன்பதாக பறவைகளுக்கு அத்தனை கவர்ச்சியான நிறங்கள் ஏன் தேவைப்படுகின்றன..? என்பது தொடர்பில் தெரிந்துகொள்ள வேண்டியுள்ளது. ஸ்பெயினில் உள்ள பார்சிலோனா நச்சுரல் கிஸ்ட்ரி மியூசியத்தை சேர்ந்த எஸ்த்தர் என்ற பெண்மணி பறவைகளின் கண்களைப் பறிக்கும் நிறங்கள் அவற்றின் உடல் ஆரோக்கியத்தை விளம்பரப் படுத்துகின்றன என்கிறார்.



ஜோடி தேர்ந்தெடுப்பதற்கு இந்த விளம்பரம் தேவைப் படுவதாகக் கூறுகின்றார். மேலும் பறவைகளிடம் காணப்படும் குருதிச்சிவப்பு, ஓரெஞ் நிறங்களுக்குக் காரணமாக உள்ள பொருள் கெரோட்டினாய்டு எனப்படுகிறது. கேரோட்டினாய்டு நிறத்துக்கு மட்டும் காரணமாக இருந்து விடாது வெயிலுக்குப் போர்வையாகவும், உடலில் உள்ள நச்சுக்களை அகற்றுவதற்கு உதவி புரிவதாக உள்ளன என் கிறார் அவர். எனவே பறவைகளில் நிறம் என்பது உடல் ஆரோக்கியத்தின்சின்னமாக இருக்கின்றது.

இவைதவிர எஸ்த்தரின் கண்டுபிடிப்பு இன்னும் ஆழமானதாகச் சொல்லப்படுகிறது.

இதன்படி இதுவரை காலமும் இறகின் நிறங்கள் இறகிலேயே உற்பத்தி செய்யப்படுவதாகக் கருதப்பட்டு வந்த தகவலானது, எஸ்த்தரின் ஆய்வடிப் படையில் பறவைகளின் கல் லீரலில் கேரோட்டினாய்டுகள் உற்பத்தி செய்யப் படுவதாகவும், அவை இரத்தத்தின் வழியாக பறவைகளின் சிறகு முளைக்கும் சந்தர்ப்பங்களின்போது வழங்கப்படுகிறது என்பதாகவும் புதுப்பிக்கப்பட்டுள்ளது.

ஆக, பறவைகளில் உடல் ஆரோக்கியம் குறைகின்ற போது அதன் வெளிப்பாடு மனிதர்களிடத்தில் ஏற்படும் உடற்சுருக்கம், நரைத்தல் செயல்நிலைகள் போன்று அவற்றின் சிறகின் நிறத்தில் வெளிப்பட்டு காட்டிக் கொடுத்து விடுகிறது. சாயம் வெளுத்து விடுகிறது.


# நெஞ்சை விட்டகலாத நான்காம் ஆண்டு நினைவஞ்சலி





## தர்மலிங்கம் தர்மேந்திரன் (பாபு)

(பிரபல " தர்ம்சன்ஸ் " கட்டட ஒப்பந்தகாரரும் உரிமையாளரும் - அரியாலை)

தோற்றம்
1953.05.21

மறைவு
2012.12.28

திதி: பிரதமை (13.01.2017)

அன்பாலும் பண்பாலும் எல்லோரையும் அரவணைத்து
பாசத்துடன் வளர்த்த அப்பாவே ஆண்டுகள் நான்கு ஆனாலும்
ஆறவில்லை அப்பா எங்கள் மனம் எப்போதும் எங்கே பார்த்தாலும்
உங்கள் நினைவுதான் அப்பா எங்களை விட்டுப் பிரிந்து நான்கு
ஆண்டுகள் ஆனாலும் எங்களுடன் இருக்கிறீர்கள் என்ற நினைப்புடன்
உங்கள் வழி தொடர்ந்து நடப்போம் அப்பா

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

11, கதிரவேல் ஒழுங்கை,
கனகரட்ணம் வீதி, அரியாலை,
யாழ்ப்பாணம்.

என்றும் உங்கள் நினைவுடன்
வாழும்
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அடுத்த வாரம்...

உதய கம்மன்பில தெரிவித்தார். 'விமல் வீரவன்ச கைது செய்யப்படுவார்' என்று மகிந்த ராஜபக்ச ஆரு டம் கூறியிருந்த நிலையில் அவர் கைது செய்யப்பட்டிருந்தார். இந்த நிலையில் மகிந்த அணியின் மற்றொரு நாடாளுமன்ற உறுப்பினரும் தனது கைது தொடர்பில் எதிர்வுகூறலை வெளியிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

சகோதரர் விமல் வீரவன்ச அமைச்சராக இருந்தபோது அமைச்சின் வாகனத்தை முறைகேடாகப் பயன்படுத்தினார் என்ற குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்டுத் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார். முறையற்ற விதத்தில் வாகனத்தைப் பயன்படுத்த அனுமதி வழங்கினார் என்பதுதான் உண்மையான குற்றச்சாட்டு. அந்தக் குற்றச்சாட்டுக்கு எழுத்து மூலமான ஆதாரங்கள் எவையும் இல்லை.

இந்த அரசுக்கு எதிரான போராட்டத்தை நசுக்கும் நோக்கில்தான் இவர் கைது செய்யப்பட்டுள்ளார். இவ்வாறான செயற்பாடுகள் மூலம் அவரது போராட்டத்தைத் தடுத்து நிறுத்த முடியாது.

இதனைத் தொடர்ந்து என்னையும் கைது செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. நீதிமன்ற உத்தரவை மீறி ஆர்ப்பாட்டம் செய்தேன் என்ற குற்றச்சாட்டில் என்னைக் கைது செய்வதற்கு அம்பலாங் கொட பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். எனக்கு இவ்வாறு தகவல் கிடைத்துள்ளது. இந்தக் கைதுகள் மூலம் எம்மைப் பணிய வைக்க முடியாது - என்றார். (த-5)

## ஊறணியில்...

கம், இந்தப் பிரதேசத்தின் ஊடாக மீன்பிடி நடவடிக்கைக்கு மக்கள் செல்ல முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனவரி 8ஆம் திகதியிலிருந்து 14ஆம் திகதி வரை தேசிய நல்லிணக்க வாரம் கடைப்பிடிக்கப் பட்டுவருகின்றது. இதனை முன்னிட்டு வலி. வடக் கில் காணி விடுவிப்பு, வாழ்வாதார உதவி என்பவற்றை மேற்கொள்ளுமாறு, நல்லிணக்க அமைச்சின் செயலரினால், பாதுகாப்பு அமைச்சின் செயலர், இராணுவத் தளபதி ஆகியோருக்கு கோரிக்கை விடுக்கப் பட்டிருந்தது.

கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் 31ஆம் திகதி, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் வலி. வடக்கில் ஒரு சில பகுதிகள் விடுவிக்கப்பட்டிருந்தன. அந்தப் பகுதி மக்கள் மீன்பிடித் தொழில் முன்னெடுக்க முடியாதவாறு பாதுகாப்புத் தரப்பினர் கடற்கரையோரமாகப் பாதுகாப்பு வேலிகளை அமைத்திருந்தனர். மீள்குடியமர்ந்த மக்கள் தமது வாழ்வாதாரத்தை முன்னெடுக்க முடியாமல் சிரமங்களை எதிர்கொண்டனர்.

மீள்குடியமர்ந்த மக்கள் தமது வாழ்வாதாரங்களை முன்னெடுப்பதற்கு ஏதுவாக ஊறணிப் பகுதியில், பாதுகாப்புத் தரப்பினர் அமைத்திருந்த வேலிகளை அகற்றுவதற்கு இணக்கம் தெரிவித்துள்ளனர். அகற்றும் பணிகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

நல்லிணக்க வாரத்தின் இறுதி நாளான நாளை சனிக்கிழமை அவை மக்களிடம் கையளிக்கப்படவுள்ளன. (த-5-101-106)

## தமிழரே...

சமூகவலைத் தளத்தில் பதிந்துள்ள பதிவிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். 'நாட்டைப் பிரிக்கும் அரசமைப்பு என்று மகிந்த கும்பல் அல்லவா ஒப்பாரி வைக்கின்றது?' என்று அமைச்சர் மனோ கணேசன் முதலாவது பதிவிட்டிருந்தார். இதன் பின்னர், உருவாகும் அரசமைப்பு பற்றி உண்மையில் கூட்டமைப்புத்தான் ஒப்பாரி வைக்கவேண்டும் என்று பதிவிட்டிருந்தார்.

சில மணி நேரம் கழித்து, புதிய அரசமைப்பு பற்றிக் கூட்டமைப்புத்தான் ஒப்பாரி வைக்க வேண்டும் என்ற சொன்னதைத் திருத்தி, தமிழர்கள்தான் என்று சொல்லியிருக்க வேண்டும் என்று பதிவிட்டிருந்தார்.

வழிகாட்டல் குழுவின் உறுப்பினரான மனோ கணேசன், கடந்த சனிக்கிழமை விடுத்த பத்திரிகை அறிக்கையில், தீர்வு வழங்குவதாக இருந்தால் வழி நடத்தல் குழுவை நடத்துங்கள். இல்லையேல் அதனைக் கலைத்து விடுங்கள் என்று தெரிவித்திருந்தார். (த-5)

## வடக்கு...

மாகாண சபைத் தேர்தல் அறிவிக்கப்படுவதற்குச் சில மாதங்களுக்கு முன்னர், மாகாண அமைச்சுக்களுக்கு ஒதுக்கப்பட்டிருந்த நிதியை, வடக்கு மாகாண ஆளுநர் நிதியத்துக்கு மாற்றம் செய்திருந்தார்.

இந்த நிதியிலேயே, அப்போதைய ஆளும் கட்சியான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு ஆதரவான பரப்புரைகள் மேற்கொள்ளப்பட்டதாகக் குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

வடக்கு மாகாணத் திணைக்களங்களின் நிதியை சட்ட முரணாகப் பெற்றமை தொடர்பில் வடக்கு மாகாண சபை ஆரம்பிக்கப்பட்ட பின்னர், பொதுக் கணக்குகள் குழுவின் ஊடாக ஆராயப்பட்டிருந்தது. பொதுக் கணக்குகள் குழுவின் தலைவரும், அவைத் தலைவருமான சி.வி.கே.சிவஞானம், இந்த நிதியை வடக்கு மாகாண சபைக்கு மீள வழங்கவேண்டும் என்று மாகாண சபையில் பிரேரணை முன்வைத்திருந்தார்.

ஆளுநர் நிதியத்துக்குப் பெற்றுக் கொள்ளப்பட்ட பணம் மீளவும் வடக்கு மாகாண சபைக்கு வழங்கப்பட்டுள்ளது. இந்த நிதியில் வடக்கு மாகாண சபை வேலைத் திட்டங்களை முன்னெடுக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-5-101)

## சுயாதீன

சர். மங்கள சமரவீர, லண்டன் சத்தம் ஹவுசில் இடம்பெற்ற முக்கிய கலந்துரையாடலிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

ஐ.நா. மனித உரிமைகள் தீர்மானத்தில் முன்மொழியப்பட்ட நீதிப் பொறிமுறைக்குள் வெளிநாட்டு நீதிபதிகளை உள்ளடக்குவதில் அரசுக்கு கருத்து முரண்பாடுகள் உள்ளன. ஆனால் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தேர்தல் அறிக்கையில் உறுதியளித்ததற்கு அமைவாக நம்பகமான மற்றும் சுயாதீனமான உள்நாட்டுப் பொறிமுறை உருவாக்குவதில் அனைவரிடமும் கருத்துடன்பாடு உள்ளது.

ஜனநாயகம் மற்றும் இறையாண்மைமிக்க அரசு என்ற வகையில் இலங்கை அரசு அவ்வாறான பொறிமுறை எவ்வாறு அமைய வேண்டும் என்பது குறித்து சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினருடனும் கலந்தாலோசனைகளை மேற்கொள்ளும்.

2009ஆம் ஆண்டு மே மாதம் இலங்கையின் உள்நாட்டு மோதல் முடிவுக்கு வந்துள்ளபோதிலும், நல்லிணக்கம், தேசிய ஒருமைப்பாடு மற்றும் பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்துதல், வன்முறைகள் மீண்டும் ஏற்படாத நிலையை உறுதிசெய்தல் ஆகியனவற்றில் நாம் கடும் சவால்களை எதிர்கொண்டுள்ளோம். அதேபோன்று ஆட்சி முறையில் முன்னேற்றத்தை ஏற்படுத்துதல், சட்டத்தின் ஆட்சியை நிலைநாட்டுதல் போன்ற முக்கியமான பணிகளும் முன்னெடுக்கப்படுகின்றன.

2015ஆம் ஆண்டு ஜெனிவாவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதில் இலங்கை அர்ப்பணிப்புடன் உள்ளது. இதன் மூலம் இலங்கை தனது கடந்த கால விடயங்களை நேர்மையுடனும், உண்மையுடனும் அணுகமுடியும். கடந்த கால சம்பவங்களை ஏற்றுக்கொள்ள முடியும். அதேவேளை புதிய இலங்கையைக் கட்டியெழுப்பவும் முடியும்.

காணாமற்போனவர்கள் விவகாரம் இலங்கையைப் பல வருடங்களாகப் பாதித்து வந்துள்ளது. இந்த விவகாரத்தைக் கையாள்வதற்காக அலுவலகமொன்றை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம் - என்றார். (வ-4)

## இலங்கைக்கு...

பன்னாட்டு முதலீட்டாளர்கள் எந்தத் தடையுமின்றி நாட்டில் முதலீடுகளை மேற்கொள்ள முடியும். ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகை இலங்கைக்கு மீண்டும் கிடைத்தமை வரமே. இவ்வாறு நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

நிதி அமைச்சில் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்ததாவது:

ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகை இலங்கைக்குக் கிடைக்கப் பெற்றமை மகிழ்ச்சியளிக்கிறது. கடந்த அரசின் காலத்தில் வினைத் திறனற்ற நிதி முகாமைத்துவத்தால் எமது நாடு அனுபவித்து வந்த பொருளாதார நெருக்கடிகளுக்கு விடிவு காலம் பிறந்துள்ளது. இலங்கை அரசு முன்னெடுத்து வரும் நல்லிணக்க மற்றும் சிறந்த பொருளாதார முகாமைத்துவத்தின் காரணமாகவே ஜி.எஸ்.பி. சலுகை எமக்கு கிடைக்கப் பெற்றது.

ஜி.எஸ்.பி பிளஸ் வரிச்சலுகையை வழங்க ஐரோப்பிய ஆணைக்குழுவின் முன்மொழிவின் மூலம் இலங்கையின் பொருளாதாரம் பலமாக உள்ளது என்பதை அறிந்துக் கொள்ள முடியும்.

ஐரோப்பிய நாடுகளுக்கு எமது நாட்டுப் பொருள்களை ஏற்றுமதி செய்யும்போதும் இலங்கையின் ரூபாவை வலுப்படுத்திக்கொள்ள ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகை முக்கியமானது. 2 பில்லியனுக்கு மேற்பட்ட நிதி ஒரு வருடத்துக்கு வருமானமாக பெறப்படும்.

அம்பாந்தோட்டைத் துறைமுக அபிவிருத்தியின் பின்னர் சீனா, இந்திய ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் இலங்கையில் தராளமாக முதலீடுகளை செய்ய முடியும். எமக்கு முதலீடே அவசியமாகும். நாட்டின் தேசிய வருமானத்தை அதிகரித்துக் கொள்ளத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் அரசு மேற்கொள்ளும்- என்றார். (த-5)

## புதிய...

கூட்டு அரசில் அங்கம் வகிக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும், சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடையிலான மோதல் ஒரு புறம் நடந்து கொண்டிருக்கின்றது. மறுபுறம், சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள் மகிந்த அணி மைத்திரி அணி கருத்து முரண்பாடும் இருக்கின்றது. இதற்கு மேலதிகமாக, மைத்திரி அணியின் அமைச்சர் அணியினுள் உட்பூசல் எழுந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அமைச்சர்களான எஸ்.பி.திசாநாயக்க, டிலான் பெரேரா, நிமல் சிறிபாலடி சில்வா உள்ளிட்டவர்கள் புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சி தொடர்பில் அதிருப்தி கொண்டுள்ளனர். ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரம் நீக்கப்படக்கூடாது என்றும், அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரியே போட்டியிடவேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தி வருகின்றனர். மற்றொரு தரப்பினர் நிறைவேற்று அதிகாரமுறைமை ஒழிப்புக்குப் பச்சைக் கொடி காட்டியுள்ளனர். மைத்திரி அணியின் அமைச்சர்கள் இடையே ஏற்பட்டுள்ள உட்பூசல், மகிந்த அணிக்குச் சாதகமாகவே அமையும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (த-5)

## 'மவுசு'...

மண் பானை விற்பனையும் அதற்கு ஈடு கொடுக்கும் வகையில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

திருநெல்வேலிச் சந்தைக்கு வெளியில் மண்பானை விற்பனை செய்யும் கடைகள் அமைக்கப்பட்டுள்ளன. பொதுமக்களும் ஆர்வத்துடன் அவற்றைக் கொள்வனவு செய்கின்றனர்.

ஒட்டுசுட்டான், கண்டாவளை மண்ணைப் பயன்படுத்தி மண்ணில் பல்வேறு அளவுகளில் பானை உருவாக்கப்பட்டுள்ளது. அவற்றில் பொங்கலுக்கு ஏற்றவாறு மண்பானையில், மாவிலை, வீபூதிப் பட்டை என்பன வரையப்பட்டுள்ளன.

'ஒவ்வொரு வருடமும் தைப் பொங்கலுக்கு ஓரிரு தினங்களுக்கு முன்னர் எனது மண் பானை வியாபரத்தை ஆரம்பிப்பேன். பண்டிகைக் காலத்துக்காக என்னால் உருவாக்கப்படும் அனைத்து மண் பானைகளுமே விற்றுத் தீர்ந்து விடும். அலுமினியப் பானைகள் சந்தைக்கு விற்பனைக்கு வந்தாலும், மண் பானையைத் தேடி வாங்கும் மக்கள் கூட்டத்துக்குக் குறைவில்லை' என்று திருநெல்வேலியில் வியாபாரத்தில் ஈடுபட்டிருந்த வியாபாரியும், யாழ். மாவட்ட மட்பாண்ட கலைஞர்கள் கூட்டுறவுச் சங்கத் தலைவருமான ப.ராஜேந்திரன் தெரிவித்தார்.

4 கிலோ கொள்ளளவு பானை 750 ரூபாவுக்கும், 3 கிலோ கொள்ளளவுப் பானை 600 ரூபாவுக்கும், 2 கிலோ கொள்ளளவுப் பானை 450 ரூபாவுக்கும், ஒரு கிலோ கொள்ளளவு உள்ள பானை 250 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்படுகின்றன. (த-5-8)

## பரிந்துரைகளை...

களைச் செயற் படுத்தவேண்டுமென உலகத் தமிழர் பேரவை கேட்டுக் கொண்டுள்ளது.

இந்தப் பரிந்துரைகளை வரவேற்றுள்ள அந்த அமைப்பு, இது தொடர்பில் வெளியிட்டுள்ள பத்திரிகைச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது, இலங்கையின் பல்வேறு சமூகப் பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் செயலணி குழுவின் உறுப்பினர்களாக அங்கம் பெற்றிருப்பதும், வெவ் வேறு சமூகங்களைச் சேர்ந்த பாதிக்கப்பட்டவர்களின் விருப்பங்கள் மற்றும் கவலைகள் அவர்களின் கலந்தாய்வில் பிரதிபலிக்கப்பட்டுள்ளதும், உலக அளவில் பகிரப்பட்ட மானுட உரிமைகள் மற்றும் கொள்கைகளின் அடிப் படையில் இன மற்றும் மத ரீதியிலான வேறுபாடுகளைத் தாண்டி இலங்கைச் சமூகம் செல்ல முடியும் என்ற நம்பிக்கையை எங் களுக்கு அளிக்கிறது.

தேசிய ஒருமைப்பாடு மற்றும் சமரசம் தொடர்பான அலுவலகத்தின் தலைவரான இலங்கை முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, மூன்று முக்கிய இலங்கை அமைச்சர்களின் முன்னிலையில் செயலணியின் விரிவான அறிக்கையைப் பெற்றுள்ளது, இந்த அறிக்கை எவ்வளவு முக்கியமானது என[illegible]தையும், சிங்களவர், தமிழர் மற்றும் [illegible]லிம் ஆகிய மூன்று முக்கிய இனங்களுக்[illegible] இடையேயான இணக்கப்பாடு எந்த[illegible] அத்தியாவசியமானது என்பதை[illegible] விளக்கு கிறது.

இலங்கைப் போர்க்குற்றம் குறித்து விசா[illegible]கப் பன்னாட்டு நீதிபதிகளுடன் கலப்பு நீதிம[illegible]றம் அமைப்பதே சிறந்தது என்ற செய[illegible]ணியின் பரிந்துரை, இலங்கையில் பா[illegible]கப்பட்ட தமிழ் சமூகத்தின் கருத்தையொட்டி அமைந்துள்ளது. இலங்கையின் உள்ளூர் நீதி அமைப்புகளின் மீது தங்களுக்கு நம்பிக்கை இல்லை என்று நீண்ட நாள்களாக வலியுறுத்தப்படும் தமிழ் சமூகத்தின் கருத்தை, நாடாளுமன்ற உறுப்பினர் ரவிராஜ் கொலை வழக்குத் தொடர்பான தீர்ப்பு வலுப்படுத்தியுள்ளது.

முக்கியமான தருணத்தில் இலங்கை அரசு மிகவும் துணிச்சலாக செயற்பட்டு நல்லிணக்க வழிமுறைகள் ஆலோசனைக்கான செயலணியின் வெளியிட்டுள்ள பரிந்துரைகளைச் செயல்படுத்த வேண்டும் - என்றுள்ளது. (த-5)

## ஜனாதிபதி...

செய்து கொண்டதாக அமைச்சரவைப் பேச்சாளர் ராஜித நேற்று முன்தினம் தெரிவித்திருந்த நிலையில், ஜனாதிபதி முறைமையை மைத்திரிபால ஒழிக்கமாட்டார் என்று அமைச்சர் எஸ்.பி.திசாநாயக்க நேற்றுத் தெரிவித்துள்ளார்.

மல்வத்து மகாநாயக்க தேரரைச் சந்தித்து நேற்று ஆசிபெற்ற அமைச்சர் எஸ்.பி. திசாநாயக்க, பத்திரிகையாளர்களுக்குக் கருத்துத் தெரிவித்தார்.

"பொது வாக்கெடுப்புக்குச் செல்லும் வகையிலான புதிய அரசமைப்பு ஒருபோதும் கொண்டு வரப்படாது என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதித் தேர்தலின்போது வாக்குறுதியளித்திருந்தார். நாட்டில் புதிய அரசமைப்பொன்று கொண்டு வரப்படவேண்டுமாயின் கட்டாயம் பொது வாக்கெடுப்பு அவசியமாகும்.

பொது வாக்கெடுப்பின்றி நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை மாற்றி அமைக்க முடியாது. தற்போதைய சூழலில் பொதுவாக்கெடுப்பொன்று நடத்த வாய்ப்பில்லை. எனவே ஜனாதிபதி முறைமை ஒழிக்கப்படாது என்றார். (த-5)


## குப்பைக்...

கான கலந்தாய்வுச் செயலணி யின் அறிக்கையை நிராகரித்துள்ள அமை[illegible]சர் சம்பிக்க ரணவக்க, இந்த அறிக்கை [illegible]பக் கூடைக்குள் வீசப்படவேண்டும் என்[illegible]தெரிவித்தார். கொழும்பில் நேற்றுச் செய்தி[illegible]ளர்களிடம் கருத்து வெளியிட்ட அவர், கலந்[illegible]ய்வுச் செயலணியின் பரிந்துரைகள், தேசி[illegible]லனுக்கும், இன நல்லிணக்கத்துக்கும் வி[illegible]மானவை. செயலணியின் பரிந்துரை[illegible]ன் மூலம், போர்க் குற்றங்களுக்காக [illegible]மது போர் வீரர்களையும், அரசியல் த[illegible]லைவர்களையும், விசாரிக்க பன்னாட்டு நீதிபதிகளை அனுப்ப ஐ.நா மனித உரிமைகள் ஆணையம் முயற்சிக்கக் கூடும்- என்றார். (த-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருவிகளைப் பயன்படுத்தும் மனிதக் குரங்குகள்





சிம்பன்ஸி குரங்குகள் தண்ணீர் குடிப்பதற்கான கருவிகளைத் தாமே தயாரித்து பயன்படுத்துவதை ஆராய்ச்சியாளர்கள் படம்பிடித்துள்ளனர்.

ஐவரி கோஸ்டில் அழிவின் விளிம்பில் உள்ள மேற்க்த்தைய சிம்பன்ஸிகள் தொடர்பில் நடத்தப்பட்ட ஆய்வில், நீரை தோய்த்து அள்ள உதவும் குச்சிகளை அந்தக் குரங்குகள் தாமே தயாரிப்பது தெரியவந்துள்ளது.

அந்த வகை சிம்பன்ஸிகளுக்கே உரிய ஒரு கலையாக இது பார்க்கப்படுகிறது. (வ)

**வேலைவாய்ப்பு**

யாழ். நகரில் அமைந்துள்ள விஸ்டம் தொழில் நுட்பக் கல்லூரியில் கடமையாற்ற Word, excel, photoshop தெரிந்த அனுபவமுள்ள கணினித் தட்டெழுத்தாளர் (பெண்) தேவை ஆர்வமுள்ளவர்கள் நேர்முகத் தேர்வில் கலந்து கொள்ளவும்.

ஆரம்ப சம்பளம் 10,000/= வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு : 0772487774

**வேலை ஆள்கள் தேவை**

யாழ் நகரில் மற்றும் மானிப்பாயில் அமைந்துள்ள அழகு சாதனப் பொருள்கள் விற்கும் நிலையங்களுக்கு Sales girls (விற்பனைப் பெண்கள்) தேவை. மற்றும் அனுபவம் வாய்ந்த அழகுக்கலை நிபுணர்களும் தேவை.

தொடர்பு : 076 938 8052

SUPER BALL
சுப்பர் போல்
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 601
சீட்டிழுப்பு திகதி 12.01.2017
வியாழக்கிழமை
வெற்றி இலக்கங்கள்
05 11 38 45 p
அடுத்த சுப்பர் ஜக்பொட்
ரூ.47,241 565/=
Web: www.dlb.lk
நீல நிற டிக்கட்டுக்கள் 2017.01.14ஆம் திகதி சனிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்

உத்தியோகபூர்வ முடிவுகள்
Development Fortune
சீட்டிழுப்பு வாரம் 07
சீட்டிழுப்பு திகதி 12.01.2017 வியாழக்கிழமை
வெற்றி இலக்கங்கள்
32 34 49 52 04
ஆகஸ்ட்
அடுத்த மிகப்பெரிய ஜக்பொட் 6,228,725/=
அடுத்த சுப்பர் ஜக்பொட் 2,195,754/=
அடுத்த ஜக்பொட் 1,040,360/=
2017.01.14 திகதி சனிக்கிழமை இளஞ்சிவப்பு நிற டிக்கட்டுகள்-சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை
www.dlb.lk

**வேலைவாய்ப்பு**
**உடனடியாகத் தேவை**

**அலுவலக பணிப்பெண்**

உடனே நேரில் சமுகமளிக்கவும்.

**NORTH LANKA IIT**
**TOP FLOOR, PEOPLE'S BANK BUILDING**
**STANLEY ROAD, JAFFNA.**

## வடமாகாண முதலமைச்சரின் அமைச்சின் அறிவித்தல்

**தைப்பொங்கல் திருநாளுக்கு அடுத்த நாளான பட்டிப்பொங்கல் தினத்தன்று வடமாகாணத்தில் உள்ள இறைச்சிக்கடைகள் அனைத்தையும் மூடுதல்**

தமிழர் திருநாளாக விளங்கும் தைப்பொங்கல் தினத்துக்கு மறுநாள் உழவுக்குக் கைகொடுத்த இடபங்கள் மற்றும் பசுக்களுக்கு விழா எடுக்கும் நிகழ்வாக பட்டிப் பொங்கல் விழா தொன்று தொட்டு கொண்டாடப்பட்டு வருகின்றது. பூரண நிறை உணவாகிய தூய பசும் பாலையும், இரசாயனத் தீங்கில்லாத இயற்கைப் பசளையையும், உழவுத் தொழிலுக்கு உதவிகளையும் நல்கும் கால்நடைச் செல்வங்களுக்கு விழா எடுக்கும் அதே நாளில் அவற்றை இறைச்சிக்காகக் கொல்வது முரணான செயற்பாடாக உள்ளது. இதனைக் கருத்தில் கொண்டு வடமாகாணத்தில் உள்ள அனைத்து இறைச்சிக் கடைகளும் ஆண்டுதோறும் பட்டிப்பொங்கல் தினத்தன்று மூடியிருத்தல் வேண்டும் என வடமாகாண சபையின் 2017.01.10 ஆம் திகதியன்று நடைபெற்ற 82 ஆவது அமர்வில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இத்தீர்மானத்துக்கு அமைவாக் எதிர்வரும் 2017.01.15 ஆம் திகதி பட்டிப்பொங்கல் தினத்தன்று வடமாகாணத்தில் உள்ள அனைத்து இறைச்சிக்கடைகளும் மூடப்பட வேண்டும் என அறிவிக்கப்படுகின்றது.

**திருமதி வி.கேதீஸ்வரன்,**
**செயலாளர், முதலமைச்சரின் அமைச்சு,**
**வடமாகாணம்.** 12.01.2017

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**



யாழ். பல்கலைக்கழகத்தில்
11.01.2017 அன்று நடைபெற்ற
32 ஆவது பட்டமளிப்பு விழாவில்
முது கல்வி மாணிப்பட்டத்தினைப்
பெற்றுக் கொண்ட யா/வேலணை
மத்தியகல்லூரியின் ஆசிரியரான
திருமதி
**சுபாஜினி சிவகுந்தன்**
(B.A Hons), Dip in LIS(Merit),
Dip in Edu,
M. Ed (Hons)
அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதோடு
மேலும் பல பட்டங்கள் பதவிகள் பெற்று
உயர்வடைய வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
தம்பி குடும்பத்தினர்.

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**



யாழ்.பல்கலைக்கழகத்தில்
32 ஆவது பட்டமளிப்பு விழாவில்
புவியியல்
சிறப்புக்கலைமாணி
(B.A. Hons, Geo.spe),
சட்டமாணி (LLB)
ஆகியபட்டங்களைப் பெற்ற
எமது மருமக்கள்

**நவரத்தினசிங்கம் கேதாஜினி, நவரத்தினசிங்கம் பிருந்தா**

ஆகியோரை பாராட்டி வாழ்த்துகின்றோம்.

Congratulations

வாழ்த்துவோர் : மாமாமார்
இ. குயேந்தி[illegible]
இ. நகுலேந்[illegible]

**அகவை அறுபதில்...**



**திரவியசிங்கம்**
**வரதராசன்**

(செயலாளர் - உதைபந்தாட்ட லீக், வடமராட்சி,
நிர்வாக கிராம அலுவலர் - பிரதேசசெயலகம், கரவெட்டி)

எமது வடமராட்சி உதைபந்தாட்ட லீக்கின் செயலாளராகவும் பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் செயலாளராகவும் 20 வருடங்கள் கடமையாற்றியவரும் கரவெட்டி பிரதேச செயலகத்தின் நிர்வாக கிராம அலுவலருமான திரவியசிங்கம் வரதராசன் இன்று (13.01.2017) வெள்ளிக்கிழமை கடமையில் இருந்து ஓய்வு பெறுகின்றார். அவர் சகல சௌபாக்கியங்களையும் பெற்று பெருவாழ்வு வாழ இறைவனை வேண்டி நிற்கின்றோம்.

Congratulations

நிர்வாகமும் அங்கத்துவ கழகங்களும்
வடமராட்சி உதைபந்தாட்ட லீக்,
கரவெட்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜல்லிக்கட்டு விவகாரம் மூலம் தமிழர் ஒற்றுமை வெளிப்பட்டது

## நடிகர் சிம்பு தெரிவிப்பு



ஜல்லிக்கட்டு விவகாரத்தில் தமிழர்கள் எவ்வளவு ஒற்றுமையாக இருக்கிறோம் என்பது நிரூபணமாகியுள்ளது என்று சிம்பு தெரிவித்தார்.

ஜல்லிக்கட்டுக்கு ஆதரவாக நேற்று மாலை 5 மணிக்கு ஆரம்பித்து 10 நிமிடங்கள் சிம்பு மவுனப் போராட்டம் நடத்தினார். அவருக்கு ஆத ரவாக பல்வேறு ரசிகர்கள் ஒன்று திரண்டனர். இயக்குநர் ராம், ஆதிக் ரவிச்சந்திரன், வெங் கட்பிரபு, இசையமைப்பாளர் யுவன், பிரேம்ஜி உள்ளிட்ட திரையுலக பிரபலங்களும் கலந்து கொண்டனர். மௌன விரதப் போராட்டத்தின் பின் கருத்துத் தெரிவிக்கையி லேயே சிம்பு இவ்வாறு தெரிவித்தார்.

உலகம் முழுவதும் பல ரும் வீட்டிலிருந்து வீதியில் இறங்கி 10 நிமிடங் கள் மவுனப் போராட்டம் நடத்தியுள்ளனர். இதுவே மிகப் பெரிய வெற்றியாக பார்க்கிறேன். தமிழர்கள் எவ்வளவு ஒற்றுமையாக இருக்கிறோம் என்பது நிரூபணமாகியுள்ளது. இதை ஒரு போராட்டமாக இன்றி எச்சரிக்கையாகத்தான் பார்க்கிறேன். ஜல்லிக்கட்டுவிடயத்தில் நல்ல முடிவு கிடைக்கும்எனநம்புகிறேன். இது ஒரு ஆரம்பம் தான். நல்ல முடிவு வர வில்லை என்றால் அடுத்த என்ன என்பதை விரை வில் அறிவிப் பேன் என அவர் மேலும் தெரிவித்தார். (ம)

## சந்தை நிலவரம்

| | மருதனார்மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 100 | 50 | 60 | 60 | 60 | 40 | 60 |
| கத்தரி | 40 | 30 | 50 | 40 | 30–40 | 30 | 40 |
| கரட் | 50 | 80 | 60–120 | 180 | 40–100 | 100 | 160 |
| மரவள்ளி | 70 | 70 | 60 | 60 | 60 | 50 | 50 |
| பயிற்றை | 180 | 140 | 200 | 160 | 140–160 | 100 | 80 |
| பாகல் | 250 | 250 | 280 | 240 | 180–200 | 160 | 150 |
| கருணைக்கிழங்கு | 50 | 60 | 60 | 60 | 40–50 | 80 | 80 |
| பெ.வெங்காயம் | 100 | 100 | 100 | 100 | 80 | 100 | 80 |
| சி.வெங்காயம் | 70 | 80 | 80 | 90 | 70 | 120 | 160 |
| பூசணி | 50 | 60 | 60 | 60 | 60 | 80 | 80 |
| தக்காளி | 180 | 160 | 170 | 140 | 180 | 160 | 200 |
| வாழைக்காய் | 60 | 50 | 50 | 50 | 50 | 80 | 40 |
| கீரை | 15 | 30 | 30 | 15 | 20 | 40 | 20 |
| பொன்னாங்காணி | 20 | 40 | 30 | 35 | 20 | 50 | 10 |
| பச்சை மிளகாய் | 160 | 150 | 200 | 160 | 160–180 | 160 | 500 |
| புடோல் | 80 | 60 | 80 | 80 | 60–80 | 60 | 100 |
| கோவா | 30 | 80 | 30 | 30 | 15–20 | 30 | 140 |
| வெண்டி | 100 | 70 | 80 | 120 | 80 | 60 | 80 |
| போஞ்சி | 100 | 80 | 100 | 100 | 100–120 | 100 | 120 |
| லீக்ஸ் | 80 | 80 | 120 | 100 | 60–80 | 100 | 150 |
| தேங்காய் | 40 | 50 | 50 | 40–50 | 30–40 | 40 | 30 |
| உருளைக்கிழங்கு | 120 | 110 | 110 | 100 | 100–120 | 120 | 120 |
| தேசிக்காய் | 250 | 250 | 250 | 250 | 160–200 | 400 | 280 |
| வல்லாரை | 20 | 20 | 20 | 15 | 10 | 30 | 10 |
| கறிமிளகாய் | 160 | 160 | 200 | 240 | 140–160 | 160 | 200 |
| இராசவள்ளி | 250 | 200 | 250 | 180 | 260 | 300 | 120 |
| முருங்கைக்காய் | – | 600 | – | – | 400–600 | – | 350 |

| | யாழ்ப்பாணம் | மன்னார் | கிளிநொச்சி | கொடிகாமம் | பருத்தித்துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 600 | 800 | 700 | 800 | 800 | – |
| நண்டு | 250 | 300 | 300 | 400 | 300 | 200 | 500 |
| கணவாய் | 600 | 500 | 600 | 500 | 600 | 400 | – |
| பாரை | 550 | 500 | 600 | 650 | 700 | 500 | 350–370 |
| சுறா | 500 | 400 | 700 | 800 | 800 | – | – |
| சீலா | 300 | 300 | 400 | 800 | 400 | 500 | 350 |
| விளை | 650 | 500 | 300 | 800 | 300 | 500 | 370 |
| முரல் | 300 | 300 | 300 | 400 | 300 | 300 | – |
| கும்பிளா | 400 | 300 | 300 | 450 | 400 | 500 | 300 |
| கிளாக்கன் | 800 | 800 | 400 | – | 300 | – | – |
| ஓரா | 400 | 300 | 400 | – | 400 | 300 | – |
| திரளி | 300 | 200 | 200 | 200 | 160 | 200 | 250 |
| நகரை | 250 | 200 | – | 300 | 300 | – | 250 |
| சூடை | 150 | 100 | 100 | 200 | 200 | 150 | – |
| ஒட்டி | 300 | 150 | 150 | 400 | 200 | 200 | – |
| திருக்கை | 150 | 250 | 200 | 350 | 300 | 200 | 120 |
| மதனம் | 150 | 200 | 130 | – | 250 | – | 200 |
| கொய் | 100 | 100 | 40 | 100 | 100 | 50 | – |
| பாலை | 400 | 100 | 200 | 400 | 400 | 300 | – |
| வாளை | 100 | 150 | 150 | – | 200 | 200 | 200 |

## வரப்போவது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கணேசன் தெரிவித்தார். அமைச்சர் மனோ கணேசன் தனது சமூக வலைத் தளத்திலேயே இவ்வாறு பதிவிட்டுள்ளார்.

தான் கொண்டுவர இருந்த தீர்வுத் திட்டமே தற்போது புதிய அரசமைப்பின் ஊடாகக் கொண்டு வரப்படவுள்ளதாக, கொழும்பில் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் முன்னாள் ஜனாதி பதி சந்திரிகா தெரிவித்திருந்தார். தனது தீர்வுத் திட்டத்தை ஐக்கிய தேசியக் கட்சியின் தலை வர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான குழுவினர் அன்று எதிர்த்தாகவும், அதனை இன்று அவர்கள் ஏற்றுக் கொண்டுள்ளதாக வும் அவர் குறிப்பிட் டிருந்தார்.

இந்த நிலையில் அமைச்சர் மனோ கணேசன், சந்திரிகா சொல்வது தவறு. அவரது தீர்வுத் திட்டம் கொண்டுவரப்பட்டால் சந்தோசம் தான். ஆனால் அது வல்ல. தனது அதே தீர்வே, இன்று கொண்டு வரப்படுகிறது என்று சொன்ன தன் மூலம் சந்திரிகா யதார்த்தத்திலி ருந்து எவ்வளவு தூரம் விலகி இருக் கிறார் என்று தெரிகிறது என்று பதிவிட்டுள்ளார்.

அத்துடன், சந்திரிகா சொல்வது மெய். அன்று அவ ரது தீர்வை எதிர்த்து ரணில் உட்பட்டோர் தவறிழைத்தார்கள். ஆனால், இது ஒன்றும் தமிழருக்குப் புதுச் செய்தி இல்லை யம்மா!, தன் தீர்வுத் திட்டத்தை கொண்டு வர ஐக்கிய தேசியக் கட்சி மட்டுமல்ல, சம்பந்தன் தலைமையிலான கூட்டமைப் பும் அன்று ஒத்து ழைக்கவில்லை என்று சந்திரிகா என்னிடம் கூறினார் என்றும் மனோ கணேசன் பதி விட்டுள்ளார். (த-5)



## 85 ஆவது பிறந்த தின நினைவும் பதினோராம் ஆண்டு நினைவஞ்சலியும்

அமரர்
### முருகேசு தாமோதரம்பிள்ளை
(ஓய்வு பெற்ற ஆசிரியர்)

மலர்வு
13 . 01 . 1932



உதிர்வு
16 . 12 . 2005

(திதி :- அபரபக்க பிரதமை-13.01.2017)

பண்பின் சிகரமே ! பாசத்தின் இருப்பிடமே !
ஆண்டுகள் பதினொன்று சென்றாலும்
எங்கள் கண்ணீரோ வற்றவில்லை !
உங்கள் அன்பிற்கும், பாசத்திற்கும்
ஏங்கித் தவிக்கின்றோம்,
என்றென்றும் உங்கள் நினைவுகளைச்
சுமத்து நிற்கும் நாம்
உங்கள் ஆத்ம சாந்திக்காய் பிரார்த்திக்கின்றோம்.
சாந்தி ! சாந்தி ! சாந்தி !

கோகுலம்,
சங்கத்தானை,
சாவகச்சேரி.

அன்பு மனைவி, மக்கள் ,மருமக்கள்,பேரப்பிள்ளைகள்
மற்றும் உறவினர்கள்.

## மரண அறிவித்தல்

### கனகரத்தினம் கனகசிங்கம்



பிறப்பு 19.09.1939 இறப்பு 12.01.2017

யாழ்.மீசாலை கிழக்கைப் பிறப்பிடமாகவும், கிளிநொச்சி, உருத்திரபுரம் 7 ஆம் வாய்க்காலை வசிப்பிட மாகவும் கொண்ட கனகரத்தினம் கனகசிங்கம் 12.01.2017 வியாழக்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி கனகரத்தினம் தம்பதிகளின் செல்வப்புதல்வரும் காலஞ் சென்றவர்களான அம்பலம் -முத்துப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும் சரஸ்வதி அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற பொன்னம்மாவின் பெறாமகனும் சத்தியசீலன் (உதவிக்கல்விப் பணிப்பாளர், வலயக்கல்வி திணைக்களம்-வவுனியாவடக்கு), சத்தியவதனி (சாவகச்சேரி), சத்தியசிவம் (கிளை முகாமையாளர் கரைச்சி தெற்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்-கிளிநொச்சி)காலஞ்சென்ற சத்தியமூர்த்தி, சத்தியவாணி (பிரித்தானியா),சத்தியசோதி(பிரித்தானியா),சத்தியரூபன் (பிரித்தானியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ் சென்ற லம்போதரம்(கணக்காளர்),கனகநாயகி(ஆசிரியை), காலஞ்சென்ற கனகபூரணி(ஆசிரியை)மற்றும் கனகபூபதி, க.சண்முகநாதன்(ஓய்வு பெற்ற பொலிஸ் அதிகாரி), செல்வி கனகசோதி(ஓய்வுபெற்ற ஆசிரியை, இந்துக்கல்லூரி-சாவகச்சேரி) ஆகியோரின் அன்புச் சகோதரனும்

ச. செல்வராணி (விரிவுரையாளர்-வவுனியா கல்வியற்கல்லூரி),த.தில்லைநாதன் (City coll spot உரிமையாளர்-சாவகச்சேரி),ச.கௌரிமலர்(கோப்பாய்),ச.கோகுலரமணன்(Easy Shipping Limited-உரிமையாளர்-லண்டன்),ச.வாசுகி(லண்டன்),ச.தயாளினி(லண்டன்)ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்றவர்களான ல.கமலராணி,பொன்னம்பலம்(ஓய்வு பெற்ற அதிபர்),நடராசா மற்றும் ச.பற்றிமா ஆகியோரின் மைத்துனரும், லௌசிகா, கிரிசாந், அஞ்சலா, அம்சனா, அக்ஷயா, அபிநயா, அகழினியன், அகழின்பன், ஜனகன்,ஜதுஷன்,அபினா,அபினிதா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.01.2017) வெள்ளிக்கிழமை ந.ப 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பி.ப 3.00 மணியளவில் 8 ஆம் வாய்க்கால் கிளிநொச்சி , உருத்திரபுரம் இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

7 ஆம் வாய்க்கால்,
உருத்திரபுரம்,
கிளிநொச்சி.

தகவல்:
குடும்பத்தினர்
077 3021530

## மரண அறிவித்தல்

### திருமதி இரத்தினம் துரைச்சாமி

(ஓய்வுபெற்ற கால்நடை உத்தியோகத்தர்,
விவசாயப் பயிற்சிப் பாடசாலை - திருநெல்வேலி)



வராம்பற்றை கோப்பாய் வடக்கைப் பிறப்பிடமாகவும் நீர்வேலி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இரத்தினம் துரைச்சாமி நேற்று (12.01.2017) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - கண்மணி தம்பதியரின் மகளும் மயில்வாகனம் துரைச்சாமியின் அன்பு மனைவியும் நாகம்மா, நடராசா, பரமேஸ்வரி, பாலசுப்பிரமணியம் காலஞ்சென்றவரான கமலேஸ்வரி மற்றும் செல்வரஞ்சினி, காலஞ்சென்ற குகதாசன் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் காலஞ்சென்றவர்களான இராசையா, இராசரத்தினம் மற்றும் தனலட்சுமி, லலிதா, வனிதா, அருமைத்துரை, யோகேஸ்வரன் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.01.2017) வெள்ளிக்கிழமை பி.ப 3 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் நீர்வேலி தெற்கு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வில்லுமதவடி,
நீர்வேலி தெற்கு.

தகவல்: க. பாலசுப்பிரமணியம்
(சகோதரன்)
077 911 6158


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT



இந்திய கிரிக்கெட் அணியின் ஜேர்சியில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இதன்படி அந்த அணி நாளை மறுதினம் நடைபெறவுள்ள இங்கிலாந்துக்கு எதிரான முதலாவது ஒருநாள் ஆட்டத்தில் புதிய ஜேர்சியுடன் களமிறங்கவுள்ளது. (ம)


# அம்லா 100

தென்னாபிரிக்க அணியின் நட்சத்திரத் துடுப்பாட்ட வீரரான அம்லா, நேற்று தனது 100 ஆவது ஆட்டத்தில் களமிறங்கினார்.

இலங்கை–தென்னாபிரிக்க அணிகளுக்கு இடையிலான மூன்றாவதும் இறுதியானதுமான ஆட்டம் நேற்று ஆரம்பமானது. இந்த ஆட்டத்தில் களமிறங்கியதன் மூலமே குறித்த மைல்கல்லை அம்லா அடைந்தார். 100 ஆவது ஆட்டத்தில் விளையாடிய 8 ஆவது தென்னாபிரிக்க வீரராக அவர் தன்னைப் பதிவுசெய்தார். இதற்கு முன்னர் கலிஸ், பவுச்சர், சிமித், பொலக், வில்லியர்ஸ், கேரி கிறிஸ்டன், நிட்னி ஆகியோர் குறித்த மைல்கல்லை அடைந்தனர். இவர்களில் வில்லியர்ஸ் மட்டும் தொடர்ந்தும் தற்போது விளையாடி வருகிறார்.

தற்போது கிரிக்கெட் ஆட்டம் வேகமாக அதிக மாற்றங்களைக் கண்டு வருகிறது. எனவே 100 டெஸ்ட் ஆட்டங்களில் விளையாடுவது என்பது எளிதான காரியம் அல்ல. அநேகமாக தென்னாபிரிக்க அணியின் சார்பில் 100 ஆவது டெஸ்ட் ஆட்டத்தில் விளையாடும் கடைசி வீரராக அம்லா தான் இருப்பார் என்று நான் கருதுகிறேன் என்று அணித் தலைவர் பிளாசிஸ் அம்லாவைப் பாராட்டினார். (ம)





# துடுப்பாட்டமே தோல்விக்குக் காரணமாகியது

## சனத் கொதிப்பு

தென்னாபிரிக்க அணிக்கு எதிரான டெஸ்ட் தோல்விகளுக்குத் துடுப்பாட்ட வரிசையில் ஏற்பட்ட தொடர் தடுமாற்றமே காரணமாகியது எனத் தெரிவித்தார் இலங்கை அணியின் தலைமைத் தேர்வாளரான சனத் ஜெயசூரிய.

மூன்று ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடருக்காக தென்னாபிரிக்காவுக்கு சுற்றுப் பயணம் செய்து விளையாடிவருகிறது இலங்கை அணி. இரண்டு ஆட்டங்கள் முடிந்துள்ளன. இரண்டிலும் இலங்கை படுதோல்வியடைந்தது. மூன்றாவது ஆட்டம் நேற்று ஆரம்பமானது. இந்த நிலையில் தொடரைப் பறிகொர்டுத்தமைக்கு துடுப்பாட்ட வரிசையைக் காரணமாகக் குறிப்பிட்டார் சனத்.

தென்னாபிரிக்க அணிகளுக்கு எதிரான பெறுபேறுகளை வைத்துப் பார்த்தால் துடுப்பாட்ட வரிசையின் மட்டிலே நான் அதிருப்தியும் கவலையும் அடைந்துள்ளேன். பெரும்பாலான வீரர்கள் முதலாவது ஆட்டத்தில் செய்த தவறையே இரண்டாவது ஆட்டத்திலும் செய்தார்கள். ஒரு வீரராவது நிதானமாக விளையாடியிருக்க வேண்டும். ஒருவர்கூட அவ்வாறு விளையாடவில்லை. தோல்விக்கு பந்து வீச்சாளர்களைக் குறைகூறமுடியாது. அவர்கள் காத்திரமான பங்களிப்பை வழங்கினர். துடுப்பாட்ட வரிசையே தோல்விக்குக் காரணமாகியது என சனத் மேலும் தெரிவித்தார். (ம)

# தேசியத்தைப் புறக்கணித்தார் டேவிட் வீஸ்

தென்னாபிரிக்க அணியின் சகல துறை வீரரான டேவிட் வீஸ், தேசியத்தைப் புறக்கணித்து முழுநேர வீரராக இங்கிலாந்தின் கழகமொன்றுக்காக ஒப்பந்தமாகினார். தென்னாபிரிக்க அணியின் வேகப்பந்து வீச்சாளரான அப்பொட், துடுப்பாட்ட வீரரான ரொஸ்சொவ் ஆகிய இருவரும் ஏற்கனவே தமது தேசிய அணியை விட்டுச் சென்று இங்கிலாந்தின் ஹாம்சையர் அணிக்காக ஒப்பந்தமாகினர். இந்த வரிசையில் தற்போது வீஸும் இணைந்தார். அவர் சசெக்ஸ் அணிக்காக ஒப்பந்தமாகியுள்ளார் என்று தகவல்கள் வெளியாகின. (ம)

PCB CRICKET AUSTRALIA

# ஆஸ்திரேலியாவை சமாளிக்குமா பாக்.

ஆஸ்திரேலியா–பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான ஒருநாள் தொடரின் முதலாவது ஆட்டம் இன்று நடைபெறவுள்ளது. பிரிஸ்பெய்ன் மைதானத்தில் இந்த ஆட்டம் நடைபெறவுள்ளது.

இந்த இரு அணிகளுக்கும் இடையில் முன்னதாக நடைபெற்று முடிந்த டெஸ்ட் தொடரை 3:0 என்ற அடிப்படையில் ஆஸ்திரேலியா கைப்பற்றியது. இதனால் ஒருநாள் தொடரில் பாகிஸ்தான் பெரும் போராட்டம் காட்டவேண்டிய கட்டாயம் உள்ளது. பாகிஸ்தான் அணியின் வேகப்பந்து வீச்சாளரான இர்பான் தனது தாயார் உயிரிழந்தமை காரணமாக தொடரில் இருந்து விலகியுள்ளார். அதேபோல் துடுப்பாட்ட வீரரும், இலக்குக் காப்பாளருமான அகமட், தனது தாயார் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டதைத் தொடர்ந்து தொடரில் இருந்து விலகினார். இவர்கள் இருவரினதும் விலகல் பாகிஸ்தானுக்குப் பின்னடைவு என்று கருதப்படுகிறது. (ம)




# மூவகை அணிகளுக்கும் தலைவரானதை இன்றுவரை என்னால் நம்பமுடியவில்லை

## இப்படித் தெரிவித்தார் கோக்லி

டெஸ்ட், ஒருநாள், ரி-20 என்று மூன்று வகை அணிகளுக்கும் தலைவராக நியமிக்கப்பட்டதை இன்றுவரை தன்னால் நம்ப முடியவில்லை என்று தெரிவித்தார் இந்திய அணியின் தலைவரான கோக்லி.

புனேயில் நேற்றுமுன்தினம் நடந்த நிகழ்வு ஒன்றில் கருத்துத் தெரிவிக்கையில் கோக்லி இவ்வாறு தெரிவித்தார்.

மூன்று வகை அணிகளுக்கும் தலைவராக நியமிக்கப்பட்டிருப்பதை உண்மையிலேயே நம்ப முடியவில்லை. எனது வாழ்க்கையில் இப்படியொரு நாள் வரும் என்று ஒரு போதும் நான் நினைத்ததில்லை. இந்திய அணிக்குள் நுழைந்த போது, சிறப்பாக விளையாடி மேன்மேலும் வாய்ப்புகளை பெற வேண்டும், தொடர்ந்து நிலையான ஆட்டத்தை வெளிப்படுத்தி, அணியின் வெற்றியில் முக்கிய பங்களிப்பை அளிக்க வேண்டும் என்பது மட்டுமே நோக்கமாக இருந்தது. இன்று வரை அந்தப் பணியை சிறப்பாகச் செய்து வருகிறேன் என்று எண்ணுகிறேன் என கோக்லி மேலும் தெரிவித்தார். (ம)

# பங்களாதேஷ் நிதானமான ஆரம்பம்; மழையும் குறுக்கீடு

நியூசிலாந்துக்கு எதிரான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தின் முதல் நாளான நேற்று நிதானமான ஆரம்பம் கண்டது பங்களாதேஷ்.

தொடரில் இரண்டு ஆட்டங்கள். எனவே இந்த ஆட்டத்தில் வெற்றிபெறும் அணி கிண்ணத்தை இழக்க வாய்ப்பில்லை என்பதால் இரு அணிகளும் பெரும் போராட்டத்தை வெளிப்படுத்தும் என்று பரவலாக எதிர்பார்க்கப்படுகிறது. மூன்று ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடரையும், மூன்று ஆட்டங்களைக் கொண்ட ரி-20 தொடரையும் நியூசிலாந்து முழுமையாகக் கைப்பற்றியிருந்தது. இதனால் டெஸ்ட் தொடரிலாவது குறைந்த பட்சம் ஒரு வெற்றியையேனும் பதிவுசெய்ய வேண்டிய தர்மசங்கடமான நிலைக்கு பங்களாதேஷ் தள்ளப்பட்டுள்ளது.



நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற நியூசிலாந்து முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தது. பங்களாதேஷின் ஆரம்ப வீரர்களாக இக்பால் மற்றும் கையிஸ். ஓர் ஓட்டத்துடன் ஆட்டமிழந்தார் கையிஸ். இக்பாலுடன் இணைந்து நிதானத்தை வெளிப்படுத்தினார் கக்கியூ. மற்றொரு இலக்கை இழக்காமல் 50 ஓட்டங்களை பங்களாதேஷ் தொட்டது. அரைச்சதம் கடந்தார் இக்பால். அவர் 56 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். 26 ஓட்டங்களுடன் ஏமாற்றினார் முகமதுல்லா. கக்கியூ தனது பங்குக்கு அரைச்சதத்தை நிறைவு செய்தார். மழை குறுக்கிட பங்களாதேஷ் 154-3 என்ற நிலையில் இருந்தபோது நாள் முடிவுக்கு வந்தது.

கக்கியூ 64 ஓட்டங்களுடனும் சகிப் அல் ஹசன் 5 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஜன. 13

**யங்ஸ்ரார் வி.க.**
**கால்பந்தாட்டம்**

வவுனியா வைரவப் புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தின் 22ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு சாந்தன், யூட், கயன் ஞாபகார்த்த கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 6.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் லயன்ஸ் அணியை எதிர்த்து சுப்பர் ஸ்ரார் அணி மோதவுள்ளது.

**எவ்.ஏ. கிண்ணம்**
(யாழ். லீக்)

இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனம் தேசிய மட்டத்தில் எவ்.ஏ. கிண்ணத் தொடரை நடத்தி வருகிறது. யாழ். லீக்கில் பதிவுசெய்த கழகங்களுக்கு இடையிலான ஆட்டங்கள் அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இன்று பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறும் அரையிறுதி ஆட்டமொன்றில் பாசையூர் சென். அன்ரனிஸ் அணியை எதிர்த்து நாவாந்துறை கலைவாணி அணி மோதவுள்ளது. (ம-23)



# மரதன், சைக்கிளோட்டம்

யாழ்ப்பாணம், ஜன. 13

தமிழ்நாட்டின் முன்னாள் முதலமைச்சர் எம்.ஜி.ஆரின் 100ஆவது பிறந்த நாளை முன்னிட்டு பண்டத்தரிப்பு பிரதேச எம்.ஜி.ஆர். மன்றம் நடத்தும் மரதன் ஓட்டப்போட்டி மற்றும் வட மாகாண ரீதியாக நடத்தும் 60 கிலோ மீற்றர் சைக்கிள் ஓட்டப்போட்டி என்பவை நாளைமறுதினம் இடம்பெறவுள்ளன. மேற்படி போட்டியில் பங்குபற்ற விரும்பும் வீரர்கள் தலைமைக் கழகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ம-23)

# கோல்டன் பிரதர்ஸ் அசத்தல் ஆட்டம்

யாழ்ப்பாணம், ஜன. 13

வவுனியா வைரவப் புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தின் 22ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் கோல்டன் பிரதர்ஸ் அணி வெற்றிபெற்றது.

சாந்தன், யூட், கயன் ஞாபகார்த்த கிண்ணத்துக்காகவே குறித்த தொடர் நடத்தப்படுகிறது. யங்ஸ்ராரின் மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் அல் மதீனா அணியை எதிர்த்து கோல்டன் பிரதர்ஸ் அணி மோதியது. இதில் கோல்டன் பிரதர்ஸ் அணி 5:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)



# அக்ரமுக்குப் பிடியாணை

வழக்கு ஒன்றில் நீதிமன்றில் முன்னிலையாகாததை அடுத்து வசிம் அக்ரமுக்கு எதிராக பிடியாணை பிறப்பிக்கப்பட்டது.

கடந்த ஓகஸ்ட் மாதம் வசிம் அக்ரம் சென்ற கார் ஓய்வு பெற்ற ராணுவ அதிகாரி ஒருவர் மீது மோதியது. இராணுவ அதகாரி காயமடைந்தார். இந்த வழக்கு கராச்சி நீதிமன்றில் இடம்பெற்று வருகிறது. ஒரு முறையேனும் அக்ரம் மன்றில் முன்னிலையாகவில்லை. இதனையடுத்து அவருக்கு எதிராக பிடியாணையைப் பிறப்பித்தது கராச்சி மன்று.

வசிம் அக்ரம் தற்போது குடும்பத்துடன் ஆஸ்திரேலியாவில் உள்ளார். ஆஸ்திரேலியா - பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான தொடரைப் பார்ப்பதற்காக அவர் அங்கு சென்றுள்ளார் என்று பாகிஸ்தான் ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. (ம)



# மகாஜனா, ஹென்றிஸ் அரையிறுதிக்குத் தகுதி

யாழ்ப்பாணம், ஜன. 13

யாழ்ப்பாணம் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கம் நடத்தும் 20 வயதுப் பிரிவினருக்கான கால்பந்தாட்டத் தொடரில் மகாஜனக் கல்லூரி, இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி ஆகியவை அரையிறுதிக்குத் தகுதி பெற்றன.

யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரியில் காலிறுதியாட்டங்கள் நேற்று நடைபெற்றன. முதலாவது காலிறுதியில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து மகாஜனக் கல்லூரி அணி மோதியது. இதில் மகாஜனக் கல்லூரி அணி 5:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

தொடர்ந்து இடம்பெற்ற இரண்டாவது காலிறுதி ஆட்டத்தில் சென். ஹென்றிஸ் கல்லூரி அணியை எதிர்த்து தேவரையாளி இந்துக் கல்லூரி மோதியது. இதில் இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி அணி 4:3 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதிக்குத் தகுதி பெற்றது. (ம-23)

# தைத்திருநாளை முன்னிட்டு வீதியோட்டம்

யாழ்ப்பாணம், ஜன. 13

கிளிநொச்சியில் தைத்திருநாளை முன்னிட்டு வீதியோட்டம் நேற்று இடம்பெற்றது. ஆண்கள் பிரிவில் முதலாம் இடத்தை இ.அனுஜனும் பெண்கள் பிரிவில் முதலாம் இடத்தை தே.டென்சிகாவும் பெற்றனர்.

ஆண்களுக்கான வீதியோட்டம் இயக்கச்சிச் சந்தியில் காலை 6.30 மணியளவில் ஆரம்பமானது. பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் சுதாகரன் கொடி அசைத்து போட்டியை ஆரம்பித்து வைத்தார். பெண்களுக்கான வீதியோட்டப் போட்டி தட்டுவன் கொட்டிப் பகுதியில் ஆரம்பமானது. இதனைப் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக உதவிப் பிரதேச செய லாளர் சதீஸ்கரன் ஆரம்பித்து வைத்தார். போட்டிகள் யாவும் கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய முன்றிலில் நிறைவடைந்தன.

தொடர்ந்து கந்தசுவாமி ஆலய முன்றிலில் பரிசளிப்பு நிகழ்வு கிளிநொச்சி மாவட்ட இளைஞர் திறன் விருத்திக் கழகத்தின் செயலாளர் புருசோத்தமன் தலைமையில் இடம்பெற்றது. ஆண்கள் பிரிவில் முதலாம் இடத்தை இ.அனுஜனும், இரண்டாம் இடத்தை பா.விதுசனும், மூன்றாம் இடத்தை தே.அன்ரனிடெல்மனும் பெற்றுக்கொண்டனர்.

பெண்கள் பிரிவில் முதலாம் இடத்தை தே.டென்சிகாவும், இரண்டாம் இடத்தை இ.சுருதிகாவும், மூன்றாம் இடத்தை வ.அனுஜாவும் தமதாக்கினர். இரு பிரிவுகளிலும் முதல் இடங்களைப் பெற்றவர்களுக்கு துவிச்சக்கர வண்டிகள் பரிசாக வழங்கப்பட்டன. (ம-6)



# றெயின்போ வென்றது

யாழ்ப்பாணம், ஜன. 13

பாசையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் றெயின்போ அணி வெற்றிபெற்றது.

சென். அன்ரனிஸின் மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் ரெயின்போ அணியை எதிர்த்து வீனஸ் அணி மோதியது. இதில் றெயின்போ அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



செவில்லா அணியுடனான இன்றைய ஆட்டத்துக்காக நேற்று கடும் பயிற்சியில் ஈடுபட்டது ரியல் மட்ரிட் அணி. அணியின் தலைவர் ராமோஸ், நட்சத்திர வீரர் ரொனால்டோ ஆகியோரும் பயிற்சி முகாமில் கலந்து கொண்டனர். (ம)

# தடுமாறி மீண்டது தென்னாபிரிக்கா

இலங்கைக்கு எதிரான மூன்றாவதும் இறுதியானதுமான டெஸ்ட் ஆட்டத்தின் முதல் செசனில் சிறிது தடுமாற்றத்தை வெளிப்படுத்திய போதிலும் அதிலிருந்து மீண்டு, மீண்டும் வலுப்பெற்றது தென்னாபிரிக்கா.



முடிவடைந்த முதல் இரு ஆட்டங்களிலும் தென்னாபிரிக்காவே வெற்றிபெற்றது. இதனால் இந்த ஆட்டத்தின் முடிவு, கிண்ணத்தைத் தீர்மானிக்கும் ஒன்றாக அமையப்போவதில்லை. ஆனால் 0:3 என்று வழித்துத் துடைக்கப்படாமல் குறைந்த பட்சம் 1:2 என்றாவது தொடரை முடிக்க இலங்கை முனைப்புக் காட்டவேண்டும். தென்னாபிரிக்கா அதன் சொந்த மண்ணில் வைத்து 3:0 என்ற அடிப்படையில் கிண்ணத்தைக் கைப்பற்றவே எத்தனிக்கும். இதனால் இந்த ஆட்டம் போராட்டம் வாய்ந்த ஒன்றாக அமையும் என்று கருதப்படுகிறது.
நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற தென்னாபிரிக்கா முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. ஆரம்ப வீரர்களாக குக் மற்றும் எல்கர் இருவரும் களமிறங்கினர். 45 ஓட்டங்கள்வரை இருவரும் தாக்குப் பிடித்தனர். ஸ்ரீபன் குக் 10 ஓட்டங்களுடன் மத்தியூஸின் பந்துவீச்சில் சிக்கினார். அடுத்த பந்துப் பரிமாற்றத்தில் எல்கரும் பவிலியன் திரும்பினார். 45 ஓட்டங்களில் ஆரம்ப வீரர்களை இழந்து தடுமாறியது தென்னாபிரிக்கா. அம்லா, டுமினி இணைந்து தாக்குப்பிடித்தனர். முதல் பகுதியின் முடிவில் 79-2 என்றிருந் தது தென்னாபிரிக்கா. (ம)

# மூவகைத் தொடருக்காக தீவுகளுக்குச் செல்கிறது பாகிஸ்தான்

டெஸ்ட், ஒருநாள், ரி-20 என்று மூன்று வகைத் தொடர்களிலும் விளையாடுவதற்காக மேற்கிந்தியத் தீவுகளுக்கு செல்லவுள்ளது பாகிஸ்தான் அணி. இரண்டு ரி-20, மூன்று ஒருநாள், மூன்று டெஸ்ட் ஆட்டங்கள் கொண்ட தொடர்களுக்காக இரு தரப்புக்கும் இடையில் இணக்கம் ஏற்பட்டது. முதலாவதாக ரி-20 தொடர் நடைபெறவுள்ளது. இதன்படி முதலாவது ரி-20 ஆட்டம் மார்ச் 31 ஆம் திகதியும், இரண்டாவது ஆட்டம் ஏப்ரல் 2 ஆம் திகதியும் நடைபெறவுள்ளன.
ஏப்ரல் 4 ஆம் திகதியிலிருந்து ஏப்ரல் 12 ஆம் திகதிக்குள் மூன்று ஒருநாள் ஆட்டங்கள் நடைபெறும் என்று தெரிவிக்கப்படுகிறது. எனினும் திகதிகள் உறுதிப்படுத்தப்படவில்லை. டெஸ்ட் தொடர்களில் முதலாவது ஆட்டம் ஏப்ரல் 22 ஆம் திகதியும், இரண்டாவது ஆட்டம் ஏப்ரல் 30 ஆம் திகதியும், மூன்றாவது ஆட்டம் மே 10 ஆம் திகதியும் ஆரம்பமாகி நடைபெறவுள்ளன. (ம)

# அத்லெட்ரிக் கழகத்தை வீழ்த்தியது பார்சிலோனா

லா லிகா தொடரில் நேற்றுமுன் தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் அத்லெட்ரிக் கழகத்தை வீழ்த்தியது பார்சிலோனா.
ஆட்டத்தின் ஆரம்பம் அத்லெட்ரிக்குக்குச் சாதகமாகவே அமைந்தது. 19 ஆவது நிமிடத்தில் அத்லெட்ரிக்கின் முதல் கோல் பதிவானது. 35 ஆவது நிமிடத்தில் பதிலடி கொடுத்து சமன் செய்தார் சுவாரஸ். 43 ஆவது நிமிடத்தில் நெய்மர் பிறிதொரு கோலைப் பதிவுசெய்ய முதல் பாதியின் முடிவில் பார்சிலோனா 2:1 என்று முன்னிலை வகித்தது.
இரண்டாம் பாதியில் அதாவது ஆட்டத்தின் 58 ஆவது நிமிடத்தில் பார்சிலோனாவின் மூன்றாவது கோலைப் பதிவுசெய்தார் மெஸ்ஸி. வேறெந்த மாற்றங்களும் ஏற்படவில்லை.
முடிவில் 3:1 என்ற கோல் கணக்கில் பார் சிலோனா வெற்றி பெற்றது. (ம)




# அரையிறுதியில் சானியா இணை



சிட்னி ரென்னிஸ் தொடரில் இந்தியாவின் சானியா மிர்சா, செக்குடியரசின் பார்போரா இணை அரையிறுதிக்குத் தகுதி பெற்றது. நேற்றுமுன்தினம் இடம்பெற்ற காலிறுதி ஆட்டமொன்றில் சானியா - பார்போரா இணையை எதிர்த்து அமெரிக்காவின் மெடிசன், ஆஸ்திரேலியாவின் ரோடினோவா இணை மோதியது. மூன்று செற்களைக் கொண்ட ஆட்டத்தின் முதல் செற்றை 6:3 என்ற புள்ளிகளின் அடிப்படையில் சானியா பார்போரா இணை வென்றது. அந்த அணி இரண்டாவது செற்றையும் 6:4 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றியதை அடுத்து நேர் செற் வெற்றியுடன் அரையிறுதிக்குத் தகுதி பெற்றது. (ம)

**பொமனேரியன் நாய்க்குட்டி விற்பனைக்குண்டு**
2 மாதம் நிரம்பிய நல்லின பொமனேரியன் ஆண், பெண் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு.
**தொடர்பு - 075 040 5734**

**பணிநிலை வேண்டுகை**
அனுபவமுள்ள
Tipper, Lorry Driver
தேவை. (Heavy Vehicle Licence)
சுயவிவரக் கோவையுடன் அலுவலகத்திற்கு சமுகமளிக்கவும்.
**தொடர்பு :**
SMART KINGS(PVT) LTD.
(NO: 12, POINT PETRO ROAD,
JAFFNA. 021 454 6699)

# யாழ். மத்தி, சென். பற்றிக்ஸ் அரையிறுதிக்குத் தகுதி

யாழ்ப்பாணம், ஜன. 13
யாழ்ப்பாணம் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கம் நடத்தும் 20 வயதுப் பிரி வினருக்கான கால்பந் தாட்டத் தொடரில் யாழ்.மத்திய கல்லூரி அணி, சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி ஆகிய இரண்டும் அரையிறுதி ஆட்டத்துக்குத் தகுதி பெற்றன.
யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரியில் காலிறுதியாட்டங்கள் நேற்று நடைபெற்றன. மூன்றாவது காலிறுதியில் யாழ். மத்திய கல்லூரி அணியை எதிர்த்து மன்னார் சென். லூட்சியா மகா வித்தியாலய அணி



மோதியது. நிர்ணயிக்கப் பட்ட நிமிடங்களின் நிறைவில் இரு அணிகளும் கோல்கள் எதனையும் பதிவு செய்யாததை அடுத்து சமநிலைத் தவிர்ப்பில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. 3:2 என்ற கோல் கணக்கில் யாழ். மத்திய கல்லூரி அணி வெற்றி பெற்றது.
நான்காவது காலிறுதி ஆட்டத்தில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து வேலணை மத்திய கல்லூரி அணி மோதியது. 3:0 என்ற கோல் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி வென்றது. (ம-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 13.01.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.